உ

சிவமயம்.

விசுவேசுவரர் துணை.

மாந்தைப்பள்

இது

[illegible]ல்லூர் சைவ வேளாளர்குல திலகராகிய வித்வசிரோமணி

ஸ்ரீ-ல-ஸ்ரீ சிதம்பரதாண்டவ மதுரகவிராயர்

அவர்கள் இயற்றியது.

சேற்றூர் சமஸ்தானம் ஷராப்பு

பிர்ம்மஸ்ரீ ஆதிமூல ஆச்சாரியாரவர்கள் குமாரர்

விசுவப்பிரமசந்ததி

பிர்ம்மஸ்ரீ சங்கரலிங்க பாரதியாரவ[illegible]

பரிசோதித்து

[illegible]ம்பகோணம் விசுவப்பிரம சந்ததியா[illegible]

பொருளுதவியால்

கும்பகோணம் "யதார்த்தவசனீ" அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

[illegible]ன்மதி-ஸ்ரீ புரட்டாசி-மீ

[illegible]

Copy Right Reserved.

[ரூ[illegible]]

முகவுரை.

மாந்தைப்பள்.

இது

மாந்தைநகராண்ட மனு மய துவஷ்ட சிற்ப விஸ்வக்ஞ என்னும் ஐந்துவகை விசுவப்பிரமசந்ததியார்கள் வரலாற்றைக்கூறும் ஓர் பிரபந்தம் என விரியும். பள் என்றும் உழத்திப்பாட்டு என்றும் இந்நூலுக்குப் பெயர். உழத்திப்பாட்டாவது கடவுள் வணக்க முதலாகப் பள்ளிகள் ஒருவருக்கொருவர் ஏசல் என்னும் உறுப்பு ஈராகப் பாட்டுடைத்தலைவன் பெருமை ஆங்காங்குத் தோன்ற அளவடியாய் முதற்சீர் வெண்சீராய் ஏனையசீர் முதலசை நிரையசையுற்ற வெண்சீராயும் அல்லது இயற்சீர் வெண்சீர் ஒன்றிவருவதுமான ஒரு கலிப்பாவும் பற்பல சந்தச் சிந்தும் ஒவ்வொரு உறுப்புக்களு முறைப் பாடுவது.

உறுப்புக்களின் பெயர் பின் எழுதப்பட்டுள்ளன.

இப்பிரபந்தம் திருநெல்வேலி ஜில்லா சங்கரநாராயணர்கோவில் தாலூகா கருவைநல்லூர் என்ற கரிவலம்வந்த நல்லூரிற் பிறந்த சைவவேளாளர் மரபினராகிய வித்வசிரோமணி ஸ்ரீமத் சிதம்பர தாண்டவ மதுரகவிராயரவர்களாற் சுமார் 400 வருடங்களுக்குமுன் இயற்றப்பெற்றது.

இந்நூலுள் பெரியபுராணம் திருவிளையாடல் முதலான சைவ புராணங்களின் கருத்தைக்கொண்ட பள்ளியர் குடித்தரங்கூறல், பள்ளியர்தம் பெயர்ப் பெருமைப் பகர்தல், பண்ணைத்தலைவன் இளையாளைக் கோபித்தல், காளைவளச்சிலேடை, கிடைவளச்சிலேடை, நெல்லைக் களஞ்சியத்திற் சேர்த்தல் முதலான இடங்களில் முறையே பார்த்தால் இந்நூலாசிரியர் சைவசமய சிரோமணி என்பது தேற்றமாக விளங்கும்.

இந்நூலை ராமனாதபுரம் ஜில்லா ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா சேற்றூர் சமஸ்தான வித்வானும் எனது பெரிய தந்தையாருமாகிய ஸ்ரீமத் ராமகிருஷ்ண கவிராயரவர்கள் சீர்திருத்தஞ்செய்து ஷை சமஸ்தான வித்வசிரோமணியாகிய முகவூர் ஸ்ரீ-ல-ஸ்ரீ இராமசாமிக் கவிராயரவர்களியற்றிய சிறப்புப்பாயிரத்தொடு வரைந்துவைத்துச் சிவபதஞ்சேர்ந்தனர். அந்தச் சிறப்புப்பாயிரம் வருமாறு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தருவனையகரதலத்தாரெனும்விசுவகுலத்தார்
மேற்சைவனான
கருவைநகர்க்கங்கைகுலன்சிதம்பரதாண்டவ
மதுரகவிஞனன்பாய்ப்
பெருமைபெறப்பாடியமாங்கைப்பள்ளை
மிகத்திருத்திப்பிராயசித்துத்
திருவளரிராமகிருட்டினனச்சிறப்பதிப்பித்துச்
சீர்பெற்றானே.

என்ற சிறப்புப்பாயிரமிருந்தது. பின்னர் அடியேன் இந்நூலைப் புத்தகமாக்கக் கருதி தஞ்சாவூர் சதாவதானம் பிர்ம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் முதலான வித்வசிரோமணிகள் சமுகத்தில் நான் வாசித்துக்காட்டியகாலை அன்னவர்கள் அகமகிழ்கூர்ந்து கேட்டுப் பெருமகிழ்ச்சியடைந்துச் சிற்றறிவுடையேன்பேருக்குச் சிறப்புப்பாயிரங் கொடுத்தார்கள்.

இப்பிரபந்தத்தின் பெருமை அருந்தமிழ் வித்வான்கள் முதலான தமிழ்மக்கள் கருணைகூர்ந்து பார்த்தால் இந்நூலிலுள்ள சொன்னயம் பொருள்நயம் தொடைநயம் நடைநயம் உள்ள சிலேடை அடிமடக்குத் திரிபுகளின் அருமையும் பதப்புணர்ச்சியுந் தமிழ்ச்சொற்களு மினிது தோன்றுவதுடன் பண்டைக்காலத்து நூலிதுவென்பது செவ்வனே விளங்கும். ஆற்றுப்படலம் ஐந்திணை அடிமடக்குத்திரிபு முதலான அரும்பதங்களுக்குப் பதவுரையும் எழுதியிருக்கின்றது.

இந்நூலிலுள்ள கலிப்பா சிந்துகளிற்கூறிய அரிய விஷயங்களுக்குத் திருவிளையாடல், கந்தபுராணம், இராமாயணம், பெரிய

புராணம், மெய்கண்டசாத்திரம், வள்ளலார் சாத்திரம், பாரதம் முதலான நூல்களிலும் வேத முதலான கிரந்த நூல்களாகிய நாகர காண்டம், இராமாயணம், பாரதம், அரிவம்சம், சங்கர விஜயம் என்ற வடமொழி நூல்களிலுமிருந்து உதாரணங்களெடுத்து அந்த ந்தவுறுப்பு இறுதியில் அமைத்திருக்கின்றேன்.

ஆதலாற் பேரறிவாளராகிய பெரியோர்கள் பரிபூரண கிருபை பாலித்து இந்நூலை முறையாக ஒருங்கே கண்ணுற்றுப் பேரானந்த முற வேண்டுமென எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளை இடையறாது எஞ்ஞான்றும் பணிகின்றனன்.

இங்ஙனம்

ஆ. சங்கரலிங்கபாரதி,

சேற்றூர் சமஸ்தானம்,

தமிழ்வித்வான்.

உழத்திப்பாட்டு உறுப்புக்களாவன.

1. கடவுள்வணக்கம்.
2. மூத்தபள்ளிவரல்.
3. இளையபள்ளிவரல்.
4. குடும்பன்வரல்.
5. பள்ளியர்குடித்தரங்கூறல்.
6. பள்ளியர் தம்பெயர்ப்பெருமைபகர்தல்.
7. நாட்டுவளம்.
8. நகர்வளம்.
9. குயிற்கூக்கேட்டல்.
10. மழைவேண்டிக்கடவுட்பரவல்.
11. மழைக்குறியோர்தல்.
12. மழைபொழிதல்.
13. ஆற்றின்வரவு.
14. அதன்சிறப்புக்காண்டல்.
15. அகப்பொருட்டுறைகூறல்.
16. பண்ணைத்தலைவன்வரவு.
17. பள்ளிகளிருவர்முறையீடு.
18. இளையாளையவனுரப்பல்.
19. பள்ளன்வெளிப்படல்.
20. பண்ணைச்செயல்வினவல்.
21. அவனதுகூறல்.
22. ஆயரைவருவித்தல்.
23. அவர்வரல்.
24. அவர்பெருமைகூறல்.
25. மூத்தபள்ளிமுறையீடு.
26. குடும்பன்கிடையிலிருந்தான்போல்வரல்.
27. அவனைத்தொழுவின்மாட்டல்.
28. அவன்புலம்பல்.
29. மூத்தபள்ளியடிசில்கொடுவரல்.
30. அவனவளோடுகூறல்.

31. அவனவளைமன்னித்தல்கேட்கவேண்டல்.
32. அவள்மறுத்தல்.
33. அவன்சூளுறல்.
34. அவளவனைமீட்கவேண்டிப்பண்ணைத்தலைவனைப்பரவல்.
35. விரைவளஞ்சிலேடையுறக்கூறல்.
36. கிடைவளஞ்சிலேடையுறக்கூறல்.
37. காளைவளஞ்சிலேடையுறக்கூறல்.
38. உழவருழல்.
39. காளைவெருளல்.
40. அதுபள்ளனைப்பாய்தல்.
41. பள்ளிகள்புலம்பல்.
42. அவனெழுந்துவித்தல்.
43. அதைப்பண்ணைத்தலைவற்கறிவித்தல்.
44. நாறுநடல்.
45. விளைந்தபின்செப்பஞ்செய்யல்.
46. நெல்லளத்தல்.
47. மூத்தபள்ளிமுறையீடு.
48. பள்ளிகளொருவர்க்கொருவரேசல்.

இவ்வுறுப்புக்களுறப்பாட்டுடைத் தலைவன்பெருமை ஆங்காங்குத் தோன்ற கலிப்பாவுஞ் சிந்துங் கலந்துவர பாடுவது உழத்திப் பாட்டாம்.

இந்நூல் அச்சியற்றும்படி இடைவிடாது பெருமுயற்சியெடுத்த
கும்பகோணம்
பிர்ம்மஸ்ரீ வே. வெ. சுப்பிரமணியப்பத்தரவர்கள்மீது
இப்பிரபந்தத்தைப் பரிசோதனைசெய்த
ஆ. சங்கரலிங்கபாரதியாரவர்கள் இயற்றிய

மங்கலவாழ்த்து.

தருக்குடந்தைப் பட்டுவருஞ் சமணரைக்கொன் றருள்பரமன்
சரண்மே லன்புப்
பெருக்குடந்தை யாளருக்கு மிகவளரத் தானுரைக்கும்
பெற்றி யாளன்
மருக்குடந்தை னியமுறவாங் தனமங்க ளாம்பிகைமென்
மலர்த்தாள் வாழ்த்தித்
திருக்குடந்தை மாநகர்க்கண் வாழ்விசுவப் பிரமகுல
சீல னென்பான். 1

முத்துவா ரிதியுலகி லிலக்கிய லிலக்கணங்கள்
முறையே தேரான்
கத்துவா னுண்ணறிவு கடுகளவு மில்லாதான்
காசு வாங்கற்
கெத்துவா னடக்கமிலா னிழிகுணமோ ருருவெடுத்தா
னென்பா னேனும்
வித்துவா னென்றுவந்தா லன்னவற்கு முபசாரம்
வியந்து செய்வோன். 2

தாராரும் பொற்புயத்தான் றயையாருங் கனமனத்தான்
றமியேற் கன்பாய்
ஓராறு மாதவரை யுபசாரம் பொருளுதவி
யுவந்து செய்து

பேராருஞ் சாதியபி மானமெனக் கெண்மடங்கு
    பிறங்கக் கொண்டு
சீராரு மிந்நூலை யச்சியற்றும் பெருமுயற்சி
    தேடிக் கொண்டான். 3

பொன்னகத்தைத் தானாடி யெம்பெருமான் றிருக்கூத்துப்
    புரிந்த காலை
மன்னகத்தா லும்வணங்கி மன்றாடு மாறனென
    மகிழிந் நூலால்
என்னகத்தைத் தானாடி யெத்தனையோ கூத்துநா
    னியற்ற வாழ்த்திப்
பன்னகத்தா லிந்நூலை யான்றிருத்தஞ் செயும்படித்தாய்ப்
    படிமேல் வந்தான். 4

அண்ணாவென் றெனையழைக்கு மகமதிமுன் னேமலரா
    வதற்குப் பின்னே
தண்ணாரு முகமதியுந் தான்மலர்சுந் தரியவருந்
    ததியென் றோதும்
விண்ணாரு மானவட்குப் பதிநாரா யணியெனவே
    விளம்பும் பெண்மைப்
பெண்ணா ராயணியைப் பெருந்தேவி யாகவுறும்
    பேற்றைப் பூண்டான். 5

இப்பிரபந் தம்முறையாம் புத்தகமென் றெம்மனோ
    ரினிது பார்க்க
அப்பிரமன் முதலோரும் பணிவிசுவே சுரன்பதத்தை
    யன்பாய்ப் போற்றி
செப்பிரச வாசகவெங் கிடுசாமி யீன்றுமகிழ்
    சேயென் றோதுஞ்
சுப்பிரம ணியதேவைத் துதிகனசுப் பிரமணிய
    சுமுகன் மன்னே. 6

மாகமுறும் புகழ்கல்வி பெருமைவெற்றி நன்மக்கள்
        வலிபொன் வாழ்நாள்
தேகவணி நுகர்ச்சிநல்லூ ழறிவிளமை துணிவுசெந்நெல்
        சேர்நோ வின்மை
ஆகியவிப் பதினாறு பேறுமிவ ளருங்
        கெய்தி யவனி யாளப்
பாகமுறு மம்மையப்பர் பதமலரை யெஞ்ஞான்றும்
        பணிவேன் மாதோ. 7

மாந்தைநகர் வரலாறு.

மாந்தைநகர் எவ்விடத்திலிருந்ததெனில்,
ஆரியாவர்த்தத்திலிருந்ததாகப் பின்னர்வரும் பிரமாணத்தால்
விளங்குகின்றது.

ஆரியாவர்த்தமாவது.

சிந்து, கங்கை என்ற நதி பாயுஞ் சமவெளி.

[அதாவது] பஞ்சாப்பிலிருந்து வங்காளம்வரையும் ஆரியாவர்த்தம்.

விசுவபுராணம், பஞ்சகிருத்திய காண்டம் 1-முதல் 7 கவிகளாகிய

மேற்கோள் வருமாறு.

துவாபரமுடிந்தபின்னர்த்தோன்றியகலியுகத்திற்
றவோபலமிக்கவிஸ்வசந்ததிதன்னினுற்றோர்
அவாவெனும்லோகோற்பத்திக்காகியபஞ்சகிருத்தியம்
விவேகமாநடத்தும்வாறுமேதினிதனிலுரைப்பாம். 1

காய்கதிர்பரப்புமன்றிற்கலியுகநடத்தவேண்டி
யாயிரஞ்சிரவிராட்டினமிசையானுற்பவித்த
ஈவுனபஞ்சகோத்ரரிஷிகணூற்றிருபத்தைந்தில்
நேயமாரிஷிகளைவர்நீணிலமதிலுதித்தார். 2

முல்லைநெய்தலுங்குறிஞ்சிமுயங்கியமருதஞ்சூழ்ந்த
எல்லையில்கழனிதோறுமினியபூகங்கரும்பு
பல்வளவரம்பையின்கீழ்ப்பருமணிமுத்தஞ்சிந்திச்
சொல்லருமடைகடோறுந்துலங்கியமாந்தையெய்தி. 3

சித்திரமேடைசூழ்ந்தடில்லிநன்னகரடுத்த
உத்தரதிக்கின்மிக்கவூசிக்காந்தத்தினாலே
சுற்றிலுமகலநாலைந்தோசனைதூரமுள்ள
முத்திரைமிருந்தகோட்டைசிருட்டித்தார்முத்தினத்தில். 4

வேணியன்மழுவுஞ்சூலம்விஷ்ணுவின்சக்ரமிந்த்ரன்
பாணியாம்வச்சிரமூன்றுமதனருகணுகொணாது
பேணியமருந்துகுண்டுபீரங்கிகதைதுப்பாக்கி
காணுறுபடையனைத்துங்கவர்ந்திடுங்காந்தக்கோட்டை. 5

படைத்திடுங்கோட்டையுள்ளேபதுமராகத்தின்மேடை
இடைக்கிடையிரணியத்தாலிலங்குகொத்தளமுண்டாக்கி
அடுக்கியவகழிசூழ்ந்தவழகுள்ளசிகரிதோறும்
தொடுத்திடும்வானமுட்டவனுமந்தத்துவசநாட்டி. 6

கோட்டையினிடையின்மிக்ககோமேதகமண்டபத்துள்
ஈட்டியமணியின்சோதியிரத்தினசிம்மாசனத்தில்
வாட்டிறல்விராட்டில்வந்தமனுமயதொட்டசிற்ப
நாட்டுவிச்வக்ஞவென்னுமைவரங்ககரையாண்டு. 7

என்றது காண்க.

இப்புராணம் பழைய ஓலைச்சுவடியிலுள்ளது.

கவிகள்மாத்திரமிருக்கின்றன. சுமார் இருநூறு வருடங்களுக்குமுன் தென்னாற்காடு ஜில்லா திண்டிவனத்துக் கருகிலுள்ள கிளியனூர்க் கிராமத்திலிருந்த சிதம்பரக் கவிராயரால் பாடப்பெற்றது இந்த நூல். வெகுகாலத்துக்கு முன்னமே கவர்ன்மெண்டாரால் இப்புராணத்தின் சாராம்சத்தை எழுதப்பட்டுச் சென்னை மியூஜியம் கையெழுத்துப் புத்தகசாலையில் வைக்கப்பட்டிருக்கிறதெனத் தெரிகின்றது.

1914-௵ டிசம்பர்-௴ சென்னை சிந்தாத்திரிப்பேட்டை விசுவகர்ம வேதாத்தியயன பாடசாலையிலிருந்துவந்த தமிழ்ப்பத்திரிகை 486-ம் பக்கம் பார்க்க விளங்கும்.

சிறப்புப்பாயிரங்கள்.

தஞ்சாவூர் சதாவதானம்
பிர்ம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்களியற்றிய
சிறப்புப்பாயிரம்.

காந்த மாமெயில் சூழ்தரு மாந்தைவாழ்
கம்மி யக்குலத் தார்சரி தம்புனை
மாந்தைப் பள்ளெனு நூல்பகர்ந் தான்கரு
வைச்சி தம்பர தாண்டவ மாகவி
ஆய்ந்து சேறைச்சங் கரலிங்க பாரதி
யச்சி யற்றி விளக்கின னன்னது
மாந்தர் சிந்தை யிரும்பையு மீர்த்ததம்
மதிலின் பண்பவர் சீர்த்திக்கு முள்ளதே.

நாகபட்டணம் வெஸ்லியன்மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்
ஸ்ரீமத் கம்பராமாயணப் பிரசங்கவித்துவானுமாகிய
பிர்ம்மஸ்ரீ C. S. முத்துஸாமி ஐயரவர்களியற்றிய சிறப்புப்பாயிரம்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

திருவளர் பணையிற் றிகழ்தரு முழத்தியர்
பெருமுலைக் குடத்தொடும் பெறுகட் குடங்கொடு
காம்பீ ரத்தொடுங் கனிந்து நடப்ப
ஆம்பீர் பூத்து மஞ்சமென் றேதியுங்
கருநிறத் தனங்கள் காசினிக் கண்ணுள
அருமை யருமை யாவா வெனநினைந்
தணிதிகழ் செஞ்சூட் டரசவன் னங்கள்
மணிதிகழ் வயற்கண் மயல்தழீஇ நிற்குந்
[illegible]களும் பொழிலுஞ் சாலியுங் கமுகும்

இடங்கொண் மணிமா ளிகைகளு மிலங்கும்
காந்தத் தாற்பொலி கவின்பெறு மதில்சூழ்
மாந்தை நகர்வாழ் மனத்தொழி லாற்றுந்
தெய்வக் குலத்திற் செனித்தவ ராகி
ஐவகைத் தொகுதியா யமைந்தகண் ணாளரைப்
பாட்டுடைத் தலைமைப் பண்புடை யாளராய்
நாட்டிக் கடல்சூழ் நானிலம் புகழ
உழத்தித் பாட்டென் றொருநூல் பாவின்
கிழத்திதன் மனமுங் கேள்வியு நிரம்பச்
சொன்னயம் பொருணயந் தொடைநயம் நடைநயம்
எந்நய முஞ்சேர்ந் திலங்க வியற்றினன்
அவ்வே ளான்குல னணிகரு வாபுரிச்
செவ்வே ளென்னுஞ் சிதம்பர தாண்டவ
மாகவி யந்நூன் மாலையைப் பாவலர்
பாகிதற் கிணையோ பாலிதற் கிணையோ
இச்சைப் பண்பா லியம்புவா மென்ன
அச்சிற் பதிப்பித் தமைபுகழ் பூண்டான்
சேற்றூர் மகிபன் சேவகப் பாண்டியன்
சாற்றூர் மணிநிதி தானுவந் தருள
வேட்டைக் காதலவ் வேந்தன் புயமேற்
சூட்டிப் புகழெனுந் துவசமு நாட்டியச்
சமத்தா னத்திற் சமத்தா னகவி
இமைத்தா முன்ன ரியம்புந் திறலோன்
செந்தமிழ்க் கும்பன் றென்சேறை யாதிபன்
சுந்தர தாசுத் துரைமன மகிழும்
ஆதிலட் சுமிநிறை யணிஷராப் பென்னும்
ஆதிமூ லேந்திர னருளிய பாலகன்
வரும்பண் ணளிமுரல் வனசமா லிகையான்
பெரும்புகழ் விசுவப் பிரமகு லோற்பவன்
பதம்புகழ்ப் பரமன் பதமலர் மீதே
நிதம்புகல் சங்கர லிங்கபா ரதியே.

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துச் சீஷரும்
மேற்படி ஆதீனத்து மஹாவித்வான்
மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்கள் மாணாக்கரும்
தில்லைவிடங்கன் பிரபல வித்துவான் மாரிமுத்துப் பிள்ளை அவர்கள்
புத்திர பிரபௌத்திரருமாகிய காஞ்சிபுரம் வேண்பாப்புலி
மகா-ள-ஸ்ரீ தி. சு. வேலுச்சாமிப்பிள்ளை அவர்களியற்றிய

சிறப்புப்பாயிரம்.

இருமாந்தை யெனத்திரியுங் கவிஞருள நனிபனிப்ப
வெயிலாங் காந்தம்
பெருமாந்தைப் பள்விசுவப் பிரமகுலத் தார்க்குரைத்தான்
பேரின் போநாள்
தொருமாந்தை யிலக்கணந்தேர் சுமுகசைவ வேளாளன்
றுலங்கும் பொற்பூண்
உருமாந்தை யலர்க்குமதன் சிதம்பரதாண் டவமதுர
வுயர்நா வல்லோன். 1
அப்பிரசங் கண்டருந்து மளியெனப்பா வலர்மாந்தற்
கந்த நூலை
விப்பிரசங் கந்தமிழு மிளிர்சேறைச் சமத்தான
வித்து வான்க
ருப்பிரசங் கடலமுதங் கலந்தசுவை யாமெனநா
னுரைப்ப மேலாய்
எப்பிரசங் கமுஞ்செயுஞ்சங் கரலிங்க பாரதியச்
சியற்றி னானே. 2

பறங்கிப்பேட்டை தமிழ்ப்பண்டிதர்
மகா-ள-ஸ்ரீ ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்களியற்றிய

சிறப்புப்பாயிரம்.

சீதமார் மருத வேலி செறிதரு முழத்திப் பாட்டு
வேதமார் பனுவல் தொண்ணூற் றாறனுள் விளங்கு மேன்மைப்
போதமா ர தன்சீர்ப் போற்றல் புலவர்க்கு மெளிய தன்றால்
பாதமார் கடவுட் போற்றல் பள்ளியர் வரவி னோடே. 1

பள்ளிக ளேச வீருப் பாட்டுடைத் தலைவர் சீர்த்தி
எள்ளலில் பெருமை தோன்ற வினியசிந் தொடுவி ருத்தம்
தெள்ளிய விரவப் பாடித் தேனிகர் மாந்தைப் பள்ளென்
றுள்ளுவார்பொருளுஞ்சொல்லுமுவப்புறவொருநூல்சொற்றான். 2

அரிவலம் புரிமால் வேத னுமிவர் முதலோர் நாளும்
புரிவலம் புரிய வெண்ணில் புண்ணிய மளிக்கு நன்னீர்த்
திரிவலங் கயல்பாய் பண்ணைத் திகழ்விழி மகளி ராடுங்
கரிவலம் புரிந்த நல்லூர்க் கனபதி யெழுந்த மேலோன். 3

அறந்தலை நின்ற சால்பி னருந்தவர்ப் பேணிப் பெம்மான்
பிறந்தன னென்னத் தோன்றிப் பேரிசை திசைமுற் றோதச்
சிறந்தனன் றமிழ்மூன் றோர்ந்த சிதம்பர தாண்ட வக்கோன்
மறந்தவ ரில்லை யென்னு மதுரமாக் கவிஞன் சைவன். 4

பல்வகைத் துறையுஞ் சேரப் பனுவறன் மரபி னோர்க்கு
வெல்வகை யுற்ற தென்று வேலைசூழ் புடவி யோரத்
தொல்வகை யக்க சாலைத் தூயவர் குலத்துட் டோன்றிக்
கல்வகை நிறைந்த சோலை கமழ்கருஞ் சேற்றூர் வாழ்வோன். 5

சீரதி கஞ்சேர் சிற்பத் திறம்புகல் நூலுந் தேர்ந்தான்
பாரதி பட்டங் கொண்ட பாவலன் பார்த்தன் றேரிற்
சாரதி யாமா லொக்குஞ் சங்கர லிங்க நாமப்
போரதி பன்கா ழிக்கட் பெரிதுவந் தவையிற் சொன்னான். 6

காட்டிய நயனுஞ் சீருங் கற்பனை பலவுங் காண
நாட்டினன் கலைஞர் யாரு நலந்தகை மகிழ்ச்சி யுற்றார்
பூட்டிய பணிவான் மிக்க புலவர்கோன் சிறக்க வென்று
மீட்டியா முரைத்தா மிந்த மேலவன் வாழ்க மன்னோ. 7

நாகபட்டணம்
நாஷனல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும்
நாகை நீலலோசனிப் பத்திராதிபருமாகிய
மகா-ா-ா-ஸ்ரீ ஜி. சதாசிவம்பிள்ளை அவர்களியற்றிய
சிறப்புப்பாயிரம்.

சீர்கொண்ட வனுமனுக்குத் தீர்க்காயு ளருள்புரிந்தான்
    செம்பொன் மாடம்
நீர்கொண்ட மதிளிலங்கை நகரையுமோர் கணத்துக்குள்
    நிருமித் தீந்தான்
பேர்கொண்ட விண்ணகரும் பிறநகரும் படைத்தருள்செய்
    பெருமை பூண்டான்
ஏர்கொண்ட புகழ்ப்பரமே சனும்புகழ்வோன் விசுவகன்ம
    னென்பான் மன்னே. 1

மாந்தையிலே வாழுமகு டத்யாகி யெனுந்தமிழ்ப்பா
    வழுத்துஞ் சாத்தன்
ஏந்துதலை நிதிகொடுத்த சிற்பியைப்போ லென்னையுங்காத்
    தின்பொன் னுடிங்
கீந்தனரா வினையவிசு வப்பிரம குலத்தார்சீ
    ரிசைக்கு மோர்நூல்
ஆந்தகைமை மனுமுதலா மைவரும்பாட் டுடைத்தலைவ
    ராகச் சொல்வாம். 2

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
    யெனலுந் தேர்ந்து
செய்ந்நன்றி பாராட்டிச் சிதம்பரதாண் டவமதுரச்
    செழும்பா வல்லோன்
அன்னங்கொள் பணைமாந்தை யுழத்திப்பாட் டென்றொரு நா
    லருளிச் செய்தான்
சொன்னயஞ்சே ரந்நூலின் பெருமையைச்சற் றறிந்தவா
    சொல்ல லுற்றாம். 3

அண்ணவா யகத்தமைந்த பலன்பெற்ற தெனப்புகழை
    யமைய மேனாள்

விண்ணாளும் புலவரொரு சிந்தமுதை யருந்தியுற்ற
    மேன்மை குன்ற
மண்ணாளும் புலவரின்னூற் பலசிந்தி னமுதருந்தி
    மாட்சி யோங்கக்
கண்ணாள ரெனும்புலவர்க் கிந்நூலை யவனுரைப்பக்
    கண்டா மம்மா.
அப்பெரிய நன்னூலை யச்சியற்றி வெளியிட்டா
    னவன்யா ரென்னின்
முப்புவியும் புகழ்சேறைச் சேவகப்பாண் டியமகிப
    முதல்வ னன்பாய்
எப்பொழுது மனமகிழ்ந்து சமத்தான வித்துவா
    னென்றே சாற்றும்
செப்புதமிழ்ப் பாவலன்சங் கரலிங்க பாரதியாஞ்
    சீர்த்தி மானே.

மாயூரம்
விசுவப்பிரமவம்ச வைதீகாசாரியராகிய
ப்ரம்மஸ்ரீ சிவலிங்க உபாத்தியாயரவர்கள் குமாரர்
பௌரோஹிதம் மகா-ள-ள-ஸ்ரீ சபாபதியுபாத்தியாயர்
அவர்களியற்றிய

சிறப்புப்பாயிரம்.

எட்பாட்டுப் பிதற்றிவரு மிழிகுணமே தழீஇக்கொளுங்கீ ழேனு மேன்மை
பெட்பாட்டுன் னியசமுகம் பேணவுறு மேற்பெருமை பெறுதல் போலும்
பட்பாட்டுக் கனவிசுவப் பிரமகுலப் பாட்டாகப் பாவப் பின்னும்
கட்பாட்டுப் பரமனடி யர்ப்பாட்டுப் பெருமையென்றும் ஞாலம் போற்ற.

வேறு.

எண்சீர்விருத்தம்.

அச்சி தம்பர தாண்டவ மாகவி யாக வந்தகங்
    காகுல னென்பவன்
உச்சி தம்பர வுற்றகண் ணாளரை யுழக்திப் பாட்டுடை
    நாயக னாகவே

வச்சி தம்பர வையுடை வையமேன் மல்க மாந்தை
வளமும் புகழ்ந்துசொல்
லச்சி தம்பர மானந்த மேவியே நாவ லோரும்
புகழ்ந்துகொண் டார்களே.

வெண்பா.

பார்திவை வாழ்த்திப் பணிசங் கரலிங்க
பாரதியே யச்சிற் பதிப்பித்தான்—சீரதிக
மோங்குமிந்த நூலை யுலகோ ரமுதாக
வாங்கியுட் கொண்டார் மகிழ்ந்து.

தஞ்சை

வலம்புரி

(கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்)
மகா-௱-௱-ஸ்ரீ அ. பாலசுப்பிரமணியபிள்ளை அவர்களியற்றிய

சிறப்புப்பாயிரம்.

உலகுணவு முடையுமுறீஇ யின்பமுறப் புரிதொழிலுக்
குயிரே யென்ன
நலதொழிற்செய் கண்ணாளர்க் கிசைமாந்தைப் பள்ளெனுநூல்
நாவ லோர்க்குள்
அலகில்புகழ்ச் சிதம்பரதாண் டவமதுர கவியுரைத்தா
னன்பி னாய்ந்
தில்குறச்சங் கரலிங்க பாரதியந் நூலையச்சிட்
டிசையுற் றானே.

இந்நூலாசிரியராகிய
சிதம்பரதாண்டவ மதுரகவிராயரவர்களியற்றிய
ஏகாம்பரேசர் காமாட்சியம்மை
துதி.

ஆசிரியவிருத்தம்.

கார்கொண்ட கருமுகிற் காடுவெண் முகிலொடு
கலந்திருந் ததுக டுப்பக்

கருமேனி வெண்ணுரைக் கள்வாய் விளங்கவரு
        கடைஞருழு கின்ற போதிற்
கட்டழிந் துருகமல மதுவம் பிலம்புகக்
        கண்டமத் தக்க வுட்டிக்
கயமந்த நறவுண்டு கடைவாய் குதட்டியெக்
        காலமுங் களிதூங் கவும்
சீர்கொண் டிலங்குகற் பகநீழ லூற்றரசு
        செய்கின்ற தெய்வேந்திரன்
திகழ்தரும் பொன்னுலகு பூவுலக தாமெனச்
        செறிமலர்ப் பூஞ்சோலையுஞ்
செந்நெற் படப்பைக் கதிர்க்குலையு மோங்குமணி
        சேர்ந்தசெஞ் சாலி வயல்சூழ்
திருவா வணம்பரவு மணிமாட மொருவாத
        தேசுற்ற மாந்தை நகராள்
தார்கொண்ட கொன்றையா ரேகாம்ப ரேசர்நித்
        தம்பழகு மழலை யஞ்சொற்
சாம்பவி யெனப்பரவ லாம்பெயர்க் காமாட்சி
        சரணமல ரஞ்ச லிப்பாம்
தாமரைய லங்கலார் தெய்வபஞ் சப்பிரம
        சந்ததிக ளான மேலோர்
சந்ததம் புகலஞ்சு வேதபா ராயணர்
        தமிழ்க்கு தவுமுதல் வள்ளலார்
வார்கொண்ட சரசுவதி மந்திரம் புகலுமணி
        வாயர் முந்நூன் மார்பினர்
மனமகிழு மேகவா கனரனும விருதுற்ற
        மகிமையா ரிரத காரர்
மாந்தைநக ராதிபதி யானவிச் சுவகன்ம
        மகுடத்தி யாகி யார்மேல்
வண்டமிழி னுழத் திப்பாட் டெனும்பண்
        மகிழ்ந்துநாம் புகல மன்னே.

உ

சிவமயம்.

விசுவேசுவரன் துணை.

மாந்தைப்பள்.

நூல்.

விநாயகர் சுப்பிரமணியர் துதி.

சீர்கொண்ட மலர்ச்சோலை திகழ்மாந்தை மாநகராள்
கார்கொண்ட கரதலஞ்சேர் கண்ணாளர் புகழ்தோன்றும்
பார்கொண்ட கனவுழத்திப் பாட்டியம்பப் பரமனருள்
தார்கொண்ட கணபதியச் சண்முகன்பொற் சரண்சரணே.

சிந்து.

பொன்னார் விசுவ கருமன் புவனம் புரக்கு மென்றுநம் வேதமும்
புகலு நாகர காண்ட முஞ்சொலும் புகல்வர் காளிங் கறிவிரென்
றந்நான் மகிழ்ந்து தந்தை யாரரு ளமைய முணர்ந்த தனயர்கள்
அகத்து ளோங்கு மின்பப் பெருக்குற் றுகங் கெழுமி வளரவே
பின்னார் விசுவ ரூப முற்றுமவ் விசுவ கன்மனை மிகப்புகழ்
மேன்மை பைங்கர தேவைச் சண்முக வேளை யஞ்சலி செய்குவாம்
தென்னா ரனும விருது கொண்டருள் செகத குருவென் றோதுவோர்
தெய்வக் கம்மியர்க் குழத்திப் பாட்டெனுந் தெரிய லன்பொடு
[சூட்டவே.

குறிப்பு:—இந்தச் சிந்து முதலாகச் செந்நெல்லைக் களஞ்சியத்திற் சேர்த்தல் என்னு முறுப்பீறாகவுள்ள பற்பல சந்தச் சிந்துகளெல்லாம், மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர், பொதுச்சீர் என்ற சீர்கள் விரவிய அறுசீர், எழுசீர், எண்சீர், ஒன்பதின்சீர், பதின்சீர், பதினான்குசீரடியுற்ற வோரோர் சிந்துகளாக உறுப்புக்கள் தோறும் வரும். ஆங்காங்குக் கண்டுகொள்க.

இந்தச் சிந்து தற்குறிப்பேற்றவணி. சுப்பிரமணியர் கேட்கச் சிவபெருமான்றிருவாய்மலர்ந்தருளியது நாகரகாண்டமென்ற நூல், இது வடமொழியாலமைந்துள்ளது.

விநாயகர் விசுவரூபமுள்ளவரென்றதற்குதாரணம்.

திருவாவடுதுறையாதீன மஹாவித்வான்
திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களாற்
செய்யப்பட்ட

சேக்கிழார் பிள்ளைத் தமிழ்.

கணபதி துதி.

மாமேவு வான்பிறை முடிப்பிறை யிரண்டென்ன
வாய்க்கடைத் தோன்றியவிரும்
மருப்பிரண் டென்னவங் கைக்கோ டிரண்டென்ன
மார்பின்முத் தார மென்னப்
பாமேவு பேருதா பந்தமென வரைசூழ்
படாமெனத் தாளின் முத்தம்
பதித்தகழ லெனவிரவ மேலோங்கு பேருருப்
பண்ணவனை யஞ்ச லிப்பாம்
ஏமேவு ஞானசபை யிறைவர்தம் மேனியி
னிணங்குற வெழுப்பு லகெலாம்
என்னுமறை யாதியாக் கொண்டவ ருயிர்க்கருளு
மியல்பனைத் துந்தெ ரித்து
நாமேவு மம்முதலொ டொன்றவினை யுருபுதொக
நான்கனடி யாதி செய்து
நாற்சீரி னெறி விளக்கிபொளிர் சேக்கிழார்
நற்றமிழ்க் கவித ழையவே.

என்று கூறியது காண்க.

கந்தபுராணக்காப்பு முதற்கவியினு மிக்கருத்துள்ளதே.

இனிச் சுப்பிரமணியரும் விசுவரூபமுள்ளவர் என்றதற்குச் சான்று.

கந்தபுராணம் உற்பத்திகாண்டம் திருவிளையாட்டுப்படலம்

௭௮-வது கவி.

எண்டிசையு மீரெழு திறத்துலகு மெண்கிரியு மேழு கடலுந்
தெண்டிரையு மேமிவரை யும்பிறவும் வேறுதிரி பாகி யுளசீர்
அண்டநிறை யானவு மனைத்துமிரு மெய்ப்பொருளு மாகி யயனும்
விண்டுமா லுஞ்செறிய வோருருவு கொண்டனன் விறற்குமரனே.

என்றதையுணர்க.

இவ்வுருவம் பரமேசுவர ரூபமெனவும் பெயர்பெறும். பாட்டுடைத் தலைவர்களாகிய ஐந்துவகைக் கம்மாளரே ஜெகதகுருவென்றிந்தச் சிந்திற் கூறியதற்குதாரணம்.

1909-வரு பி. இராமநாதன் பி.ஏ. எம்.ஆர். ஏ.எஸ். பட்டம் பெற்றவரால் வெளியிட்ட தமிழ்ப்பெயரகராதி முதற்புத்தகம் 646-வது பக்கம்செகதகுரு என்னும் பதத்தைப் பார்க்க விளங்கும். கதிரைவேற்பிள்ளை அவர்கள் தொகுத்த அகராதியிலுங் காண்க.

இன்னும் சிற்பம் விசுவபோதம் சுலோகம்.

விஶ்வஸ்ய விஶ்வகர்மாத்ய விஶ்வகர்ம ஜகத்பதி: ।
வேதானாமபி கர்த்தாச விஶ்வகர்மா ஜகத்குரு: ॥

விச்வஸ்ய விஸ்வகர்ம்மாத்ய விச்வகர்ம்ம ஜகத்பதிஹி
வேதாநாமபி கர்த்தாச்ச விச்வகர்ம்மா ஜகத்குரு: என்றது காண்க.

அனுமக்கொடியுடையார் பாட்டுடைத்தலைவர்கள்என்றதற்குதாரணம் மாந்தைநகர் வரலாறு கூறுவதிலுள்ள விசுவபுராணக் கவிகளில் ரு-வது கவியாலும் கீழுள்ள ஆசிரிய விருத்தத்தாலுமறிக.

பழநிஸ்தலம் முத்தமிழ்ச் சக்கரவர்த்தியாகிய
பிர்ம்மஸ்ரீ மு. மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்களியற்றிய
ஆசிரியவிருத்தம்.

தண்டாயுதக்கடவுள்சரணசேகரம்ஙளினதவளபாரதிகடாக்ஷம்
சகலமகாராஜர்கள்சமஸ்தானமெங்குஞ்சபாசெனமதித்தாத்ரம்
தர்க்கமிடுவோர்க்குவல்லிடிகசடர்தம்மைமத்தகிக்கின்றவடவாக்கினி
தவபழநியூர்மாம்பழக்கவிச்சிங்கத்தமிழ்ச்சக்ரவர்த்திசனது
வண்டார்மலர்ச்சோலைமாந்தையாதிபர்மேகவாகனமுளோரனுமடால்
வல்லர்மகுடத்யாகரணிகமலமலர்மாலைவரபஞ்சவேதபுனிதர்
மந்த்ரசாம்ராஜ்யபரசமயகோளரிநாதர்மகிமையருள்பரவுமன்பர்
வயல்வாவிநதிபுடைமலிந்ததிருநெல்வேலிவாழ்கின்றமதியூகிகள்
கொண்டாடுமனுமயதுவஷ்டசிற்பப்ராம்மகுலசிரோமணிகளான
குணவான்களெனூரான்குகூட்டப்ராபுக்களுங்கூடிமகிழ்கூர்ந்துகாண்க

கொற்றவர்முதற்பலருமற்றுபசரித்துநிதிகுதிரைபல்லக்குவண்டி
கோரியவைமுற்றுங்கொடுக்கநிறைகல்விக்கொடிக்கட்டிவிருதுபெற்றோம்
மிண்டாளரைக்கருதமாட்டோமுமைப்போல்விவேகிகளையோநாடுவோம்
விவரிப்பதென்னவுங்கட்கெலாந்தெரியுமேமேன்மைமிகுநமதுவம்ச
விசுவாசியார்க்குமொன்றாகவேயாங்கவிவிளம்பியதையோசியாத
விதமொழுங்காநீங்கள்விரைவிற்கனஞ்செய்யவேண்டுமிதுநலசமயமே.

என்றதுகாண்க.

இன்னுமழைபொழிதல் உறுப்புக்கலிப்பாவிலுங் காண்க.

மூத்தபள்ளிவரல்.

கலிப்பா.

சீர்மேவும் புவனமெல்லாந் தினம்பரவும் விசுவேசர்
ஏர்மேவு மைந்துமுகத் திற்பிறந்த கம்மியராள்
வார்மேவுங் கனகாந்த மதிளணிசேர் மாந்தையில்வாழ்
பேர்மேவு மூத்தபள்ளி பிரியமுற்று வந்தனளே.

சிந்து.

பண்ணார் மொழியதரம் பவளந் தரளநகை
பார்வைய முதெனும்பொற் பட்டிகை கட்டி
யண்ணாந்து விம்மியடர்ந் தோங்குமுலை மேற்பதக்கத்
தாரத் துடன்றனிமுத் தார மணிந்து
கண்ணாளர் பண்ணைப்பள்ளி யான தவப்பயன்கை
கண்டதென் றொளிசெய்தங்கக் காப்பு மணிந்து
மண்ணா ளரசர்முதல் வந்தவரெல் லாமயங்க
மாந்தைப்பொற் கொல்லர்பண்ணைப் பள்ளி வந்தாளே.

இவ்வுறுப்புக்கலிப்பாவில் விசுவேசுரர் ஐந்துமுகத்திற்பிறந்தவர் பாட்டுடைத்தலைவர்களாகிய கம்மாளர் என்றதற்கு விபரம் வருமாறு.—

மனு—இரும்புவினையாளராகிய கொல்லர்.
மய—மரவினைமாக்களாகிய தச்சர்.
துவஷ்ட—தாம்பிரத்தொழிலாளராகிய கன்னார்.
சிற்ப—தேவாலயநகரகோபுரதேவதாவிக்ரஹசிருஷ்டியாள ராகிய தபதியர்.
விசுவக்ஞ—தங்கமயநவரத்நாபரணவினையாளராகிய தட்டார்.

இவர்கள் விசுவேசுவரர் சத்தியோசாதம் வாமதேவம் அகோரம் தத்புருஷம் ஈசானம் என்ற பஞ்சமுகங்களிற் பிறந்தவர்களென்றதற்குச் சான்று வருமாறு.

𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌾𑌦𑍍𑌵𑌾𑌸𑍀𑌨𑍍𑌮𑌨𑍁𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌭𑌵𑌤𑌿।
𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌾𑌸𑍀𑌨𑍍𑌮𑌯𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌭𑌵𑌤𑌿।
𑌅𑌘𑍋𑌰𑌾𑌦𑍍𑌵𑌾𑌸𑍀𑌤𑍍 𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌭𑌵𑌤𑌿।
𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌦𑍍𑌵𑌾𑌸𑍀𑌚𑍍𑌛𑌿𑌲𑍍𑌪𑍀 𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌭𑌵𑌤𑌿।
𑌈𑌶𑌾𑌨𑌾𑌦𑍍𑌵𑌾𑌸𑍀𑌦𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌜𑍍𑌞𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌭𑌵𑌤𑌿।

சத்யோஜாதமுகமாஸீத்மனுவிச்வகர்ம்மணப்ரம்ஹோத்பவதி
வாமதேவமுகமாஸீத்மயவிச்வகர்ம்மணப்ரம்ஹோத்பவதி
அகோரமுகமாஸீத்த்வஷ்டவிச்வகர்ம்மணப்ரம்ஹோத்பவதி
தத்புருஷமுகமாஸீத்சில்பிவிச்வகர்ம்மணப்ரம்ஹோத்பவதி
ஈசான்யமுகமாஸீத்விச்வக்ஞவிச்வகர்ம்மணப்ரம்ஹோத்பவதி

என்றதையுணர்க.

இளையபள்ளிவரல்.

கலிப்பா.

சீரான்ற கம்மாளர் செகதகுரு கண்ணாளர்
காரான்ற கரவிசுவ கன்மர்தட்ச கர்மனுவர்
நேரான்ற கனவாசா ரியர்வேத பாரகராம்
ஏரான்ற வறிவர்பண்ணை யிளையபள்ளி வந்தனளே.

சிந்து.

கொண்டைச்சு ருட்டும்பகட்டுங் குணட்டிஞ்சி மிட்டும்பொட்டுங்
கொடியிடை யுங்குலுங்குங் கொங்கைக் குடமும்
உண்டருண்டு கொண்டுமகிழ் தெண்டிரைய முதுநிகர்
அல்லவென்ற சொல்விளம்பி யாளை மயக்கி
மண்டலத்தி லேசிறந்த மாந்தைக்கண் ணாளரிரு
வனச மலர்ப்பதத்தை வாழ்த்திப் பணிந்தே
கண்டவ ரிளையவளி ளையவளென் றேவியப்பக்
காஞ்சி நகர்க்கணுறுங் கன்னி வந்தாளே.

இந்தவுறுப்புக் கலிப்பாவில் வேதபாரகர் என்றதற்கு ஆதாரம்.—
குயிற்கூக்கேட்டல் உறுப்பு ச-வது சிந்துச்சான்றுலறிக.
ஏனைய பெயர்கள் பாட்டுடைத் தலைவர்களுக்குப் பொதுப்பெயர்கள்.
வேதபாரகர் என்பதும் பொதுப்பெயரே.

குடும்பன்வரல்.

கலிப்பா.

அற்புதர்கண் ணுள்வினைஞ ரக்கசா லையர்கொல்லர்
சொற்புலவர் தபதியர்சிற் பியர்துவட்டர் வித்தியரே
நற்புனைந்தோர் கம்மியரி ரதகாரர் யவனரெனும்
பற்பலபேர் பெற்றவரைப் பணிகுடும்பன் வந்தானே.

சிந்து.

கருணைக்கா மாட்சியம்மை பணிகோவில் வலஞ்செய்யார்
காலைக் கலப்பையிலேர்க் காலாகச் செய்வேன்
றருமமேத வதையக்க சாலை விநாயகர்தாள்
தலைக்கொண் டுரையார் நாவைக் கொழுச்செய்குவேன்
பரசம யரடியைப் பணியாத பேர்களையான்
பருத்தவள் ளைக்கையாகத் திருத்திக் கொள்வேன்
திருவள ருங்கண் ணுளர் தெய்வதட்ச கரென்றுன்னுச்
சிதடரைக் காளையாகக் கட்டுவே னுண்டே.

இந்தவுறுப்புக் கலிப்பாவிற் கூறிய பெயர்களுள் இரதகாரர் என்றபேர் நீங்கலாக ஏனைய நாமங்களும் பாட்டுடைத் தலைவருக்குப் பொதுப்பெயராயுள்ளன. அகராதி இரண்டாவதுபொருளகராதியிற் காண்க.

இரதகாரர் என்ற பேரும் பாட்டுடைத் தலைவருக்குப் பொதுப் பெயரே. இதற்காதாரம்.—

ஸ்காந்தம் நாகரகாண்டம் 5-வது அத்தியாயம்
377, 378-வது சுலோகம்.

𑌵𑍈𑌶𑍍𑌯𑍋 𑌰𑌥𑌕𑌾𑌰𑌶𑍍𑌚
[illegible]
[illegible]
[illegible]

𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌕𑍃𑌦𑍍𑌰𑌥𑌕𑌾𑌰𑌶𑍍𑌚
𑌕𑌾𑌂𑌸𑍍𑌯𑌕𑍃𑌦𑍍𑌰𑌥𑌕𑌾𑌰𑌕𑌃 ।
𑌶𑌿𑌲𑌾𑌕𑍃𑌦𑍍𑌰𑌥𑌕𑌾𑌰𑌶𑍍𑌚
𑌪𑌞𑍍𑌚𑍈𑌤𑍇 𑌰𑌥𑌕𑌾𑌰𑌕𑌃 ॥

பகவோர தகாரஸ்ச
ஸ்வஸ்வக்ருத்யப்ரபேதத:
ரதகாரஸ்த்வயஸ்கார:
த்வஷ்டக்ருத்ரதகாரக:

ஸ்வர்ணக்ருத்ரதகாரஸ்ச
காம்ஸ்யக்ருத்ரதகாரக:
சிலாக்ருத்ரதகாரஸ்ச
பஞ்சைதேரதகாரக:

என்பது காண்க.

பள்ளியர்குடித்தரம் பகர்தல்.

கலிப்பா.

சுத்தசைவத் திருவாளர் சுந்தரமூர்த் திகண்மகிழக்
கத்தரரு ளசும்பிருந்த கனகனகங் காண்மினெனும்
வித்தமணி யகம்விளங்கு மேன்மைக்கம் மாளர்பண்ணைக்
கொத்தடிமைப் பள்ளியர்தங் குடித்தரத்தைக் கூறுவரே.

சிந்து.

சந்த§ம னித்தருட னயோத்தி யாநகரைத்
தாஞ்செய் மனுவர்பண்ணைப் பள்ளியர் நாங்கள்
இந்திரன் பரமற்கிட் டிறைஞ்சு மணிவிமானம்
இயற்று மயனர்பண்ணைப் பள்ளிய ராண்டே. 1

பூவுல கத்தவரும் புகழ்ந்து தொழும்பெருமைப்
பொன்வினை மாக்கள்பண்ணைப் பள்ளிகள் நாங்கள்
ஆவ னுறுங்கலன்வி மானமத் தேவருக்கங்
கமைக்குஞ் சிற்பியர்பண்ணைப் பள்ளிக ளாண்டே. 2

---

§மனித்தர் = மனிதர். இது விரித்தல் விகாரம்.

தென்னார் கிருட்டினற்குத் திருநக ரைப்படைத்த
தெய்வச் சிற்பியர்பண்ணைப் பள்ளியர் நாங்கள்
மின்னா ரான்முதலோர் விளங்குஞ் சீரமுறும்
விசுவ கருமன்பண்ணைப் பள்ளிய ராண்டே. 3

அனுமனுக் குயராயு ளருண்மயன் வழியவர்க்
கடிமை புரியும்பண்ணைப் பள்ளிகள் நாங்கள்
மனுகுலத் ததிபர்கள் மேகவா கனர்பண்ணை
வயங்குந் தொழும்புபுரி பள்ளிக ளாண்டே. 4

மருவி யிரவியவன் மகிழத்தன் மகளைமுன்
வழங்குந் துவட்டர்பண்ணைப் பள்ளியர் நாங்கள்
இருபது கையுடையான் றனக்குமண் டோதரியை
ஈந்தருண் மயனார்பண்ணைப் பள்ளிய ராண்டே. 5

தேவா லயங்கண்மணி மண்டபங்கள் கோபுரங்கள்
செய்தருள்சிற் பியர்பண்ணைப் பள்ளிகள் நாங்கள்
ஆவா வெனக்கணத்து ளந்தலங்கை யைப்படைத்தங்
கருள்தெய்வத் தச்சர்பண்ணைப் பள்ளிக ளாண்டே. 6

வான்றட வுப்பரிகை மணிதிகழ் மாளிகைகண்
மகிழ்ந்துசெய் மயன்பண்ணைப் பள்ளிகள் நாங்கள்
ஆன்ற முருகனா ரனாதியர்தேர் வாகனங்கள்
அருளுங்கண் ணனார்பண்ணைப் பள்ளிக ளாண்டே. 7

இந்தவுருப்புக் கலிப்பாவிற் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சிவபெருமான் செம்பொனருளினார் என்றதற்குப் பிரயோகம்.—

பெரியபுராணம் ஏயர்கோன்கலிக்காமநாயனார்புராணத்

50-வது கவி.

சுற்று மிருந்த தொண்டர்களுந் துயிலு மளவிற் றுணைமலர்க்கள்
பற்றுந் துயினீங் கிடப்பள்ளி யுணர்ந்தார் பரவை கேள்வனார்
வெற்றி விடையா ரருளாலே வேமண் கல்லே விரிசுடர்ச்செம்
பொற்றின் கல்லா யினகண்டு புகலூ ரிறைவ ரருள்போற்றி.

என்றதுகாண்க.

ஓடவிட்ட மாற்றுயர்ந்தபொன் றெகிழ்ந்து தோன்றுமாத அசும்பிருந்த கனகனகமென்றார். உதாரணம்.—மதுரைக்கலம் 1-வது அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவுக்குக் கீழு ...ாவிலறிக.

இவ்வுறுப்பு முதற்சிந்தில் மனிதர்களுடனே அயோத்தியாநகரைச்
சிருஷ்டித்துக் கொடுத்தான் மனுவென்னும்
விசுகருமனென்றதற்குதாரணம்.—

இராமாயணம் பஞ்சமவர்க்கம்.

சுலோகம்.

𑌅𑌯𑍋𑌧𑍍𑌯𑌾 𑌨𑌾𑌮 𑌨𑌗𑌰𑍀
𑌤𑌤𑍍𑌰𑌾𑌸𑍀𑌲𑍍𑌲𑍋𑌕𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌾 ।
𑌮𑌨𑍁𑌨𑌾 𑌮𑌾𑌨𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣
𑌯𑌾 𑌪𑍁𑌰𑍀 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌾 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ॥

அயோத்யாநாமநகரீ
தத்ராஸிலோகவிஸ்ரதா
மநுநாமானவேந்த்ரேண
யாபுரிநிர்ம்மிதாஸ்வயம்.
என்றல் காண்க.

இந்திரன் பரமேசுவரருக்குச் சாத்தி வணங்கும்படி விமானம் நிருமித்துக் கொடுத்த மயனுர் என்றதற்குதாரணம்.—

திருவிளையாடற்புராணம்
இந்திரன் பழிதீர்த்தபடலம் 83-வது கவி.

கிரிபட்டுமெனமழையைக்கிழித்தெட்டும்புழைக்கைமதிக்கீற்றுக்
கோட்டுக்
கிரியெட்டுஞ்சினமடங்கவெட்டுமெட்டெட்டுக்கணமுந்தாங்க
விரியெட்டுத்திசைபரப்பமயனிருமித்துதவியவவ்விமானஞ்சாத்தி
யரியெட்டுத்திருவுருவப்பரஞ்சுடரையருச்சிப்பானுயினனே.
என்று கூறியதுணர்க.

2-வது சிந்தில் பூவுலகத்தார்தொழும் பெருமையுள்ளவர்களும் தேவர்களுக்கு விமானங்கள் பூஷணங்கள் சிருஷ்டித்துக் கொடுப்பவருமானவர் பொன்வினைமாக்களான சிற்பியர் என்ற விசுவகர்மரே என்றதற்காதாரம்.

பாரதம் ஆதிபருவம் 62-வது அத்யாயம்.

சுலோகம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

விஸ்வகர்ம்மாமகாபாகோ ஹாஜஜ்ஞேசில்பிப்ராஜாபதிஹி
கர்த்தாசில்பிசகஸ்ராணும் த்ரிதசாநாஞ்சவர்த்தகி
பூஷணாநாஞ்சஸர்வேஷாம் கர்த்தாசில்பிவதாம்வரஹ
யஸ்ஸர்வாஸான்விமாநாநி தேவதாநாஞ்சகாரகஹ
மநுஷ்யாஸ்ச்சோபஜீவந்தி யஸ்யசில்பிமகாத்மனஹ
பூஜயந்திசயம்நித்யம் விஸ்வகர்ம்மாணமவ்யயம்.

என்றதுகாண்க.

3-வது சிந்தில் கிருஷ்ண பகவானுக்கு நகரம் நிருமித்துக் கொடுத்தார்.

சிற்பி என்றதற்குப் பிரயோகம்.

அரிவம்சம் த்வீதிய பருவம் 28-வது அத்யாயம்.

சுலோகம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

பூர்யாப்ரியகரீஸாவை யதுநாமபிவர்த்தநி
சில்பிமுக்யஸ்துதேவாநாம் ப்ரஜாபதிஸுதப்ரபூ
விஸ்வகர்ம்மாஸ்வஸாமர்த்யா புரீம்ஸ்தாயிபக்ஷபதி
தஸ்மின்னேவததக்காலே சில்பாச்சார்யமஹாமதிஹி
விஸ்வகர்ம்மாசுரஸ்ரேஷ்டஹ க்ருஷ்ணஸ்யப்ரமுகேஸ்திதஹ.

என்றதுகாண்க.

விசுவகருமாவினுடைய இருதயத்தில் பிரம்மாவும், கைகளில் விஷ்ணுவும் சிவனும், சந்திரர் சூரியர் அக்னி நேத்திரங்களாகவும், சரீரத்தில் சகலதேவர்களும் வசிக்கின்றார்கள் என்று சொல்லியதற்கு ஆதாரம்.—

சிற்பம் விச்வகர்ம்மீயம் 1-வது அத்யாயம்.

சுலோகம்.

𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌨𑍋 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌸𑌕𑌰𑍌 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌙𑍍𑌕𑌰𑍌 ।
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌰𑍍𑌕𑌵𑌹𑍍𑌨𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥

சில்பினோஹ்ருதயம்ப்ரம்ஹா ஸகரௌவிஷ்ணுசங்கரௌ
சந்த்ரார்க்கவந்ஹிநேத்ரஞ்ச சரீரம்சர்வதேவதாஹ.

என்றதுகாண்க.

4-வது சிந்தில் அனுமனுக்குத் தீர்க்காயுளருளியவன் மயன் என்றதற்குப் பிரமாணம்.—

கம்பராமாயணம் உத்தரகாண்டம் அனுமப்படலம் 38-ம் கவி.

அயனும் விசுவகருமனும் வரமளித்தல்.

தாதாவுரைக்குமென்பிரமதண்டாற்றனுஞ்சாவின்றி
மேதாவியுமாயொருநாளும்விளியாநாளுமுறுகவென
தீதாயினர்வேராறுக்குமிவன்றேவர்படையாற்செருக்களத்தில்
வாதாமகன்சாவொழிகவெனவானோர்தச்சன்வரங்கொடுத்தான்.

என்றதுகாண்க.

மனுகுலத்தாரிவரென்றதற்குச் சான்று.

ஸ்காந்தபுராணம் நாகரகாண்டம் 7-வது அத்யாயம் 459, 460, 461 ஸ்லோகங்கள்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍍𑌰𑌤𑍋 𑌮𑌹𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌿
𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑍋 𑌮𑍁𑌨𑌿𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌃 ।
𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌮𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌞𑍍𑌚
𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 ॥

𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌕𑍁𑌲𑌰𑌤𑍍𑌨𑌞𑍍𑌚
𑌮𑌨𑍁𑌵𑌂𑌶𑌮𑌹𑌾𑌮𑌣𑌿𑌃 ।
𑌮𑌨𑍁𑌂 𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂
𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑌿𑌦𑍍𑌵𑌿𑌰𑍂𑌪𑌿𑌣𑌮𑍍 ॥

𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌶𑍍𑌚
𑌲𑍋𑌕𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃 ।
𑌅𑌨𑌨𑍍𑌤𑌵𑍇𑌦𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑍇𑌵
𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾 𑌚 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 ॥

க்ரடவ்ரதோமஹாக்ஞானி
காச்யபோமுனிபுங்கவஹ
சுராணாமசுராணாஞ்ச
த்ரிலோகானாம்பிதாமஹஹ.

த்ரிநேத்ரகுலரத்னஞ்ச
மநுவம்சமஹாமணிஹி
மநும்முனீநாம்கர்த்தாரம்
பரமேஷ்டித்விரூபிணம்.

காச்யபோப்ரம்ஹமூர்த்திஸ்சா
லோகப்ரதபபண்டிதஹ
அநந்தவேதகர்த்தாவை
விஸ்வகர்ம்மாசப்ராம்ஹணஹ.

என்ற சலோகங்களால் உணர்க.

பாட்டுடைத்தலைவர் மேகவாஹனர் என்றதற்குச் சான்று.

சிற்பம் பிரதிஷ்டாவிதி.

𑌮𑌨𑍁𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌯𑌜𑍍𑌞𑌮𑌯𑌶𑍍𑌚𑌤𑍁𑌃
𑌸𑍃𑌤𑌂 𑌨𑌿𑌶𑌿𑌤𑌮𑌿𑌦𑌂 𑌤𑌤𑌃
𑌮𑌨𑍁𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌨𑍍 𑌶𑍍𑌵𑍇𑌤𑌮𑍇𑌵𑌵𑌾𑌹𑌨𑍇 ।
𑌮𑌯𑍋𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌤𑍋 𑌅𑌪𑌿𑌵𑌾𑌤𑍋 𑌸𑍍𑌰𑍁𑌵𑌾𑌯𑌿𑌤𑌿 ॥
𑌹𑌵𑍍𑌯𑌾𑌨𑌿𑌜𑍍𑌯𑍋𑌹𑍇𑌤𑌿 𑌪𑌶𑍂𑌨𑌾𑌮𑌵𑌰𑍁𑌨𑍍𑌧𑍇𑌹𑌿 ।
𑌮𑌯𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌨𑍍 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑍇𑌵𑌵𑌾𑌹𑌨𑍇 ॥
𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑍇𑌦𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌭𑍁𑌵𑌨𑌂
𑌜𑌜𑌾𑌨 𑌬𑌹𑍁𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑍍𑌷𑌿𑌹𑍋𑌤𑌃 ।
𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌨𑍍 𑌰𑌕𑍍𑌤𑌮𑍇𑌵𑌵𑌾𑌹𑌨𑍇 ।
𑌸𑌰𑍍𑌵𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑍇𑌷𑍁 𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌰𑍍𑌤𑌸𑍍𑌯𑍋𑌨𑌵𑌿𑌕𑌸𑌾𑌧𑌯𑌾𑌤𑌿 ।
𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌨𑍍, 𑌧𑍂𑌮𑍍𑌰𑌮𑍇𑌵𑌵𑌾𑌹𑌨𑍇 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾 𑌵𑌿𑌶𑌾𑌂𑌪𑌤𑌿𑌃
𑌶𑌨𑍍𑌨𑌃𑌪𑌶𑍂𑌨𑍍 𑌵𑌾𑌤𑌃 ।
𑌶𑍋𑌧𑌸𑍍𑌤𑍁 𑌵𑌾𑌤𑌃 𑌤𑌤𑍍𑌸𑍁𑌧𑌨𑌃 ।
𑌸 𑌜𑌾𑌵𑌤𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌾 𑌵𑌰𑍍𑌣𑌃 ॥
𑌵𑌿𑌶𑍍𑌵𑌜𑍍𑌞𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌨𑍍 𑌪𑍀𑌤𑌮𑍇𑌵𑌵𑌾𑌹𑌨𑍇

மனுப்ரிதிவ்யாம்எக்ஞமயஸ்சது
ஸச்ருதநிசிதமிதந்தது
மநுவிச்வகர்மன்ச்வேதமேகவாஹநே.
மயோபூர்வாதொ அபிவாதோஸ்ருவாயிதி
கவ்யாநிஜ்யோஹேதிபசூநாமவருந்தைஹி.
மயவிச்வகர்மன்க்ருஷ்ணமேகவாஹநே.
த்வஷ்டேதம்விச்வம்புவநம்
ஜஜாநபகுகர்த்தாரம்மிஹயகூஷிஹோதஹ
த்வஷ்டாவிச்வகர்மன்ரக்தமேகவாஹநே.

ஸஹிரண்யேஷ சில்பிருதஸ்யயோகவிகஸாதயாமி
சில்பிவிச்வகர்மன் தூம்ரமேகவாஹநே.
விச்வகர்மா திசாம்பதிஹி
சனப்பசூன்பாது
சோஸ்மான்பாதுதஸ்மைநமஹ
ப்ரஜாபதிருத்ரோவருணஹ
விச்வக்ஞவிச்வகர்மன் புஷ்கரமேகவாஹநே.

என்றதாலுணர்க.

5-வது சிந்தில் துவஷ்டபிர்ம்மாவின் புத்திரி சஞ்சை என்பவள் சூரியன் மனையாள். இதற்காதாரம்.—

திரிசிரபுரம் மஹாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களியற்றிய திருக்குடந்தைப்புராணம் சூரியன் பூசித்த படலம் 2-வது கவி.

பொருவருந்துவட்டாவின்றபுத்திரிசஞ்சைதன்னை
வெருவருக்கதிரோன்வேட்டுவெம்முலைக்குவடுபுல்லி
மருவருமியமனோடுவயக்குகாளிந்தியென்னு
மிருவருமுதிப்பநல்கியினிதுவாழ்ந்தமருநாளில்.

என்றதுகாண்க.

மண்டோதரி என்ற தன் குமாரியை இராவணனுக்கு மனையாளாகக் கொடுத்தான். மயன் என்றதற்குதாரணம்.—

கம்பராமாயணம் 7-வது உத்தரகாண்டம்
இராவணன் பிறப்புப் படலம் 63, 64-வது கவிகள்.

திண்டடங்தோட்டசக்கிரிவனிவைசெப்பச்சேயிழையைவளர்த்துவைத்துக்
கொண்டிருந்தபயன்பெற்றேனெனமகிழ்ந்துகுண்டிகைநீருதகஞ்செய்ய
எண்டிசையும்போற்றுதிறலிராவணன்னெழிலரக்கரெவரும்போற்ற
வண்டமருங்குழன்மண்டோதரியைமணஞ்செய்ததற்பின்மகிழ்ந்துமாமன்.

மயனிராவணனுக்கு வேலாயுதமளித்தல்.

தாளார்தண்டாமரையோன்றன்மேலேவிடினுமவனுயிர்கொண்டன்றி
மீளாவேலுங்கொடுத்துமயன்போகமெல்லியலையுடனேகொண்டு
தோளாறுமேழிரண்டுஞ்சுடர்முடிகளீரைந்தும்பொலிந்துதோன்ற
வாளார்திண்படைசூழமதிளிலங்கைவளநகரின்மன்னன்புக்கான்.

என்ற சான்றாலறிக. இன்னும்

ராமோதந்தே ।
ஹேமாக்யாம் அப்ஸரஸாம்
பரிணீய மயாஸுரः ॥
தஸ்யாமுத்பாதயாமாஸ
வேதநாதாஹ்வயம் ஸுதம் ।

மந்தோதரீம்மயஸுதாம்
பரிணீயதசாநநஹ
தஸ்யாமுத்பாதயாமாஸ
மேகநாதாஹ்வயப்ஸுதம்

என்ற ராமோதந்தம் நூலாலறிக.

6-வது சிந்தில் தேவாலயங்கள் மணிமண்டபங்கள் கோபுரங்கள் செய்யுஞ் சிற்பியர் என்றதற்குகாரணம்.—

சிற்பம் சுலோகம்.

ப்ராஸாதே கோபுரே சைவ
ப்ராகாரே மண்டபே ததா ।
லிங்கஸ்ய நிர்மாணம்
தடாகம் கூபமேவ ச ।
ப்ரதிஷ்டாரம்பயோக்யானி
ப்ரதிஷ்டாஞ்ச கர்ணேபொः ।

𑌸𑍍𑌥𑌪𑌤𑌿𑌹𑌸𑍍𑌤𑌸𑌂𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂
𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌯𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌕𑌾𑌃 ।
𑌅𑌥𑌵𑌾𑌨𑍍𑌯𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂
𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌂 𑌕𑌰𑍍𑌤𑍃𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ।

ப்ராசாதேமண்டபேசைவா
ப்ராகாரேகோபுரேததா
லிங்கஞ்சாதநிர்மாணம்
தடாகம்கூபமேவச
ப்ரதிஷ்டாரம்பயோர்வாபி
ப்ரதிஷ்டாச்ருதபூர்ணயோஹ
ஸ்தபதிஹஸ்தஸங்க்ராஹ்யம்
க்ரியாவ்ருத்யாநுகூலகாஹ
அதவாந்யஜாதீநாம்
ப்ரவேசம்கர்த்ருநாசகம்.

என்றது காண்க.

இலங்கைநகரைக் கணத்துக்குட் சிருட்டித்துக் கொடுத்தான் றெய்வத் தச்சன் என்றதற்குப் பிரமாணம்.—

கம்பராமாயணம் யுத்தகாண்டம்

மந்திரப்படலம்.

1-வது கவி.

பூவருமயனொடும்புகுந்துபொன்னகர்
மூவகையுலகினுமழகுமூற்றுற
ஏவெனவியற்றினன்கணத்தினென்பரால்
தேவருமருள்கொளத்தெய்வத்தச்சனே.

என்றது காண்க.

பள்ளியர்தம் பெயர்ப்பெருமை பகர்தல்.

கலிப்பா.

வேணிக்கண் ணதிமிலைந்தார் விளம்பியருள் பலமகிமை
மாணிக்க மிவையென்ற வயிரமுதல் நவமணிகள்
ஆணிப்பொன் விளங்குகண்ணு ளர்க்கடிமைப் பள்ளியரும்
பேணித்தம் பேர்ப்பெருமை பிரியமுற்றுப் பேசுவரே.

சிந்து.

வீம்புக்கா கப்பள்ளி நீயொதுங் கென்று
விளம்பியுங் கோபிக்கின்றீர்—மால்
பாம்புப் படத்தும் வடத்தும் படுத்துநம்
*பள்ளிகொண் டானல்லவோ. 1

பள்ளிய ரைத்தணி வென்று நிதநிதம்
பார்த்துக் குறைபுகல்வீர்—எங்கள்
‡பள்ளக் கிணற்றுநன் னீரைநீ ருண்பதைப்
பார்த்தவ ரேசாரோ. 2

பள்ளி யறையெனு மெங்க ளறையையிப்
பாரிற்கண் ணுளர்செய்தார்—அந்தப்
‖பள்ளி யறைவிரும் பாருக்குச் சந்ததிப்
பாக்கியந் தானுமுண்டோ. 3

உள்ளுந் தமிழ்ப்புல வோர்கரு ணீகரென்
றோது மோர் காரணப்பேர்—எங்கள்
தெள்ளுந் தமிழுறும் †பள்ளி யகந்தனைச்
சேர்ந்தல்ல வோபுனைந்தார். 4

எம்பே ராலுறும் ¶பள்ளி யறையிலவ்
வீச ரிருப்பதையுங்—கண்டே
வம்பே கொண்டுநீ ரெம்மை யிகழ்வதின்
மாட்சிமை யென்னுமோ. 5

---

*பள்ளி = நித்திரை, பட்பெண்.
‡பள்ள = ஆழத்தையுடைய, பள்ளர்களுடைய.
‖பள்ளியறை = சயனவறை, பள்ளியரரங்கு.
†பள்ளியகம் = பள்ளிக்கூடமாகிய இடம், பள்ளியர்வீடு.
¶பள்ளியறை = கோவிலரங்கு, பள்ளியர்சிற்றில்.

வள்ளலென் §நாயனார் மண்டோ தரியை
மகிழ்ந்தரு ளஞ்சலையைப்—ஒரு
பள்ளக்க னுற்பவ மானதி னமெல்லைப்
பள்ளரென் பார்பெயரே. 6

இந்தவுறப்புக்கலிப்பாவிற் சிவபெருமானருளிய மாணிக்கம் என்றதற்குகாரணம்.—

திருவிளையாடல் மாணிக்கம்விற்றபடலம்

83-வது கவி.

அஞ்சலிசெய்தகநோக்காலிக்குமரர்களவிறந்தவாயுள்செல்வம்
விஞ்சுகவென்றளித்தருளவிறைமகனும்விண்ணிழிந்தவிமானநோக்கிச்
செஞ்சரணம்பணிந்திருகைத்தாமரையும்விரித்தேற்றான்செல்வநாய்கர்
மஞ்சனையும்புடைநின்றவமைச்சரையுமுகநோக்கிமலர்ந்துசொல்வார்.

என்றதாலுணர்க.

நாட்டுவளம்.

கலிப்பா.

ஆனிலரு வாகனமே லமர்ந்தவிசு வேசுரரை
மானிலமேற் பணிகமல மாலிகைக்கம் மாளரவர்
கானிலரும் பொழிற்பண்ணைக் கடைசியர்பற் பலர்புகழ்ந்து
நானிலமேல் லாம்பரவு நாட்டுவளஞ் சாற்றுவமே.

சிந்து.

நாடக் காண்ப தரனிரு பாதம்
நலியக் காண்பது நங்கையர் சிற்றிடை
பாடக் காண்பது செந்தமிழ் வேதம்
பதரைக் காண்பது தூற்றுங் களத்திடை
போடக் காண்ப திரப்பவர்க் கன்னம்
புலம்பக் காண்பது விண்ணுறு மேகங்கள்
ஊடக் காண்பது மாதர் கலவியில்
ஒண்க லிங்கநன் னடெங்கள் நாடே. 1

§எங்நாயனார் = எங்கள் விசுவகருமாவாகிய மயன்.

வாங்கக் கண்ட தானரு ளென்றும்
வணங்கக் கண்டது செந்நெற் கதிர்க்குலை
நீங்கக் கண்டது பாதக மஞ்சும்
நெருங்கக் கண்டது மங்கையர் கொங்கைகள்
தூங்கக் கண்டது தோரண மாலை
சுழிக்கக் கண்டது வேக நதிச்சலம்
ஓங்கக் கண்ட தறம்பொரு ளின்பம்
உயர்ந்த சோழநன் னாடெங்கள் நாடே. 2

வேகக் காண்பது வேள்வியிற் சேர்பொருள்
வெட்டக் காண்பது கூவந் தடாகங்கள்
நோகக் காண்பது சூல்வளைச் சங்கம்
நொறுங்கக் காண்பது மாற்றிற் கருமணல்
போகக் காண்பது மூடங்கண் முற்றும்
புரளக் காண்பது கொங்கைமின் னாரங்கள்
ஏகக் காண்ப திலாமையும் பாவமும்
என்ற சிங்கள நாடெங்கள் நாடே. 3

முட்டுப் பட்டது கச்சுக்குட் கொங்கை
முறிக்கப் பட்டது கொல்லையின் முல்லைகள்
வெட்டுப் பட்ட தடிசிலுக் கிந்தனம்
மேவப் பட்டது மாதரை மெத்தையிற்
றட்டுப் பட்டது கிஞ்சுக மோடல்
ததும்பப் பட்டது தேன்கமழ் சோலையிற்
கட்டப் பட்டது மேன்மணி மாடங்கள்
காமர் பாஞ்சால நாடெங்கள் நாடே. 4

தாப மென்பது பானு விடத்திற்
றடுத்த லென்பது வெள்ளப் பெரும்புனல்
கோப மென்பது மிந்திரப் பூச்சி
குணக்கென் றோதுதல் கீட்டிசை வட்டம்பின்
சாப மென்பது வீரர்கள் கையினிற்
றாழ லென்ப தகழியி னழமே
¶சோப மென்ப தணிமணி யாரத்திற்
றோன்றும் பொற்குரு நாடெங்கள் நாடே. 5

¶சோபம் = ஒளி.

நகர்வளம்.

கலிப்பா.

வேந்தரணி முடிக்கழும்பு விளங்குபதந் திகழ்புனைவர்
ஆந்தகைமை மகிமையர்நாட் டணிபுகன்ற கடைசியர்சூழ்
காந்தமுறுந் தடமதிலுங் கமழுமலர்ப் பொழிலுமுற்ற
மாந்தைநகர் வளங்களைததா மனமகிழ்ந்து விளம்புவரே.

சிந்து.

வானு லாவு கதிர்மணி மாடம்
மகுடஞ் சேர்நனி குற்றுமென் றேயுயர்
பானு வாரிர தப்பச்சை வாசி
பயந்து காண்மடக் கிக்கொண்டு தாவுறுங்
கானு லாவிய சோலையி னூடு
கலையு லாவு மதியுற்று லாவுமின்
றேனு லாவிய செஞ்சொற் கண்ணோர்
சிறந்த மாந்தை நகரெங்க ளூரே. 1

அற்றை நாளி லிமகிரி மன்னன்
அணிநகர்க் கன்முன் னற்புதக் கம்மியன்
பொற்பி லங்கு வருக்கைபம் புன்னை
பொருந்து சந்தகில் பூகங் கதலிகள்
பற்பல மணியா லும்ப டுத்திப்
பயன்வ ழங்கவு நல்கின னென்றுமுன்
சொற்ற †கச்சியப் பன்புகழ் நேரணி
தோன்று மாந்தை நகரெங்க ளூரே. 2

பண்ணை யெங்குங் கமலங் குலவும்
பரவு நீரிற் கமலங் குலவுமே
வண்ண மேவிய மாதங்க மின்னுமே
மாட மாளிகை மாதங்க மின்னுமே
எண்ணு மங்கையர் கற்பணி யாருமே
எங்குங் கம்மியர் கற்பணி யாருமே
கண்ணுங் கானு மரும்புக ழையுற்றுக்
கானு மாந்தை நகரெங்க ளூரே. 3

†கச்சியப்பன் — கந்தபுராண நூலாசிரியர்.

திக்க னைத்தையுந் தென்றிசை வெல்லச்
சிவபி ரான்றருஞ் செந்தமி ழோர்புறம்
தக்க தானத ருமங்க ளோர்புறம்
தங்குங் கீத வடமொழி யோர்புறம்
மிக்க சீர்ச்சிவ புண்ணிய மோர்புறம்
மேன்மை யானசை வாகம மோர்புறம்
எக்கி யங்கள் ஜெபங்க ளுமோர்புறம்
ஏய்ந்த மாநகை நகரெங்க ளுமே. 4

ஆறு மாமுக நாதன் மொழிப்படிக்
கத்து றக்கமு மன்னவன் கோட்டமும்
வேறு தேவர்கண் மந்திர மும்புரி
விஞ்சை யார்தெய்வத் தச்சரிப் பூமியில்
ஏறு சீருற வும்பரி கோவிலுக்
கிஃதா §ாசிர யந்தெரி வீரெனும்
பேறு லாவு விமானப்பன் மாடம்
பிறங்கு மாநகை நகரெங்க ளுமே. 5

இந்தவுறுப்புக் கலிப்பாவில் அரசர்களணிகின்ற முடித்தமும் பார்ந்த பாதமுற்றவர் பாட்டுடைத்தலைவர்கள் என்றதற்கு ஆதாரம்.—

திருவிளையாடற்புராணம் மாணிக்கம்விற்றபடலம்
90-வது கவி.

இந்திரக்கடவுணுட்டும்மணியரியவெண்ணு
மந்திரக்கிழவர்நல்கிமபனினுமாண்டகேள்வித்
தந்திரக்கனகக்கொல்லர்க்குவப்பனததும்பவிசிச்
செந்திருமார்பினுற்குத்திருமணிமகுடஞ்செய்தார்.
என்றுங்கூறியவாறுணர்க.

§ஆசிரயம்=இடம்.

இன்னும் குமணராஜனிடம் பரிசில்பெறச்சென்ற பெருந்தலைச்சாத்தனார் பாடியது.

இருகுறள் நேரிசை வெண்பா.

மாந்தையிலே வாழு மகுடத் தியாகியுனக்
கேந்து தழும்போ விரண்டுண்டு—வேந்தர்
முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கீயும்
படித்தழும்புன் கையிலே பார்.

என்றதுமுணர்க.

இந்தவுருப்பில் இரண்டாவது சிந்தில், வருக்கை, புன்னை, கதலி, யகில், சந்து முதலாகிய விருக்ஷங்களை இரத்தினத்தாற் செய்து அவைகள் பயன்தரும்படியாகவும் செய்த கம்மியன் என்றதற்காதாரம்.—

கந்தபுராணம் வரைபுனைபடலம் 25-வது கவி.

கற்பகஞ்சந்தகில்கதலிபூகமே
பொற்புறுவருக்கைமாப்புன்னையாதிய
பற்பலமணிகளாற்படுத்தியன்னவை
நற்பயன்வழங்கவுநல்கினனரோ.

என்றதுகாண்க.

3-வது சிந்தின் பதப்பொருள்.

பண்ணை எங்கும் கமலம் குலவும் = வயலெல்லாந் தாமரைமலர் விளங்கும், பரவு நீரில் கம் மலங்கு உலவும் = அகன்ற சலத்திற் சந்தோஷமுற்ற மலங்கு என்னு மீனுலாவும், வண்ணம் மேவிய மாதங்க = அழகுபொருந்திய திருமகள் வசிக்க, மின்னும் மாட மாளிகை மா தங்கம் இன்னும் = ஒளிசெய்யு மாடமாளிகை பெருமையுற்ற தங்கமய மிற்றைநாள் வரையும், எண்ணு மங்கையர் கற்பு அணி யாரும் = நினைக்கும் பெண்களிருதயத்தில் இல்லறத்தருமம் பொருந்தித் தங்கும், எங்கும் கம்மியர் கல் பணி யாரும் = எந்த இடத்திலும் (பொன்வினைமாக்கள்) என்னுங் கண்ணாளர் செய்து கொடுக்கும் ரத்னாபரணங்கள் நிறையும், அன்றியும் எந்த இடங்க

லிலும் தபதியர்செய்த உமாபரமேசுரர் முதலாகிய தேவவிக்கிரக சிலர்சிருஷ்டி பொருந்தும் என்றும் அமையும்; கண்ணும் காலும் அரும் புகழை யுற்று காணும் = ஆடவருடைய விழியு மருமையான காருண்யம் பொருந்திய பார்வையாகிய கீர்த்தியமைந்து தோன்றும், வாய்க்காலு முளைத்த கரும்பைக்கொண்டு தோன்றும்.

கமலம் = பொருளாகுபெயர். ஏகாரம் ஈற்றசை.

இன்னும் என்ற வும்மை வுயர்வு சிறப்பு.

கண்ணும் காலும் எண்ணும்மை, கண்ணுங்காலுமென்ற ஓரவயவத் தைக் குறிக்குஞ் சொல்நயத் தோன்றுதல் காண்க.

அரும்பு வினைத்தொகை.

5-வது சிந்தில் விண்ணுலகமும், சுப்பிரமணியர்கோவிலும், தேவேந்திரன் முதலான தேவர்கள் வசிக்கும் மாளிகைகளும் நிருமித்துக் கொடுத்த தெய்வத்தச்சர் என்றதற்காதாரம்.

கந்தபுராணம் விண்குடியேற்றுபடலம் 19-வது கவி 28-வது கவிகளாலறிக.

கவிகள் வருமாறு.

விக்குறுகணைகழல்விபலாயகன்
ஆக்கமில்விண்ணுலகளிக்கும்பெற்றியாற்
றேக்கியவிஞ்சையின்றெய்வத்தச்சனை
நோக்கினனினையநுவறன்மேயினான். என்றும்

ஏறுசிரிந்திரனிருக்குங்கோயிலும்
ஆறுமாமுகப்பிரானமருங்கோட்டமும்
மாறிலாபாலயன்மந்திரங்களும்
வேறுளாரிருக்கையும்விதித்திட்டானரோ.

என்றுங்கூறியவாற்றானுணர்க.

குயிற்கூக்கேட்டல்.

கலிப்பா.

கம்பனுடன்முதலாங் கவிவாண ரும்புகழ
அம்புவிமேல் வந்தருள்கண் ணுளர்மகிழ்ந் தாண்டுவந்த
சம்பிரம மாந்தைநகர்ச் சார்ந்தவளஞ் சாற்றியபின்
கும்பமுலைக் கடைசியர்கள் குயின்மொழியுட் கொண்டாரே

சிந்து

சீரா ரிராமனுக்குச் சேதுபந்த னம்புரிந்த
சிற்ப நளனைப்பணிந்து கூவாய்குயிலே
ஓராழி யாதவனை யுடலங் கடைந்தபுகழ்
உற்றதுவட் டாவைவாழ்த்திக் கூவாய்குயிலே

மேலான யோகசித்தி வியாழன் சகோதரியே
விச்சுவகன் மன்றுபென்றே கூவாய்குயிலே
மாலான வாகனஞ்சேர் மகவான் வணங்குகுரு
மகிமைத் துவட்டாவென்றே கூவாய்குயிலே.

துதிக்கு மனுவேசிவன் றாய மயனேயரி
துவட்டாவே வேதனென்று கூவாய்குயிலே
மதித்திடுஞ் சிற்பிமக வான்விசு வக்ஞனவன்
மார்த்தாண்ட னென்றுசொல்லிக் கூவாய்குயிலே.

அக்கினி சோத்திர மௌபாச னங்கொண்மறை
யவரே கண்ணுளரென்று கூவாய்குயிலே
தக்க வேதபாரக ராச்சாரி யர்கம்மியர்
சகத்துக்குங் குருவென்றே கூவாய்குயிலே.

சொல்லு மனுவேதிதி தூயமயனே சாரந்
துவட்டாவே நட்சத்திரங் கூவாய்குயிலே
நல்ல யோகமேசிற்பி ஞானவிச் சுவகன்மன்-
னவிலுங் காணமென்றே கூவாய்குயிலே.

காரணி யிந்திரற்குக் குலிச மியற்றியருள்
கம்மியனை நீபணிந்து கூவாய்குயிலே
சூரபன் மன்மனைவி பதுமசோ மனைதந்தை
சுரர்புனை வற்பணிந்து கூவாய்குயிலே.

சித்திர ரேகைபென்னுந் தனதன் மகிழ்தேவியே
தெய்வகம்மி யன்பெண்ணென்றே கூவாய்குயிலே
மித்திரங்கொள் சித்திரைநாண் மேவு மதிதேவதை
விசுவ கருமனென்றே கூவாய்குயிலே.

இந்தவுறுப்பு க-வது சிந்திற் சிற்பனென்னும் நளனே ஸ்ரீ ராமனுக்குச் சேதுபந்தனம் புரிந்தான் என்றதற்குதாரணம்.—

கம்பராமாயணம் யுத்தகாண்டம்

ஒற்றுக்கேள்விப்படலம் ௬-வது கவி.

இராமன் நளனைப் புகழ்தல்.

நின்றுநெடி துன்னியதிரைக்கடனிரம்பக்
குன்றுகொடடைத்தணைகுயிற்றியதொர்கொள்கை
யன்றுலகுதந்தமுதலந்தணனமைத்தான்
என்றபொழுதின்கணுமிதென்றியலுமென்றான்.

என்றதுகாண்க.

சூரியனைத் தனது சாணையிற் பிடித்துக் கடைந்தான் துவட்டாவென்ற விசுவகர்மன் என்றதற்குப் பிரயோகம்.—

கம்பராமாயணம் யுத்தகாண்டம் தேரேறுபடலம் ௰-வது கவி.

கடல்கடைந்தமால்வரையினைச்சுற்றியகயிற்றின்
அடல்கடந்ததோளலங்குபோர்வலயங்களிலங்க
உடல்கடைந்தகாளொளியவனுதிர்த்தபொற்கதிரின்
சுடர்தயங்குறக்குண்டலஞ்செவியிடைத்தூக்கி.

என்றதுகாண்க. இன்னும்

திரிசிரபுரம் மஹாவித்துவான் மீனாட்சிசுந்தரம்
பிள்ளையவர்களியற்றிய

திருக்குடந்தைப்புராணம் சூரியன் பூசித்தபடலம் கச-வது கவி.

கதிரவன்வருதல்கண்டகடுவலித்துவட்டாவென்போன்
அதிர்தரப்பிடித்துச்சாணையகத்திட்டுக்கதிர்களெல்லா
முதிர்தரத்தேய்த்தான்வெய்யகிரணங்களொழிதலாலே
பிதிர்தலின்மதியம்போன்றான்பிறங்கொளியமைந்தவானோன்.

என்றுங் கூறியதுணர்க.

2-வது சிந்தில் பிரகஸ்பதி தங்கை யோகசித்தி யென்பவள் விசுவகர்மன் தாய் என்றதை முன்னர்க்கூறிய தமிழ்ப்பெயரகராதி இரண்டாம்புத்தகம் 150-பக்கம் யோகசித்தி என்றபதத்தைப்பார்க்க விளங்கும்.

இந்திரன் வணங்கும் குருவாகிய பிரகஸ்பதி

துவஷ்டா என்றதற்குச் சான்று.—

யஜுர்வேதம் 2-வதுகாண்டம் 5-வது ப்ரஸ்நம் 1-வது பஞ்சாதி.

இந்த்ரோ வை த்வாஷ்ட்ரஃ புரோஹிதஃ தேவாநாமாஸீத் ।

இந்த்ரோவைத்வாஷ்ட்ர புரோஹிதஹ தேவாநாமாஸீத்.

என்றதுணர்க.

3-வது சிந்தில் மனுவே சிவனென்றும் மயனே விஷ்ணுவென்றும் த்வஷ்டாவே ப்ரம்மனென்றும் சிற்பியே இந்திரனென்றும் விஸ்வக்ஞனே சூரியனென்றும் சொன்னதற்காதாரம்.—

ஸ்காந்தபுராணம் நாகரகாண்டம் 6-வது அத்தியாயம்

453-வது சுலோகம்.

விஶ்வாத்ரிலோகலோகாநாம்
பாலகஶ்சைத்ரிவைஶ்ருணு ।
மநுஸ்ஸ்வாதீஶ்வரோநாம
விஷ்ணுர்நாமமயஸ்ததா ।
ப்ரஹ்மாநாமஹித்வஷ்டா
ஶில்பீந்த்ரோஹந்துநாமக: ।
தக்ஷாநிவஸ[illegible]நாமேஶ்வ
விஶ்வஜ்ஞஸ்ஸூர்யநாமக: ।

விச்வா திலோகலோகானும்
பாலகஸ்சை திவைச்ருணு
மனுஸ்பாதிஸ்வரோராமா
விஷ்ணும்நாமமயஸ்தகா

ப்ராம்ஹாநாமபவேத்வஷ்டா
சில்பிமாஹேந்த்ரநாமகஹ
தக்ஷாவிஸூர்யநாமஸ்ய
விச்வகர்ம்மாக்ரநந்தனஹ.

என்று கூறியது காண்க.

ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தன.

4-வது சிந்தில் ஔபாசனுக்னி கோத்திரமுதலிய கிரியைகள் நடாத்தும் பிராம்ஹண வம்சாச்சார்ய வேதபாரக செகத்குரு விசுவகர்மா என்று புகன்றதற்குதாரணம்.—

நாகரகாண்டம் 6-வது அத்தியாயம் 438-வது சுலோகம்.

𑌔𑌪𑌾𑌸𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌂𑌚
𑌭𑌕𑍍𑌤𑌿𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌵𑌂𑌶𑌵𑌾𑌨𑍍
𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌣𑌿
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑍇𑌦𑌪𑌾𑌰𑌗𑌃 ।
𑌏𑌤𑌂𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌮𑌹𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌿
𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌜𑌗𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌃 ।

ஔபாசநாக்னிஹோத்ரஞ்ச
பக்திப்ராம்ஹணவம்சவான்
தர்மார்த்தகாமமோக்ஷாணி
ஆச்சார்யவேதபாரகஹ
ஏதம்க்ருத்வாமஹாமூர்த்தி
விச்வகர்ம்மாஜகத்குரு:

என்று கூறியது காண்க.

சகத்துக்குங் குருவென்றவும்மை இறந்தது தழீஇய எச்சமாகக் கொண்டு தேவலோகத்துக்குங் குருவென்றும் கொள்ளலாம்.

4-வது சிந்தில் மனுவே திதிரூபமாகவும் மயனே வாரரூபமாகவும் துவஷ்டாவே நக்ஷத்திரரூபமாகவும் சிற்பியே யோகரூபமாகவும் விசுவக்ஞனே கரணரூபமாகவும் தோன்றுகின்றார்கள் என்று சொல்லியதற்குச்சான்று.—

மூலஸ்தம்பம் சுலோகம்.

𑌤𑍍𑌰𑌿𑌰𑍂𑌪𑌂 𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂
𑌵𑌾𑌰𑌸𑍍𑌯 𑌮𑌯𑌸𑌂𑌭𑌵𑌃 ।
𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌰𑍂𑌪𑌂 𑌚
𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌕𑌰𑌣𑌂 𑌚𑍈𑌵
𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑌮𑌿𑌤𑌿 𑌦𑍇𑌵𑌤𑌾 ।

த்திரூபம்மனுப்ரோக்தம்
வாரஸ்யமயஸம்பவஹ
நக்ஷத்ரம் த்வஷ்டரூபஞ்ச
சிலபியோகம்ததைவச
விச்வக்ஞாகரணம்சைவ
பஞ்சாங்கமதிதேவதா.

என்றதுகாண்க.

ஏகாரம் தேற்றம்.

6-வது சிந்தில் இந்திரனுக்கு வச்சிராயுதஞ் செய்து ஆசிர்வதித்துக் கொடுத்தான் கம்மியன் என்றதற்குச் சான்று.—

திருவிளையாடற்புராணம் இந்திரன் பழிதீர்த்தபடலம் 36-வது கவி.

அம்முனிவள்ளலீந்தவடுபடைமுதுகந்தண்டைத்
தெம்முனைபடுபோர்சாய்க்குந்திறல்கெழுகுலிசஞ்செய்து
கம்மியப்புலவனுக்கக்கரைந்துகைகொடுப்பவாங்கி
மைம்முகிலூர்தியேந்திமின்விடுமழைபோனின்றான்.

என்றதுகாண்க.

சூரபன்மன் தேவி பதுமகோமளை என்பவளது பிதா தெய்வத் தச்சன் எனக் கூறியதற்காதாரம்.—

கந்தபுராணம் அரசுசெய்படலம் 11-வது கவி.

மதிமுகத் திருவேபோல்வாள் §வானவர்புனைவன் றந்த
பதுமகோமளையென்றோதும்பாவையைப்புகரோனடிச்
சதுர்முகன் முதலாந்தேவர்தானவர்பிறரும்போற்ற
விதிமுறைவதுவைசெய்துவிழைவொடுமேவியுற்றான்.

என விளம்பியதுணர்க.

§ வானவர்புனைவன் = தேவகம்மியன்.

7-வது சிந்தில் குபேரன் மனையாள் சித்திரரேகை என்பவள் தெய்வக்கம்மியன் மகளென்றதை விசுவகர்மசுதா சித்திரரேகை என்னும் பதங்களை முற்கூறிய அகராதியிலும் யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் தொகுத்த அகராதியிலும் பார்க்க விளங்கும்.

சித்திரை நக்ஷத்திரத்துக் கதிதேவதை விசுமகர்மா என்றதை
சந்திரசேகர கவிராஜ பண்டிதரியற்றிய வருஷாதிநூல்
28-வது பக்கத்தைப் பார்க்கவும்.

மழைவேண்டிக்கடவுட்பரவல்.

கலிப்பா.

வானோக்கி வாழுமுலகெல்லா மனமகிழ்ந்து
தானோக்கும் புருடார்த்தந் தருவிசுவ கருமாவாம்
மேனோக்க மானவிசு வேசருண் மழைவேண்டித்
தேனோக்கு மொழியாரத் தேவைநினைந் தேத்துவரே.

சிந்து.

விந்தையுறும் புவிபரவும் விசுவேசு வரனே
விமலையருண் மதம்பொழியும் வேழமுகப் பரனே
அந்தமர கதகலப மான¶சிகா வளமே
யணிதிகழி ராறுபுயத் தாறுமுகா வளமே.

தந்தமலர்ப் பொழினறவந் தலத்துவழுக் கெடுக்கும்
தயைபுரிகா மாட்சியெமைத் தழுவியருள் கொடுக்கும்
இந்தவிதம் பலமகிமை யிலங்குபுகழ் மாந்தை
எனுநகருண் மழைபொழிவா னினிதருள்செய் வீரே.

இந்த வுறுப்புக்கலிப்பாவில் மனிதரடையவேண்டிய தருமார்த்த காம மோக்ஷமென்னு நான்கு புருஷார்த்தங்களை யருள்பவர் விசுவகருமா என்றதற்கு ஆதாரம்.—

ஸ்காந்தபுராணம் நாகரகாண்டம் 1-வது அத்யாயம்
73-வது சுலோகம்.

𑌇𑌦𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑍍𑌰𑌦𑌂 𑌸𑌾𑌧𑍁
𑌶𑍍𑌰𑍋𑌤𑍄𑌣𑌾𑌮𑌪𑌿 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌦𑌮𑍍
𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌣𑌾𑌂
𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌃

இதம்புண்யப்ரதம்சாது
ச்ரோத்ருணாமபிமுக்திதம்
தர்மார்த்தகாமமோக்ஷாணாம்
புராணம்விச்வகர்மண ஹ.

சிந்துக்குறிப்புரை:—சிகாவளம்=மயில் ¶எய் அணி=பொருந்திய அழகு, நறவம்=தேன், வழுக்கு எடுக்கும்=வழுக்கலெடுக்கும், கொடுக்கும்=கொடுப்பன், நறவம் என்பதில் அம் சாரியை.

கொடுக்குமென்றது செய்யுமென் வாய்பாட்டு வினைமுற்றுச்சொல்.

மழைக்குறியோர்தல்.

கலிப்பா.

தனமறையோர் குலகுருவா சாரிசங்க ராச்சாரி
கனதுவட்டா மகன்விசுவ கன்மப்பி ராமணனே
மனமையம்வேண் டாமெனுமேன் மக்களுரை மழைக்குறிகள்
இனமுறவே யுணர்ந்தவுழத் தியர்மகிழ்ந்து ளைத்துவரே.

சிந்து.

வெள்ளமுட்டை கொண்டெறும்பு மேட்டி லேறுதே—மலை
மீதுமஞ்சு தான்றவழ்ந்திப் போது கூடுதே
பள்ளமதி னீர்த்தவளை துள்ளி யார்க்குதே—வானம்
பாடியாடித் தன்னினத்தைக் கூடச் சேர்க்குதே
உள்ளமகிழ்ந் தன்றிற்குரல் வெள்ளமாக் கேட்கே—ஞெண்டு
மோடியோடிச் சேற்றின்குழி மூடிக் கொள்ளுதே
தெள்ளுதமிழ் மாந்தைப்பண்ணைப் பள்ளரே நன்றாய்—மழை
செழிக்கவும்பெய் யுஞ்செல்வங்கள் கொழிக்க வுந்தானே.
மெத்தமழை பெய்யுங்கா ணு நித்த நொம்பவே—யந்த
வேளைமண்வெட் டியுடனே கூடையும் வேண்டும்
புத்தியுட னெண்ணெய்பந்தம் பத்திரம் பண்ணவும்—வேண்டும்
போதலுக்குச் சூந்துக்கம்புத் தீபமும் வேண்டும்
பத்தியுடன் கொங்காணியுங் கூடையும் வேண்டுங்—கம்பும்
பல்லியமுங் கூடவரப் பார்க்கவும் வேண்டும்
கத்தர்விசு வேசர்பதம் பத்தியாய்ப் பணியுங்—தெய்வக்
கம்மியர்கள் வாழுமாந்தைப் பண்ணைப் பள்ளரே.

இவ்வுறுப்புக் கலிப்பாவில் ப்ரம்மகுலகுருவாகிய சங்காச்சாரி துவஷ்டாவின் புத்திரனாகிய விசுவப்ராம்மணனே என்று கூறியதற்காதாரம்.

அத்வைத வேதாந்த ஸ்தாபகராகிய சங்கராச்சார்ய சுவாமிகள் ஜெகத்குருவென்ற பட்டம் வைத்துக்கொண்டு முசலிப்பட்டினத்தில் யாத்திரையாகத் தங்கிய காலத்திற் றென்னிந்தியா தேவகம்மாள ரொருங்குசேர்ந்து ஜெகத்குரு என்பவர்கள் விசுவப்ராமணராகிய நாங்கள் அன்றி நீர் ஜெகத்குரு அன்று என்று அந்தச் சங்கராச்சார்ய சுவாமிகளை வினவியவேளை அச்சங்காச்சார்ய சுவாமிகள் கூறிய விடையாகிய சுலோகம் சங்கர விஜயம் என்ற கிரந்த நூலில் உள்ளது.

அந்தச் சுலோகம்.

𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌶𑍍𑌶𑌙𑍍𑌕𑌰𑍋𑌨𑌾𑌮
𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑍃𑌪𑍁𑌤𑍍𑌰𑍋𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 ।
𑌵𑌿𑌪𑍍𑌰𑌕𑍁𑌲𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌦𑍀𑌕𑍍𑌷𑌾
𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌨𑍍𑌤𑍁𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 ॥

ஆச்சார்யோசங்கரோநாமா
த்வஷ்டபுத்ரநசம்சயஹ
விப்ரகுலகுரோர்தீக்ஷா
விச்வகர்மந்துப்ராம்ஹண:

என்றது காண்க.

இந்த சுலோகத்தையும் முன்கூறிய விஷயத்தையும் ஆல்பிரெட் எட்வர்டு ராபெர்ட்ஸ் என்பவராலும் இலங்கை ஹைகோர்ட்டு ஜட்ஜி இரத்தின ஜெனேந்த்ரா இரத்தினவயிரா என்பவராலும் 1909ஹ சிலோன் அப்ஸர்வர் பிரஸிற் பதிப்பிக்கப்பெற்ற விசுவகரும விஷயம் புகலும் இங்கிலீஷ் பாஷையாலமைந்த புத்தகம் 9, 10-வது பக்கத்தைப் பார்க்க விளங்கும்.

மழை பொழிதல்.

கலிப்பா.

சிந்தைமகிழ் விசுவகன்மன் றீர்க்காயு ளெனக்களித்தான்
அந்தநன்மைக் கியானவனுக் கணிவிருதா யமைவனென்று
வந்தவனு மக்கொடிக்கம் மாளர்மக மேருவின்மேற்
கந்தரவான் மழைபொழிந்த காட்சியைநாம் பேசுதுமே.

சிந்து.

மேனி லம்புகழ் தட்டார் கைமலர்
விளங்கு வெண்பொற் றகடென
வெண்மை நிறங்கொண் டெழுந்த மேகம்
விரிகடற்சலம் பருகியே

உழத்திப்பாட்டு.

மானி லந்தனி லன்னோர் கரத்தில்
வயங்கு நீல மணியென
வான கந்தனிற் படர்ந்து மன்னவர்
வழங்கும் பொற்பணி மின்னெனத்
தான கந்திகழ் கின்ற மின்னற்
றடித்து விளங்கப் பாட்டுடைத்
தலைவ னெனுங்கம் மாள ரவர்சந்
ததமு கிழ்ந்தருள் கொடையென
நானி லம்புக ழேமம யமின்
னொரு மேரு வரையின்மேல்
ஞாலஞ் செழிக்கப் பொழிந்த தெங்கள்கண்
ணுளர் வாகன மேகமே.

இந்த வுறுப்புக் கலிப்பாவில் அநுமனுக்குத் தீர்க்காயுளருளிய விசுவகன்மன் என்று புகன்றதை கம்பராமாயணம் உத்தரகாண்டம் அநுமப்படலம் ௩௮-வது கவியாலறிக.

அயனும் விசுவகன்மனும் வரமளித்தல்.

தாதாவுரைக்குமென்பிரமதண்டாற்றுஞ்சாவின்றி
மேதாவியுமாயொருநாளும்விளியாநாளுமுறுகவென
தீதாயினர்வேரறுக்குமிவன்றேவர்படையாற்செருக்களத்தில்
வாதாமகன்சாவொழிகவெனவானோர்தச்சன்வரங்கொடுத்தான்.

என்றது காண்க.

ஆற்றின் வரவு.

குறிஞ்சித்திணைக்

கலிப்பா.

திண்ணியவெற் பன்கொடிச்சி சிறுகுடிதொண் டகமலைநெல்
நண்ணியயாழ் பண்குறிஞ்சி நல்லகிழங் கெடுத்தலொடும்
எண்ணருவி நீருமுறீஇ யிலங்குபல கருப்பொருளார்
வண்ணமலை யுங்குலுங்க வந்ததுநீர் மண்டலத்தே.

மாந்தை

சிந்து.

காா மலைய வேங்கை யும்புகழ்
ஆர மலைய வேங்கையும்
கரடக் குஞ்சரக் கூட்டை யுங்குற
வரடக் குஞ்சரக் கூட்டையும்

வார மரக்கண் ணுகுத்தி டும்புனல்
வார மரக்கண் முலையுற
மயக்கம் பொடித்த லாக மகளிர்
மயக்கம் பொடித்துக் கொண்டுமே

தீர மடங்சல் கொடும்பு விகொள
கோர மடங்கப் பரவியும்
செங்காந் தளவிர் குறிஞ்சி மலரும்
அங்காந் தலமெங் கணுமுறச்

சார பொழிய கிளிக்கு றவராங்
நேர மொழிய முழங்கியே
சண்மு கன்பதம் பணிந்து வெள்ளமும்
அண்மு வந்தது பாலையே.

இக்குறிஞ்சித்திணைக் கலிப்பாச்சிந்து முதல் நெய்தற்றிணைக் கலிப் பாச் சிந்து ஈறுகவுள்ள ஐந்திணைக் கலிப்பாச்சிந்தில் ஒவ்வொரு திணைக்குரிய கருப்பொருள் மிகூ தோன்றுதல் காண்க. கலிப்பாக் கருப்பொருட்குறிப்பு சிந்துக்குப் பதவுரையுமெழுதியிருக்கின்றன.

கருப்பொருள் :— தெய்வம் தலைவன் தலைவி ஆடவர் மகளிர் விலங்கு பறவை யாழ் பண் செய்தி ஊர் முதலியன.

கலிப்பாக்கருப்பொருட்

குறிப்பு.

குறிஞ்சிக்கு தலைமகன்—வெற்பன், தலைமகள்—கொடிச்சி, ஊர்—சிறுகுடி, பறை-தொண்டகம், உணவு-மலைநெல், யாழ்-குறிஞ்சியாழ், பண்—குறிஞ்சிப்பண், செய்தி—கிழங்கெடுத்தல், நீர்-அருவிநீர்.

சிந்துப்

பதவுரை.

கார் அம் மலைய வேங்கையும்=மேகம்படிந்த அழகிய குறிஞ்சி நிலத்திற்றங்குவனவான புலிகளையும், புகழ் ஆரம் அலைய வேங்கையும்=புகழ்கின்ற சந்தனமரங்களசைய வேங்கை மரங்களையும், கரடக் குஞ்சரக் கூட்டையும்=மதத்தையுடைய யானைக்கூட்டங்களையும், குறவர் அடக்கும் சரக் கூட்டையும், குன்றவரடக்கியபாணங்களுடைய அம்பறாத்தூணிகளையும், வார் அம் அரக் கண் உகுத்திடும் புனல்=நீண்ட அழகிய அரம்போன்ற விழிகள் சொரியுநீர், வார் அமர் அக்கண் முலையுற=கச்சுப்பொருந்திய அந்தத் துவாரமுள்ள தனத்திற்சார, மயக்கம் பொடித்தல் ஆக மகளிர்=மயக்கமும் மயிர்சிலிர்த்தலும் பெண்களுக்குண்டாக, மயக் கம்பு ஒடித்துக் கொண்டும்=அழகையுடைய மரக்கொம்புகளை முறித்துக்கொண்டும், தீர மடங்கல் கொடும் புலி கொள் அகோரம் அடங்கப் பரவியும்=பலம்பொருந்தியசிங்கம் கொடுமையானபுலி இவைகொண்ட உக்கிர ஹம் சுருங்க விரிந்தும், செங் காந்தள் அவிர் குறிஞ்சி மலரும் அங்கு ஆம் தளம் எங்கணும் உற=சிவந்த காந்தண்மரமும் விளங்குகின்ற குறிஞ்சிப்புட்பமும் அவ்விடத்திலாகிய நிலத்தின் றளமெங்கும் பொருந்த, சார மொழிய கிளிக் குறவர் அந்நேரம் ஒழிய முழங்கி=இனிமையான வார்த்தைகள் பேசுகின்ற கிளிகளையுடைய குன்றவரந்தச் சமையம் நீங்க ஒலித்து, சண்முகன் பதம் பணிந்து வெள்ளமும் அண்மு வந்தது பாலை=முருகன் பாதத்தை வணங்கி நதிப்ரவாகமும் பொருந்தி வரலாயிற்று பாலை நிலத்தில்.

புகழ் வினைத்தொகை, ஏகாரம் ஈற்றசை.

இந்தச் சிந்திற்கூறிய சண்முகன் குறவர் குறத்தியர் சிங்கம் வேங்கை யானை கிளி காந்தள் குறிஞ்சி இவை முறையே இத்திணைக்குரிய

தெய்வம்
ஆடவர்
மகளிர்
மிருகம்
பறவை

மரம்
புட்பம் என்றுணர்க.

இந்த ஏழு கருப்பொருள் கலிப்பாவிற்றோன்றிய கருப்பொரு ளுஞ்சேரப் பதினாறு கருப்பொருள் வந்தன காண்க.

பாலைத்திணைக்

கலிப்பா.

விஞ்சுரஞ்சேர் பேதைபுணர் விடலைதிகழ் கொல்குறும்பு
பஞ்சுரப்பண் போர்ப்பறையாழ் பாலைநீர் வற்றுசுனை
அஞ்சுரபி கொள்ளுதலோ டூர்க்கொள்ளை யடித்தனவார்
வெஞ்சுரமென் றுரைபாலை விட்டெழுந்த அயர்நதியே.

சிந்து.

எழுந்த நதியங் கழுந்திப் புரளும்
இருப்பை யுஞ்சிறு பொருப்பையும்
எயின ருதுங் கொம்மை யுமவர்
எய்யுஞ் சிலையி னம்மையும்

விழுந்த மகளிர் சிலை யுந்திகழ்
கொழுந்து சுருண்ட பாலையும்
விளங்கு மெலியும் வலிய ழிந்தகந்
துளங்கும் புலியு மானையும்

அழிந்த சிறையின் பருந்தை யுமதிற்
கழிந்து குறைந்த முருந்தையும்
அணியி லங்கும ராம லர்கொடுங்
கணியி லங்குகு ராமுற்றும்

பொழிந்த கருணை யுபய விழிகொள்
தொழுந்த கையு றுங் காளியின்
பொன்னி லவடி பணிந்து முல்லையின்
நன்னி லமுறப் பாய்ந்ததே.

கலிப்பாக்கருப்பொருட்

குறிப்பு.

பாலைக்கு தலைமகள்—பேதை, தலைமகன்—விடலை, ஊர்—கொல் குறும்பு. பண்—பஞ்சுரம், பறை—போர்ப்பறை, யாழ்—பாலையாழ், நீர்—வற்றின சுனை, செய்தி-பசுக்கொள்ளுதல், உணவு-ஊர்க்கொள்ளை யடித்தன.

சிந்துக்குப்

பதவுரை.

எழுந்த நதி யங்கு அழுந்திப் புரளும் இருப்பையும் சிறு பொருப்பையும் = மேலே கிளம்பிய நதி அவ்விடத்துப் பதிந்துருண்டு வருகின்ற இலுப்பை மரங்களையும் சிறிய குன்றுகளையும், எயினர் ஊதும் கொம்பையும் அவர் எய்யுஞ் சிலையின் அம்பையும் = பாலை நிலத்தாடவரூதுங் கொம்புகளையும் அந்த ஆடவரேவும் வில்லின் கண்ணுள்ள பாணங்களையும், விழுந்த மகளிர் சிலையும் = வீழ்ந்த எயிற்றியரென்னும் பெண்கள் சிலைகளையும், திகழ் கொழுந்து அருண்ட பாலையும் = விளங்கிய கொழுந்து வளர்ந்துள்ள பாலை மரங்களையும், விளங்கும் எலியும் = தோன்றுகின்ற எலிகளையும், வலி அழிந்து அகம் துளங்கும் புலியும் ஆனையும் = வன்மைகெட்டு மனங்கலங்கும் புலிகளையும் ஆனைகளையும், அழிந்த சிறையின் பருந்தையும் = இறந்த இறகுகளையுடைய பருந்துகளையும், அதிற் கழிந்து குறைந்த முருந்தையும் = அவ்விடத்தில் வெட்டுண்டுதள்ளிய குறைபட்ட மரத்தினடிகளையும், அணி இலங்கு மரா மலர் கொடும் = ஆபரணங்களையும் மரா மரங்களையும் மரா மலர்களையும், கணி இலங்கு குரா முற்றும் = பூங்கண்ணிதோன்றிய குரவுமலர் முதலான பொருள்களெல்லாங்கொண்டும், பொழிந்த கருணை யுபய விழி கொள் தொழும் தகையுறும் காளியின் = சொரிந்த கிருபை நிறைந்த இரண்டு நயனங்களைக் கொண்ட வணங்கு மகிமையுற்ற காளியம்மையின், பொன் நிலவு அடி பணிந்து = அழகு விளங்கும் பாதத்தைப்பரவி, முல்லை மின் நல் நிலம் உறப் பாய்ந்தது = முல்லைப்புட்ப மிலங்கும் நல்ல முல்லை நிலஞ் சாரப் பாய்ந்தது.

நதி எழுவாய், பாய்ந்தது பயனிலை.
கணி கண்ணி, இது இடைக்குறை.
அணி இலங்கு மரா மலர்.
கணி இலங்கு குரா முற்றும் கொடும்
என்று கொண்டு கூட்டுக.

ஏகாரம் ஈற்றசை.
கருப்பொருள் செயப்படுபொருள்.
உம்மை முற்றும்மை.

நல் நிலம் நன்னிலம் இது.
னலமுன் றனவும் ளளமுன் டணவும்
ஆகுந் தநக்க ளாயுங் காலே.

என்றவிதி.

இந்தச் சிந்திற் கூறிய கருப்பொருள்களான காளி எயினர் மக ளிர் புலி யானை பருந்து இருப்பை பாலை மரா குரா மலர் இவை எழும் முறையே இத்திணைக்குரிய

தெய்வம்
ஆடவர்
எயிற்றியரென்ற மகளிர்
மிருகம்
பறவை
மரம்
புட்பம் என்றுணர்க.

இந்த எழு கருப்பொருள் கலிப்பாவிற்றோன்றிய கருப்பொரு ளும்சேர பதினாறு கருப்பொருள் வந்தன காண்க.

முல்லைத்திணைக்

கலிப்பா.

சொல்லிசையார் குழலூதல் தோன்றலுறு முல்லையாழ்
நல்லபண்சா தாரிகான் யாறேறு கோட்பறையே
பல்லபிர ணவக்கொன்றை பாடியுஞ்சேர் சோலையுலாம்
முல்லைநில வைப்பிலுற்று முழங்கிநதி கிளம்பியதே.

சிந்து.

தாக்க ணங்கணி விழுந்த முயலுந்
தாக்க ணங்கனி கிழத்தியும்
தந்தி டையரு மோடக் கண்டவண்
வந்தி டையருங் கூடவே.

தேக்கு வரகு திகளென் றேத
ஆக்கு வரகு சாமையும்
சேரங் கொன்றை யோதி மாதர்
நேரங் கொன்றை மயிலொடும்.

நோக்கம் பரவு மான்க ளும்பிறழ்
நோக்கம் பரவு மான்களும்
நூறு தோன்றி முல்லை யுடனங்
காறு தோன்றிக் கதியொடும்.
காக்கும் புகழ்கொண் மாலைப் பணிந்தக்
காக்கும் புகளைக் கடந்துமே
கன்னல் செந்நெ லன்ன மூர்திகழ்
கழனி மருதம் பாய்ந்தமே.

கலிப்பாக் கருப்பொருட்

குறிப்பு.

முல்லைக்கு செய்தி குழலூதல் தலைமகன் தோன்றல். யாழ்—முல்லையாழ், பண்—சாதாரி, நீர்—கான்யாறு, பறை—ஏறுகோட்பறை, மரம்—கொன்றை, ஊர்—பாடி. 8

சிந்துக்குப்

பதவுரை.

தாக்கு அணங்கு அணி விழுந்த முயலும் = பாய்ந்த துன்பமுற்று வீழ்ந்த முயல்களும், தாக்கணங்கு அணிகிழத்தியும் = இலக்குமி நிகர அழகுள்ள கிழத்தியும், தந்து இடையரும் ஓடக் கண்டு அவண் வந்து இடையரும் கூட = நூலையொத்த மருங்குலுற்ற ஆய்ச்சியரு மோடப்பார்த்து அவ்விடத்திற்சேர்ந்து ஆயருந்தழுவ, தெக்குவர் அகுதிகள் என்று ஓத = தியங்குவார்கள் வறுமையாளரென்றுகூறும் வண்ணம், ஆக்கு வரகு சாமையும் = உண்டாக்கிய வரகுஞ் சாமையும், சேர் அம் கொன்றை யோதி மாதர் நேர் அங்கு ஒன்று ஐ மயிலொடும் = சேர்ந்த அழகிய கொன்றைக்காய் போன்ற கூந்தலுற்ற பெண்களுக்குச் சமானமாக அங்குற்ற மயிலொடும், நோக்கம் பரவும் ஆன்களும் = உயர்ச்சியுற்ற எல்லாருந் தொழும் பசுக்களும், பிறழ் நோக்கம் பரவு மான்களும் = பிறழ்கின்ற கண்ணகன்ற மான்களும், நூறு தோன்றி முல்லையுடன் அங்கு ஆறு தோன்றிக் கதியொடும் = அழிந்த தோன்றி மலரு முல்லைமலருங்கொண்டு ஆற்றில்வரும் வெள்ளம் வெளிப்பட்டு வேகத்தோடும், காக்கும் புகழ் கொள் மாலைப் பணிந்து = புவி

யைப் புரக்குங் கீர்த்தியைக்கொண்ட திருமாலை வணங்கி, அக் காகும்புகளைக் கடந்தும் = அந்தச் சோலைக் கூட்டத்தை நீங்கியும், கன்னல் செந்நெல் அன்னமுந் திகழ் கழனி மருதம் பாய்ந்தது = கரும்பும் சிவந்தநெல்லும் அன்னப்பட்சியும் விளங்கும் வயலுற்ற மருதநிலத்திற் பெருகினது.

ஆக்கு வினைத்தொகை, கொன்றை பொருளாகுபெயர்.
மடவார்போன்ற மயில் என்றது எதிர் நிலையணி.
தோன்றி முல்லை யும்மைத்தொகை.
கன்னல் செந்நெல் அன்னமும் என்ற வும்மை.
செவ்வெண் ஏகாரம் ஈற்றசை.

இந்தச் சிந்திற் கூறிய கருப்பொருள்களான

திருமால்
கிழத்தி
இடையர்
இடையர் என்ற ஆய்ச்சியர்
பசு மான் முயல்
மயில்
வரகு சாமை
தோன்றி முல்லை இவை

முறையே இத்திணைக்குரிய

தெய்வம்
தலைமகள்
ஆடவர்
மகளிர்
விலங்கு
பறவை
உணவு
புட்பம்

என்றுணர்க.

இந்த எட்டுக் கருப்பொருள் கலிப்பாவிற் றோன்றியகருப் பொருளுஞ்சேரப் பதினாறு கருப்பொருள் வந்தன காண்க.

மருதத்திணைக்

கலிப்பா.

பெருகுபுனல் சூழ்ந்திலங்கும் பேரூர்நென் மனைக்கிணறு
வருகளையே பறித்தலொடு மணமுழா வுழவரிசை
தருகனயாழ் பண்மருதஞ் சார்மகிழ்நன் மனைவியுற்ற
மருதநிலம் படிந்தொளிசெய் வளநதிதா னீங்கியதே.

சிந்து.

பெருத மாமுற் றெழுந்த நதியம்
மருத மாமுங் காஞ்சியும்
பிறங்கு மருமைக் கூட்டம் போலங்
குறங்கு மெருமை யீட்டமும்.

கருவண் டான மரையுங் கலங்கி
வருவண் டான மரைகளும்
கரும்பி ரசமு மலரின் மேல
விரும்பி ரசமுங் கலப்புற.

அருகு வளைசங் கினங்க ளுங்கமழ்
தருகு வளையு மாமையும்
ஆய மாத ரணிக ளும்பல
ஆய மாத ரணிகளும்.

மருத நிலத்தில்வரன்றிக் கம்மியர்
மருவும் புகழின் பரப்பென
வைய மீது படார்ந்திந் திரனை
வணங்கி நெய்தலிற் பாய்ந்ததே.

கலிப்பாக்கருப்பொருட்

குறிப்பு.

மருதத்துக்கு ஊர்=பேரூர்; உணவு=நெல்; நீர்=மனைக்கிணறு; செய்தி=களைபறித்தல்; பறை=மணமுழா; ஆடவர்=உழவர்; யாழ்=மருதயாழ்; பண்=மருதம்; தலைமகன்=மகிழ்நன்; தலைமகள்=மனைவி. 10.

சிந்துக்குப்

பதவுரை.

பெருந் தமரம் உற்று எழுந்த நதி—பெரிய ஒலிபொருந்தி எழுந்த நதியானது, அம் மருதமரமுங் காஞ்சியும்—அழகிய மருதமரங்களும் காஞ்சிமரங்களும், பிறங்கும் அரு மைக் கூட்டம் போல் அங்கு உறங்கும் எருமை ஈட்டமும்—விளங்குகின்ற அருமையான மேகக்குழாம்போல அவ்விடத்திற் றூங்கு மெருமைக்கூட்டங்களும், கரு வண்டு ஆன மரையுங்—கருமை நிறமுற்ற வண்டுகள் படிந்த தாமரை மலர்களும், கலங்கி வரு வண்டானம் மரைகளும்—துன்பமுற்று வருகின்ற நாரைகளும் தவளைகளும், கரும்பு இரசமும் மலரின் மேல் அவிரும் பிரசமும் கலப்பு உற—கரும்பின் சாறும் புட்பத்தின் மேல் விளங்குகின்ற தேனும் கலந்து சேர, அருகு வளை சங்கு இனங்களும்—பக்கத்து வளைந்த சங்குக் கூட்டங்களும், கமழ் தரு குவளையும் ஆமையும்—மணக்கின்ற குவளைமலர்களும் ஆமைகளும், ஆப மாதர் அணிகளும்—உண்டாகிய அழகிய ஆபரணங்களும், பல ஆய மாதர் அணிகளும்—அநேக கூட்டமாகிய பெண்களையும், மருத நிலத்தில் வரன்றிக் கம்மியர் மருவும் புகழின் பரப்பு என—மருதநிலக்கண் வாரிக்கண்ணுளர் சேர்ந்த கீர்த்தியின் விரிவென்று சொல்ல, வைய மீது படர்ந்து—பூமிமேல் விரிந்து, இந்திரனை வணங்கி நெய்தலிற் பாய்ந்தது—தெய்வேந்திரனைப் பணிந்து நெய்தனிலத்திற் பாய்ந்தது.

கருமை என்ற பண்புப்பெயர் மை விகுதிக் கெட்டுக் கரு என்று நின்றது. தாமரை என்னும் பதம் முதல் குறைந்து மரை என்று நின்றது. ஏகாரம் ஈற்றிசை.

இந்தச் சிந்திற் கூறிய கருப்பொருள்களான, இந்திரன், மகளிர், எருமை, நாரை, மருதமரம், காஞ்சி, தாமரை, குவளை இவை முறையே இத்திணைக்குரிய

தெய்வம்
மகளிர் என்ற உழத்தியர்
விலங்கு
பறவை

மரம்
மலர்
என்றறிக.

இந்த ஆறு கருப்பொருள் கலிப்பாவிற் றோன்றிய கருப்பொருளுஞ் சேரப் பதினாறு கருப்பொருள் வந்தன காண்க.

நெய்தற்றிணைக்

கலிப்பா.

செய்யநெய்தன் மணற்கிணறு சேர்பரதர் றளைச்சிகொண்கன்
வெய்யசுறு செவ்வழிப்பண் விளரியாழ் மீன்விலையே
வையகஞ்சேர் பட்டினநா வாய்ப்பறை மீன்விற்றலுற்ற
நெய்தனில முற்றுமுங்கீர் நிரம்பநதி சேர்ந்ததுவே.

சிந்து.

வெண்மை யோதி மங்க ளிலகு
மொண்மை யோதி மங்கையர்
மேவுந் தாழை முதல பல்பொருள்
யாவுங் கலந்து கொண்டெழீஇ.

வண்மை யான மறைகள் புகலும்
மனுவ வன்முத லவராம்
மகிமைக் கம்மிய ரொருக்கு சேர்ந்து
வாழ்ந்த டுத்தவர்க் கருள்தல்போல்.

திண்மை யைந்திணைக் கருப்பொ ருள்களும்
சேரக் கொண்டருள் வோர்பெயர்
திரிபு வனமுங் கேட்கு மென்றதைத்
தெரித்து மூன்றல கொலிக்கவும்.

கண்ண கம்பெறு புவியின் முழங்கிக்
கலித மூவிய வேந்தனைக்
கனவ ருணனென் றோத மணிபொன்
தனவ ருணந்தந் துற்றதே.

கலிப்பாக்கருப்பொருட்

குறிப்பு.

நெய்தற்கு பூ நெய்தல், நீர் மணற்கிணறு; ஆடவர் பரதர்; தலைமகள் நுளைச்சி; தலைமகன் கொண்கன்; விலங்கு சுறா; பண் செவ்வழி; யாழ் விளரியாழ்; உணவு மீன்விலை; ஊர் பட்டினம்; பறை நாவாய்ப்பறை; செய்தி மீன்விற்றல். 12.

சிந்துக்குப்

பதவுரை.

வெண்மை யோதிமங்கள்=வெண்மைநிறமுற்ற அன்னங்கள், ஒண்மை யோதி மங்கையர்=அழகுள்ள கூந்தலுற்ற பெண்கள்.

எழுந்து என்னும் வினையெச்சச் சொல் எழீஇ என அளபெடுத்தது. இது சொல்லிசையளபெடை.

சொல் விகாரப்பட்டு அளபெடுக்கும் வெரீஇ உறீஇ மரீஇ வெருவி உற்று மருவி முதலியனவும் இதில் அடக்கப்படும். தெரிவித்து என்னும் பிறவினை விகுதி தொக்குத் தெரித்து என்று நின்றது. கலி தழுவிய வேந்தனை சமுத்திரத்தைத் தழீஇக் கொண்ட அரசனை, வருணம்-ஜலம், கலி தழுவிய என்றதற்கு வறுமைப் பிணி சேர்ந்த என்னும் பொருள் நயந் தோன்றுதலுங் காண்க.

இந்தச் சிந்திற் கூறிய கருப்பொருள்களான வருணன் மகளிர் அன்னம் தாழை இவை முறையே இத்திணைக்குரிய

தெய்வம்
பாத்தியர் என்ற மகளிர்
பறவை
மரம்
என்றறிக.

இந்த நான்கு கருப்பொருள் கலிப்பாவிற் றோன்றிய கருப் பொருளுஞ் சேரப் பதினாறு கருப்பொருள் வந்தன காண்க.

கங்கை முதலான நதிவரல்.

கலிப்பா.

அந்தவிருக் கெசுர்சாம மதர்வணஞ்சேர் பிரணவமாம்
விந்தையிசை பாவுமைந்து வேதபா ராயணராம்
கந்தமலர்க் கொல்லர்தச்சர் கன்னர் சிற்பியர்தட்டார்
சிந்தைமகிழ் கங்கைமுதற் சிலநதிவந் துற்றனவே.

சிந்து.

நண்ணார் கெடியைத் தகர்த்துப் பொடித்து
நண்ணா ரினங்கள் விளங்கவும்
நாடும் புவனம் பரவு மகிமை
கூடும் புவனம் பரவியே.

விண்ணார் நதியென் றகமு மகிழ்ந்து
விண்ணா வுடைய ராகவே
வேழக் கரும்புள் ளினமுங் கபமும்
வேழக் கரும்புங் கொண்டுமே.

பண்ணார் மறமொன் ணூர்க ளென்றுநற்
பண்ணார் சொல்லியர் விளம்பவும்
பாவ லர்களும் புகழப் புகழப்
பாவ லர்களுந் திகழவே.

கண்ணா ளரிசை முழுதுந் திரண்டு
கதித்துக் கடித்து வருதல்போற்
கங்கை யாமங் கையர் வரவையுங்
காணுங் காணும் பள்ளீரே.

இந்த வுறுப்புக் கலிப்பாவில் இருக்கு எசுர் சாமம் அதர்வணம் பிரணவம் என்ற ஐந்து வேதபாராயணர் முறையே பாட்டுடைத் தலைவர்களாகிய கொல்லர் தச்சர் கன்னர் சிற்பியர் தட்டார் என்பவர்கள் என்று புகன்றதற்காதாரம்.

வேதம்

𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌂 𑌮𑌨𑍁𑌶𑍈𑌵𑌾
𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌂 𑌮𑌯𑌸𑍍𑌤𑌥𑌾
𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌞𑍍𑌚𑌾
𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑌶𑍍𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌕𑌸𑍍𑌤𑌥𑌾
𑌵𑌿𑌶𑍍𑌵𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌣𑌵𑌵𑍇𑌦𑌂𑌚𑌾
𑌪𑌂𑌚𑌵𑍇𑌦𑌂 𑌤𑍁 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃

ரிக்வேதம்மநுசைவா
யசுர்வேதம்மயஸ்ததா
த்வஷ்டாநாம்சாமவேதஞ்சா
அதர்வணஸ்ஸில்பிகஸ்ததா
விச்வக்ஞாப்ரணவவேதஞ்சா
பஞ்சவேதந்துப்ராம்மண:

என்றது காண்க.

சிந்துக்குறிப்புரை.

நண்ணார் பகைவர் நண்ணு ஆறு இனங்கள்—பொருந்திய யாற் பல நதிவகைகள், புவனப் பரவி—ஜலம் விரிந்து, விண் ஆர் நதி = ஆகாயத்தில் நிறைந்த கங்கைநதி, விள் நா—சொல்கின்ற நாவை, வேழக் கரும் புள் இனமும்—யானையின் மதஜலத்தை யுண்ண வீழ்ந்த கரிய வண்டின் கூட்டமும், வேழக் கரும்பு—ஒருவகை பருத்த நாணற்கரும்பு, பண்ணார் மறம் ஒன்னார்கள்—செய்யார் பாவ வினையைப் பகைவர்கள், பண் ஆர் சொல்லியர்—இராக நிறைந்த மொழி விளம்பும் பெண்கள், பா அலர்—பாவிய மலர்.

பண்வணத்தவலவன் வரவு.

கலிப்பா.

சாற்றுகிரே தந்திரே தந்துவா பரங்கலியென்
ருற்றுலகி லகத்தாற்கண் ஞல்விஞ்சை யாற்காரத்தாற்
ரேற்றுஞ் சிருட்டிபுரி தூயதெய்வத் தட்சகரைப்
போற்றுபண்ணைத் தலைவனென்பான் புந்திமகிழ்ந் துவந்தானே.

சிந்து.

மன்ன ருந்தின மகிழ வருசன்
　　மார்க்கப் பண்ணைத் தலைவனும்
மனும யதுவட் டாசிற் பிவிசு
　　வக்ரு பெனுந்தன் னுதரரள்
உன்ன ருமகந் தோறுங் கனக
　　மொளிர்ம ணிதன தானியம்
உற்றி லங்குதல் போலென் னுரு
　　முயர்ம ணிதன தானியம்
அன்னந் திகழுஞ் செந்நெல் விளையு
　　மணிகண் ணுற்று வயலெல்லாம்
அணிப யிரெழும் படிக்குக் கெழுமி
　　யன்பெ னும்பயிர் முன்னெழத்
தன்ன கமகிழ் கூர்ந்து வரவுந்
　　தன்குற் றேவற் பள்ளியர்
தங்க ளிலொரு மூத்த பள்ளியுஞ்
　　சார்ந்து வந்தனள் பணிந்துமே. (௰

இந்த வுறப்புக் கலிப்பாவிற் கிரேத யுகத்தில் மனத்தால், திரேதயுகத்திற் கண்ணால், துவாபரயுகத்தில் மந்திரத்தால், கலியுகத்திற் கரத்தாற் சிருஷ்டிசெய் தெய்வகம்மாளர் என்று கூறியதற் காரணம்.

ஸ்காந்தபுராணம் நாகரகாண்டம் 5-வது அத்யாயம்
125-வது சுலோகம்.

𑌕𑍃𑌤𑍇 𑌤𑍁 𑌮𑌾𑌨𑌸𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿
𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑌾𑌧𑌨𑌮𑍍
𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰 𑌸𑌂𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌕𑌲𑍌 𑌕𑌰 𑌸𑌮𑌾𑌯𑍁𑌤𑌾

க்ருதேதுமானஸாஸிருஷ்டி
ஸ்த்ரேதாயாம்த்ருஷ்டிஸாதனம்

த்வாபரேமந்த்ரஸிருஷ்டிஸ்யாது
கலௌளதுகர்ஸாதநம்
என்றது காண்க.

மூத்தபள்ளி சாடிகூறல்.

கலிப்பா.

சீருலவு மாந்தைநகர்ச் செல்வரெனுங் கண்ணுளர்
பாருலகெல் லாம்புரக்கும் பண்பெனத்தண் பழனமெல்லாம்
பேருலவக் காத்துவரும் பெரும்பண்ணைக் காரனிடம்
காருலவு மூத்தபள்ளி கணவனைநிந் தித்தனளே.

சிந்து.

என்னைக் கட்டி யிருக்கின்ற போதில்
இளைய பள்ளியை யுங்கட்டிக் கொண்டனன்
உன்னும் போது நினைவவன் மீதில்
உறங்கும் போது நினைவவன் மீதினில்
மன்னுஞ் சின்னத் தனத்தவ ளென்று
மகிழ்ந்து வாரிக் கொடுப்பன் பெருந்தனம்
முன்னந் தோன்று செவியைக் கெடுக்க
முளைத்த கொம்பெனத் தோன்றின ளாண்டே.

காயப் போட்ட விரைநெல்லைத் தானவன்
கள்ளஞ் செய்தள்ளு வானிளை யாளுக்கு
ஞாயமா வென்று கேட்குஞ் சமையத்தில்
நல்ல வார்த்தைசொல் வானந்த வேளையில்
ஆயு மாதவன் மேன்மலைக் கண்மறைந்
தான டைந்தன னென்றறிந் தாலிவன்
மாய மாக மறைந்திளை யாண்முலை
மாமலைக்கண் ணடைவனென் றாண்டே.

இளையபள்ளி

முறையீடு.

கலிப்பா.

விட்புலவ ரும்பாவு மேன்மை யக்க சாலையர்பால்
நட்பையுற்றன் னார்களையெஞ் ஞான்றும் பாவிவரும்
தட்பமுறும் பொழிற்பண்ணைத் தலைவர்கள் முன் பாகநின்றே
ஒட்பமுறு மிளையபள்ளி யும்முறையி டோதுவளே. 64

சிந்து.

செய்யாள் புனைவர் பண்ணைத் தலைவ
தினமு மேவன் மூத்தவள்
செய்யா ளென்பன் பணிசெ யென்னையுஞ்
செய்யா ளென்பன் பார்க்கையில்
ஐயா வுண்மை குடும்பன் சொல்வதென்
றகம கிழ்ந்தன னடியவள்
அக்கா கருத்தின் முரண்வி ளைந்தழி
வான தன்மையைக் காணுதிர்.

மெய்யா யெனக்கு மவட்குங் கலகம்
விளையுந் தினமிச் சொல்லினல்
மேவு மின்சொற் போகம் பொலிய
மிகவுங் குடும்ப னுழைக்கின்ருன்
கையா லேயுல கோபகார
கனக ருவிக ளமைத்தருள்
காந்தக் கோட்டை மாங்கை யற்புதக்
கண்ணளர் பண்ணைத் தலைவரே.

இவ்வுறுப்புக் கலிப்பாவிற் றேவரும் பாவும் அக்கசாலையர் என்றதால் பூமண்டலப் புலவர்களுந் துதிக்குங்கொடைத்தொழிற் பெருமையாளர் அக்கசாலையர் என்பது காட்டுகின்றது. இதற்குத் திருவிளையாடல் கந்தபுராணம்இராமாயணம் பெரியபுராணம் பாரதம் முதலான நூலாசிரியர்களே நிரம்பிய சான்றாயிருக்கின்றனர் இன்னும்.

ஸ்ரீமத் உப சுப்பிரமணியர் மரபினர் ஆகிய படிக்காசுப்புலவர்
இயற்றிய
தொண்டைமண்டலச்சதகம் 46-ம் கவி.

கட்டளைக்கலித்துறை.

பட்டாபிடேகம்பரிந்தார்க்குண்டோவிந்தப்பான்மைகெடக்
கெட்டார்கவிசொல்லிவந்தோர்க்கெல்லாம்பொற்கிழியனைத்துந்
தட்டாதுதவிடுங்கூவந்தியாகசமுத்திரத்தின்
மட்டார்கவிகொண்டமண்டலங்காண்தொண்டைமண்டலமே.

இந்நூலிலுள்ள மேற்கோள்.

கட்டளைக்கலித்துறை.

மட்டாருஞ்செங்கழுநீர்மணிமார்பரைவாழ்த்துமந்தக்
கிட்டாதயாசகர்கிட்டிவந்தாலதைக்கேட்டுமுன்னாட்
பட்டோலைவாசித்தவரவர்க்குள்ளபரிசிலெல்லாந்
தட்டானளிப்பதுங்கூவந்தியாகசமுத்திரமே.

என்று கூறியதுமுணர்க.

இந்தச் சிந்துக் குறிப்பு.

செய் ஆள் புனைவர்—வயல்களையுங்கொண்டாள்கின்ற பாட்டு[illegible]டைத்தலைவர்கள்.

செய்யாள்—செய்யாதவள். செய்யாள்—இலக்ஷுமி.

பண்ணைத்தலைவன்

இளையாளைக்கோபித்தல்.

கலிப்பா.

அப்பருக்குத்† திருப்புகலூ ரப்பரருள் கனகமணிக்
குப்பையென்ற கனகமணிக் குப்பையும்பொன் மாளிகையும்
எப்பொழுதுஞ் சேர்தனத ரெனுஞ்§மக்க சாலையவர்
செப்புபண்ணைத் தலைவனென்பான் சினந்துநின்று சாற்றுவனே.

† திருபுகலூர் அப்பர் திருபுகலூர் என்ற க்ஷேத்திரத்திலெழு[illegible]க் தருளிய பரமேசுரன்.

§ அக்கசாலையராகிய தட்டார் ஆபரணாதிகள் சிருஷ்டிசெய்யு[illegible]ம் கிரஹத்திற் சேருங் குப்பையாகிய தங்கம் பொன்மணிகளுள்[illegible]ள மைக்காட்டுக் குப்பையைக் கனகமணிக் குப்பையென்றார்.

வேறு

சிந்து.

சட்டைபண்ணு மற்பள்ளனைக் கொட்டிலி லொழித்துக்கொண்டிங்
கட்டிபண்ணி னதாலுன்னைக் கட்டி யடிப்பேன்
மட்டிப்பய லானதிறு விட்டசட்டப் படிக்குன்னைக்
கட்டிக்கொண்டு வந்ததிறற் கெட்டுப் போய்விட்டான்
அட்டதிக்கெங் கும்பரவு மட்டிலடங் காதபுகழ்
ஆண்டவர்கண் ணாளர்பண்ணை நீண்ட செய்யெல்லாம்
எட்டியும்பா ராமலொரு முட்டிகள்ளை யுங்குடித்திட்
டெங்கிருக்கின் றான்வரச்சொல் லென்மு னென்றனே.

இவ்வுறுப்புக் கலிப்பாவில் அப்பரென்ற பெயர் வாய்ந்த திருநாவுக்கரசு நாயனாருக்குத் திருப்புகலூர் அப்பாருள் கனகமணிக் குப்பையென்றதற் குதாரணம்.—

பெரியபுராணம் திருநாவுக்கரசு நாயனார் புராணம் 46-வது செய்யுள்.

அங்கிலைமை தனிலாண்ட வரசுபணி செய்பவவர்
நன்னிலைமை காட்டுவார் நம்பர்திரு மணிமுன்றில்
தன்னில்வரு முழவார நுழைந்தவிடந் தானெங்கும்
பொன்னினொடு நவமணிகள் பொலிந்திலங்க வருள்செய்தார்.

என்றதுகாண்க.

பள்ளன் வெளிப்படல்.

கலிப்பா.

கண்ணிய வகார வுகார மகாரமும்பின்
அண்ணவரு நாதவிந்து மாகுமவ னென்றறிஞர்
எண்ணப் பெறுவிசுவ கன்மாவை யேத்திமகிழ்
பண்ணைத் தலைவன்முன்பாய்ப் பள்ளனவன் வந்தானே.

சிந்து.

குடிக்குங்கள் வெறியாலே குதித்துக் குதித்துக்கொண்டு
கொண்டவுறு மாலைமண்டைக் கட்டுறக் கட்டிப்
படிக்குங் கவிகள்பாடித் துடிக்குமீ சைமுறுக்கிப்
பரமகண் ணாளரணி பாதம் பாவித்

தடிக்கப்பும் பிடித்துக்கொண் டடிக்குச்செ ருப்புமிட்டுத்
தனதுபண் ணைந்தலைவன் றன்னைக் காணவே
வடிக்குஞ்செந் தமிழ்ச்செல்வம் வளரு மாந்தையில்வாழு
மாடக் குடும்பனவன் வந்து நின்றனனே.

இந்த வுறுப்புக்கலிப்பாவில் அகார உகார மகார நாத விந்து முதலான பொருள்களெல்லாமாகும் அவன் விசுவகருமன் என்றதற்குதாரணம்.

நாகரகாண்டம் 12-வது அத்யாயம்.

𑌓𑌂𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌮𑌾𑌚
𑌤𑌥𑌾𑌚𑍈𑌵 𑌤𑍍𑌰𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌃 ।
𑌅𑌕𑌾𑌰𑌶𑍍𑌚 𑌉𑌕𑌾𑌰𑌶𑍍𑌚
𑌮𑌕𑌾𑌰𑌶𑍍𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥
𑌅𑌕𑌾𑌰𑍋 𑌨𑌾𑌦𑌰𑍂𑌪𑌶𑍍𑌚
𑌉𑌕𑌾𑌰𑍋 𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌮𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍁 𑌕𑌲𑌾𑌚𑍈𑌵
𑌨𑌾𑌦𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌕𑌲𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 ॥
𑌨𑌾𑌦𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌕𑌲𑌾𑌵𑌤𑍍𑌤𑍁
𑌓𑌂𑌕𑌾𑌰𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 ।
𑌨𑌾𑌦𑍋𑌜𑍍𑌞𑌾 𑌸𑌕𑌲𑌾𑌰𑍂𑌪𑍋
𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌮𑍇𑌵 ॥
𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑌂𑌹𑌾𑌰𑍈𑌃
𑌸𑌸𑍍𑌥𑌿𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌃 ।
𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌾
𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌾𑌭𑌰𑌣𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌾𑌃 ॥
𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞
𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑍋𑌦𑌾𑌹𑍍𑌵𑌾𑌃 ।
𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌰𑍂𑌪𑌮𑌿𑌦𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌂
𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑍁 𑌕𑌷𑍍𑌟𑌾 𑌤𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

ஓம்காரஸ்திரிகுணாத்மாச
ததாச்சைவத்ரயக்ஷரஹ

அகாரச்சஉகாரச்ச
மகாரச்சவிசேஷதஹ
அகாரோநாதரூபச்ச
உகாரோபிந்துருச்யதே
மகாரஸ்துகளாச்சைவ
நாதபிந்துகளாத்மகஹ
நாதபிந்துகளாவர்த்த
ஓம்காரோவிச்வகர்மணஹ
நாதக்ஞோஸகளாரூபோ
பிந்துவித்யச்சபாம்குலே
அக்னிஇத்யாதிபிர்ம்மந்த்ரைஹி
பஸ்மதிக்ததநாதிதாஹ
த்ரிபுண்ட்ராவளிபிர்திப்தா
ருத்ராக்ஷாபரணாங்கிதாஹ
குருப்ராணைஸர்வக்ஞ
விச்வகர்ம்மகுலோத்பவாஹ
மநுரூபமிதம்ப்ரோக்தம்
ச்ருணுத்வஷ்டாநசம்சயஹ.

என்பதாலறிக.

பண்வண்ணச்செயல் வினவல்.

கலிப்பா.

நத்துபுகழ்ச் சானகச ஞதனவ புவனசபி
ரத்தினசசு பர்ஸஸாய் நவிஞமைந்து முனிகள்முதல்
அத்தகைமை நூற்றிருபத் தைந்திதபோ தனர்வழியாம்
வித்தியர்பண் ணைக்காரர் வினவுவர்பண் ணைச்செயலே.

சிந்து.

வெள்ளமு மிக்குவந் திற்றநி னுழயர்
மேன்மலே வண்டலதும்—திகழ்
பள்ளவ யற்கணைக் கும்பா வும்படி
பக்குவஞ் செய்தாயா.

ஆட்டுக் கிடைக ளனிவய லெங்கு
　　மமர்ந்துவந் துற்றனவா—பல
யாட்டுக் கிடைகளுங் காலா காலத்தில்
　　வந்திருக் கின்றனவா.

வாரி யுறும்பல் லூர்களுஞ் சேருமூர்
　　வாரியு முற்றதுவா—என்றே
தாரணி பண்ணைச் செயலையம் பண்ணைத்
　　தலைவர் வினவினரே.

இந்த வுறப்புக்கலிப்பாவில் சானக ஸனாதன அபுவனச பிரத்தினச சுபர்ணஸ என்னும் ஐந்து ரிஷி கோத்திரங்களும் பாட்டுடைத் தலைவர்களுக்குண்டென்பதற்காதாரம்.

ஸ்காந்தம் நாகரகாண்டம் 5-வது அத்தியாயம் 413-வது சுலோகம்.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

மநுஸ்ஸாநககோத்ரஞ்ச
ஸநாதநபயர்த்ததா
அபுவநஸ்த த்வஷ்டாஸ்யபுஹ—
ப்ரத்னஸ்யசில்பினாந்ததா
தக்ஷச்சாபிஸுபர்ணச்ச
ஏவம்கோத்ர முவீரிதம்.

என்றதைக்காண்க.

அவனதுகூறல்.

கலிப்பா.

பரமாக்கு மைந்தொழிலார் பண்பாள ருற்றவர்க்கு
வரமாக்கந் தந்தருள்கம் மாளரடிப் பரவியுயர்
தரமாக்குஞ் செந்நெலணி தழைத்தோங்கும் பண்ணையெல்லாம்
உரமாக்குங் கிடைவேண்டி யுற்றபள்ள னோதுவனே.

சிந்து.

சம்புக்கோ னாட்டைப் பார்த்தநி னென்மனஞ்
சம்ம தித்த ததுவர லாகலம்
அம்பு விக்குட் கணபதிக் கோன்*கிடை
யாகு மெத்தப் புழுக்கையும் போடும்பின்
கும்பக் கோன்கிடை யாகுமின் சொல்வளங்
கூடித் தோன்று மெடுக்க வராதது
வம்புக் காரனம் பொன்னன் மகனெனும்
வாணி யன்கிடை யுற்றதிங் காண்டே. 1

மாயக் கோன்கிடை யாகுமென் றெண்ணி
மகிழ்ந்த டுத்ததைப் பார்க்கின்ற வேளையிற்
காய்வ தாகியு மூன்படங் கொண்டு
கடிக்கச் சீறி பெழுமொரு கட்செவி
நேய னூறு முகன்கிடை யான்முன்
நிகழ்த்து மாயன் கிடைக்கு மதிப்பில்லை
ஆய னம்பையப் பன்கிடை யாற்பதி
னூறு பேறும் பெருகின வாண்டே. 2

இவ்வுறுப்புக்கலிப்பாவில் உற்றவர்க்கு வரம் ஆக்கங் கொடுப்பவர் ...ம்மாளர் என்றதை அனுமனுக்குத் தீர்க்காயுள் வரங்கொடுத்தல், ...மயமலை இறைவன் இராவணன் திரிபுராதிகள் முதலானவர்களுக் ...கமயமாகத் தருமணி மாளிகை நகரங்கள் சிருஷ்டித்து கொடுத் ...ல் முதலான சான்றே காட்டுகின்றன.

*கிடை நிலைமையாகிய இடம்.

1-வது சிந்து பதவுரை.

சம்புக்கோன்—சிவன், ஆட்டை—நடனத்தை, கணபதிக்கோன்—விநாயகர்கிடை, ஆகும்—நிலைமையான வாஹனமான மூஷிகமும், கும்பக்கோன் கிடை இன்சொல் வளம்—அகத்தியரது பொதிகைமலையில் மதுரமான தமிழ்வளம், வம்புக்காரன் அம்பொன்னன் மகன் வாணியன் கிடை—வாசனையுடையான் அழகிய இலக்குமிய னென்ற திருமால்மகனாகிய சரசுவதியையுடைய பிரமதேவர் வாஹனமாகிய, கிடை அன்னம்.

2-வது சிந்து.

ஆறுமுகன்கிடை—மயில், அம்மையப்பன்—சிவன்.

உதாரணம் திருக்களிற்றுப்படியார்.

1-வது வெண்பா.

அம்மையப்பரேயுலகுக்கம்மையப்பரென்றறிக
அம்மையப்பரப்பரிசேவந்தளிப்பர்—அம்மையப்பர்
எல்லாவுலகுக்குமப்புறத்தர்சிப்புறத்தும்
அல்லார்போனிற்பாரவர்.

என்றதுகாண்க.

பதினறுபேறுவன.

புகழ் கல்வி வலி வெற்றி நன்மக்கள் பொன் நெல் நல்லூழ் நுகர்ச்சி யறிவு அழகு பெருமை இளமை துணிவு நோயின்மை வாழ்நாள் இப்பதினாறுமே மனிதர்களடைய வேண்டிய பேறுகளாம்.

—∘∘✿∘∘—

ஆயரைவருவித்தல்.

அவர்வரல்.

அவர்பெருமைகூறல்.

கலிப்பா.

தாயரவ ரெனவுலகந் தனில்வருங்கண் ணாளர்முன்னே
தூயரவ ராயர் அணையடியைப் பரவுமன்பர்
மாயரவர் மணிமகவாய் மனையில்வரு மகிமைபெற்றார்
ஆயரவர்த் தருவியென வவருமகிழ்ந் துற்றனரே.

சிந்து.

சுரர்ப ணிசிவ லோக மீதரன் றாய விடையின் பாங்குறுந்
துதிக்கு நந்தைபத் திரைசு ரபிசு சீலை சுமனை யெனும்புகழ்
பரவு மைவகைப் பசுக்க ளன்னவை பரமன் பூஜைக் காகவும்
பலயா காதி கருமங் களுக்குப் பஞ்ச கவ்வியங் கொடுக்கவும்
தரணி யுற்றவை மாய னுங்கொடு தமையு மெமையும் புரக்கநித்
தமுமெ மதகம் வளர்த லான தவத்தைக் கொண்டுமப் பசுக்களால்
ஆன ரியிவர் பாத பங்கய மந்த நாண்முதல் வணங்குவோம்
அன்ப ரென்பவர் தமிய ரேயென் றறிவித் தாயரும் வந்தாரே.

இவ் வுறுப்புக்கலிப்பாவில் கூறிய ஆனயர் என்பவர் இடையர் குலத்திற் பிறந்த ஓர் சிவனடியார். இவர் நிறைந்த சிவநேயச் செல்வர் என்பதைப் பெரியபுராணம் ஆனய நாயனர் புராணத்தாலறிக.

இந்தச் சிந்திற் கூறிய நந்தை பத்திரை சுரபி சுசீலை சுமனை என்ற ஐவகைப் பசுக்கள் யாகாதி கருமங்களின் பொருட்டு பூமியி லுற்பவித்தன என்பதை ஷை புராணம் சண்டேசுர நாயனர் புராணம் சூசனத்திற் காண்க.

மூத்தபள்ளிமுறையீடு.

கலிப்பா.

நீத்தமுறுங் கனகநியு நிலவுமணி வயல்வளமுந்
தேத்தடையு மலர்ப்பொழிலுஞ் செறிந்திலங்கு மணிமாந்தை
காத்துமகிழ் தபதியர்ச்சேர் கனபண்ணைத் தலைவனிடம்
மூத்தபள்ளி முறையிடுமொழிந்தனளான் மறுபடியே.

சிந்து.

ஆட்டுக்குப் போகான்—அவள்வினை
யாட்டுக்குப் போவான்
அணைகாலைப் பாரான்—இளையவள்
அணைகாலைப் பார்ப்பான்

தேட்டமுள் ளானே—இளையவள்
தேட்டமுள் ளானே
திருக்குளம் பாரான்—இளையவள்
திருக்குளம் பார்ப்பான்
கோட்டத்தை நினையான்—அவண்மனக்
கோட்டத்தை நினைப்பான்
குழைகளைப் பாரான்—இளையவள்
குழைகளைப் பார்ப்பான்
மாட்டுக்குப் போகான்—இளையவண்
மாட்டுக்குப் போவான்
மரத்தினி லடித்தால்—அவனுக்கு
வரும்புத்தி யாண்டே.

ஆட்டுக்கு—ஆட்டுக்கிடைக்கு
அணை காலை—செய்கரையை வாய்க்காலை
அணை காலை—புணர்ச்சியை பாதத்தை
தேட்டம் உள்ளான்—சேகரித்தபொருளை நினையான்
தேட்டம் உள்ளான்—பேரவாவுடையவன்
திருக்குளம்—அழகையுள்ள குளத்தை
திருக்கு உளம்—கண்ணையும் இருதயத்தையும்
கோட்டம்—வயல் கோட்டம்—வாட்டரவு
குழை—வயலுக்குவேண்டு முரமாகிய தளிர்
மாட்டுக்கு—பக்கத்துக்கு
குழை—ஆபரணம்.

விசேஷ உரை.

கண்ணையு மிருதயத்தையும் பார்ப்பான் என்றது. இன்ப
கொண்டு பார்க்கின்றாளோ அன்றி வெறுப்புற்றுப் பார்க்கின்றாளோ
என்பது கருதி விழியையும் பார்ப்பான் என்றும், இணைய பார்வை
நேத்திரக்கண் உண்டாவதற்கு ஏதுப்பொருள் இருதயமாதலா
அவள் உள்ளத்தையும் பார்ப்பான் என்றார். மனத்தால் நினைப்பன
முகமுங் கண்ணுங் காட்டுமென்பது அவரவர் நோக்கப் பார்க்கு
பிரத்தியட்சம்.

மாடு—பக்கம், இது வேற்றுமைச் சந்தியான் மாட்டு என் றிரட்டித்துவந்தது.

குடும்பன் கிடையிலிருந்தான்போல்வரல்.

கலிப்பா.

விடையில்வரு வாற்பணியும் வித்தகரான் நன்னாட்டில்
இடையில் விலகாமலிரவிளைய பள்ளிகளை
மடையில்வரும் பலபோகம் மகிழ்ந்துபுரி கள்வனவன்
கிடையிலிருந் தான்போற் கிழக்கிருந்து வந்தானே.

சிந்து.

பண்ணை நன்செய் மேல்வி சாரணை
பண்ணும் பண்ணைக் காரனார்
பள்ளன் வருதல் கண்டு சினந்து
பார்க்கப் பள்ளன் படிந்துமே.
கண்ணுக் குறக்க மின்றிக் கிடையைக்
காத்தி ருந்தனன் ராத்திரி
கலைப்ப வர்க்கவன் கல்லுங் கரையுங்
கார ணமெனப் பார்க்கின்றீர்.
எண்ணும் போது மூத்த தார
மெப்போ தும்பகை யெனக்குமே
இளைய வளுக்குத் தெரியுங் கிடையில்
இராவிற் படுத்த சங்கதி.
மண்ணும் வானும் பரவு சீர்த்தி
வளர்த்த தெய்வக் கண்ணனார்
வாழு மாந்தை நகர்க்க முனிக்கு
வாய்த்த பண்ணைக் காரரே.

குடும்பனைக் குட்டையிலடித்தல்.

அவன் புலம்பல்.

மூத்தபள்ளியடிசில்கொடுவரல்.

அவனவளோடுகூறல்.

அவனவளைமன்னித்தல்கேட்கவேண்டல்.

அவண்மறுத்தல்.

அவன்சூளுறல்.

அவளவனைமீட்கவேண்டிப். பண்ணைத்தலைவனைப்பரவல்.

மீட்டுதல்.

கலிப்பா.

எழுவிளங்குந் தோளா ரிரதகா ரரைவாழ்த்தித்
தொழுவிற்பள் ளனையடிக்கத் தின்பொடவன் புலம்புகையிற்
பழுதுரைத்த மூத்தபள்ளி பாலனங்கொண் டுறவவள்பால்
அழுதுபணிந் தவன்மன்னித் தலுங்கேட்கக் கூறுவனே.

சிந்து.

மங்கை யேயிது சமையஞ் சமையம்
மரத்தி ருந்தெனை விடச்சொல்வாய்
மறுப்புக்கூற நினைப்பி லுயிரை
வைத்தி ருப்பது மில்லைநான்
கங்கை மூன்று வேளை பொறுக்குங்
கணவ னுனக் காதலாற்
காத்துக் கொள்ளென வவண்ம றுத்திடக்
கண்ட வன்மிக வணங்கியே
செங்கை யுற்றொளிர் நங்கை யுன்னிடஞ்
சேர்ந்தி ருப்பனென் றூளுமே
செப்புஞ் சூளுற லென்ற சத்தியஞ்
செய்த னுண்மை யென்றுமே
அங்கை கொண்டவன் பணியக் கண்டவள்
அருள்பு ரிந்தவ ளாகியே
ஆள்ப வனிடங் கூறிக் குட்டையில்
அவனை நீக்கிக் கொண்டாளே.

கிடைவளங்கூறல்.

கலிப்பா.

ஆட்டுக் கிணங்கரன்றா ளம்புயத்தை வாழ்த்திவரும்
பாட்டுக் கிணங்குமனப் பத்தியுள்ளார் பௌவமுலாம்
நாட்டுக் கினியசொற்கண் ணாளரவர் களிகூர
மாட்டுக் கிடையினங்கண் மணிவயற்கண் ணுற்றனவே.

சிந்து.

சொரிந்து மழையை மேகம் பொழியுஞ்
சோழ நாட்டுக் கிடைகளும்
தொண்டை மண்டலத் தமைந்த கிடையுந்
துளுவ நாட்டுக் கிடைகளும்.
பொருந்து மகிமைக் காஞ்சி நகரின்
புறவ மேவுங் கிடைகளும்
புண்ணி யக்குரு நாட்டுக் கிடையும்
புகலுங் கலிங்கக் கிடைகளும்.
விரிந்த துளப மாய னாரவர்
விளங்கும் வெண்மைக் கடலெனும்
விடையி னங்களும் பசுவி னங்களும்
மேன்மை மாந்தைப் பழனமேற்
றிருந்து கனகண் ணாளர் புகழைத்
தேச மெங்கும் விரித்தல்போற்
சேரு முழும் பரவ நின்றன
செறிந்த கிடைகள் யாவுமே.

விரைவளங்கூறல்.

கலிப்பா.

வரைவளமும் மழைவளமும் மகவான்பொன் நகர்வளமும்
தரைவளமுந் தந்தருளுந் தருமக்கண் ணாளர்முன்னே
நிரைவளஞ்சேர் பழனமெல்லாம் நிறைந்தகிடை யுற்றதற்பின்
விரைவளமுங் குடும்பனவன் விளம்புவா னுற்றானே.

சிந்து.

திருவு லாவரி யாமெரு துற்றநந்
தில்லை நாயகந் தானே கிளம்பும்
பருவத்தேபயிர்ச் செய்யெனு மௌவைசொற்
பாரு மின்பத மேவு மகத்திற்
கருடன் சம்பா நிதிதரும் பாருங்கள்
கம்பன் சம்பாவைக் கைக்கொண்டு வாரும்
குருவை நெல்லையில் வைத்துக் கொளச்சொல்லுங்
கூறுங் கம்மிய ராள்பண்ணை யாண்டே.

இந்த வுறுப்புக்கலிப்பாவில் தேவலோகத்தைச் சிருஷ்டித்துக் கொடுத்த தெய்வத் தச்சராகிய கண்ணாளர் என்று புகன்றதற்காதாரம். நகர்வளம் ரு-வது சிந்துக்குக் கூறிய உதாரணச் செய்யுளா லறிக.

சிலேடை.

நெல்லுக்கு

திருவுலா வரி ஆம் நந் தில்லைநாயகம் எரு துற்ற தானே கிளம்பும்=அழகு பரவிய நெல்லான நமது தில்லை நாயகம் என்னும் நெல் உரமாகிய எரு நிறையத் தானாக முளைத்துவரும், குருவை நெல்லை=குருவை என்ற பெயருற்ற ஓர்வகை நெல்லை, கருடன்சம்பா, கம்பன்சம்பா என்றவையும், ஓர்வகை நெல், மற்றன வெளிப்படை.

திரு உலா அரி ஆம் எருது உற்ற நம் தில்லைநாயகம் தானே கிளம்பும்=அழகுபரவிய விஷ்ணுவாகிய காளைவாகனத்தின்மேல் வரும் சிதம்பரமென்ற க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் நடராஜ மூர்த்தமாகிய கடவுள் தன்னாலே தோன்றுவர், பருவத்துப் பயிர்ச்செய் எனும் ஔவை சொல் பாரும் இன்பதம் மேவும் அகத்தில்=இளமைப்பருவத்தே ஈசுவரத்தியானமான நூல்களையும் சன்மார்க்கத்தையும் பழக்கஞ்செய்வாயென்று சொல்லிய ஔவைப் பிராட்டியார் திருவாய்மொழியைத் தெரிமின், இருதயத்தில் இன்பஞ்சேரும், கருடன் சம்பா நிதிதரும்=கருடதரிசனம் சுகம்பவிய தனத்தைக் கொடுக்கும்; கம்பன் சம்பாவை=கம்பநாட்டாழ்

வாரது இராமாயண முதலான கவிசையும், குருவைநெல்லை இப் பாட்டுடைத் தலைவர்களுக்கான ஆசாரியசுவாமிகளைத் திருநெல் வேலி என்ற நெல்லையம்பதிக்கண்.

சிவநேயமாகிய பழக்கமுற்றவர்களுக்கு இன்பமுற்ற ஞான முதலானவை யுண்டாகுமென்றதற்குதாரணம் வள்ளலார் சாத்தி ரம் ரு-வது.

சிவஞானப்பிரகாச வெண்பா அசு-வது கவி.

கல்லைப்பொன் னாக்கிக் கடுமுதலை வாய்ப்பிள்ளை
மெல்ல வழைத்து வெறுக்கையினைச்—செல்கின்ற
ஆற்றிலிட்டு மீட்டு மருங்குளத்திற் கண்டதுவுஞ்
சாற்றிற் சிவகாரணந் தான். என்பதாலறிக.

ஏகாரம் தேற்றம், ஆண்டவனே என்னும் விளி ஆண்டே யென்னுமரூஉ மொழியாய்வந்தது.

சிந்து.

இந்த மானிலந் தன்னிற் றெய்வானை
இலங்கு வள்ளியென் பாரிரு மாதரு
வந்துமே முத்துச் சம்பா வுறவென்று
வாழ்த்திக் கொண்டனர் மொட்டைக் குருவையே
அந்தத் தேவ னருளானைக் கொம்பனை
யங்கு வேண்டிக்கொண் டாலது நற்பலன்
தந்து மாடை மணியுந் தரும்புகழ்
தங்குஞ் சொல்வினை யும்பண்ணை யாண்டே.

முத்துச்சம்பா மொட்டைக்குருவை ஆனைக்கொம்பன் என் பவை ஓர்வகை நெல். மற்றன நெல்லுக்கு வெளிப்படை.

உ-வது அருத்தம்.

மொட்டைக்குருவை முண்டித்த சென்னியையுற்ற குருமூர்த்தமாக இருந்த பாலசுப்பிரமணியனை, யுவந்தும் முத்துச்சம்பா உற வென்று வாழ்த்திக்கொண்டனர் வள்ளி தெய்வானை என்னும் இரண்டு மாதர்கள், சந்தோஷமாகவும் முத்தமிடு காமலீலைச் சுகம் பொருந்த என்றுகூறி வணங்கிக்கொண்டார்கள் முன்னர்க்கூறிய மடந்தையர்

கள், ஆனைக்கொம்பன் விநாயகர். மொட்டைக் தருவையே என்ற ஏகாரம் தேற்றம்.

மாடை-பொன். சொல்-வசனம்-நெல். தே ...ன்-கடவுள்.

காவளாவளங்கூறல்.

கலிப்பா.

வெண்மைநீ லஞ்செம்மை மிளிர்கருமை தங்கநிறத்
கண்ணியஞ்சேர் கொல்லர்தச்சர் கன்னார்சிற் பியர்த...ார்
எண்ணவரு வயலுழவ னேரிலுழ வாராத
திண்மையுறு விடையினத்தைச் சிலேடையுறச் செப்புவனே

சிந்து.

சிவபெருமானுக்கும்
காளைக்கும்
சிலேடை.

காம மேவுமை யப்பனைக் கொன்ற செங்
கானை யென்றுறுங் கண்ணணி யுள்ளது
நேம மாலுறு மக்கருங் காளைமேல்
நித்த மேறி வருமம் புலியுடன்
சாம நான்கிற்கு மெங்கெங்கு மேயுஞ்
சடைகொள் வாலணி யும்பெறு மின்னமும்
ஏமந் தோறும் திரியுமக் காளைக்
கிடது பாகத்திற் பச்சையுண் டாண்டே.

இவ்வுறப்புக்கலிப்பாவில் வெண்மை நீலம் செம்மை கருமை தங்கம் என்ற பஞ்சவர்ணங்களுள்ளவர் பாட்டுடைத்தலைவர்களாகிய கொல்லர் தச்சர் கன்னார் சிற்பியர் தட்டார் என்று புகன்றதற்காதாரம் காந்தபுராணே நாகரகாண்டே திரிதீயாத்தியாயம் நிஎ-வது.

சுலோகம்.

ஜநஸ்வஸ்டிகவண்ணஞ்ச
நீலவண்ணாமயேஸ்த்தா ।
த்வஷ்டாசரக்தவண்ணஞ்ச
ஶில்பீ தூம்ரவண்ணகம்
தக்ஷகோஹேமவண்ணஞ்ச
பஞ்சவண்ணாஃ ப்ரகீர்த்திதாஃ ॥

மனுஸ்படிகவர்ணஞ்சா
நீலவர்ணமயஸ்ததா
த்வஷ்டாசரக்தவர்ணஞ்ச
சில்பிதூம்ரவர்ணகம்
தக்ஷகோஹேமவர்ணச்ச
பஞ்சவர்ணப்ரகீர்த்திதாஹ.

காளைக்கு ஐயப்பன் ஓர் பசுக்கிடைத்தலைவன், செங்காளை சிவலைக்காளை, சமம், மயானம்.

சிவபெருமானுக்கு.

காமம்மேவும் ஐ அப்பனை = அன்புபொருந்துமைந்து புட்பபாணங்களையுற்ற மன்மதனை, செங்காளை— திருமேனி சிவந்த நிறந்தோன்றும் பரமேசுவரர், என்று உறும் கண்—சூரியனுற்ற நேத்திரம், நேமம் ஆல் உறும் அக் கருங்காளைமேல்—நியமமாக ஆலவிருக்ஷத்திற் சயனித்திருக்கும் அந்தக் கரிய விஷ்ணு என்ற விடைமேல் தும்புலியுடன் சாமம் நான்கிற்கும் எங்கெங்கும் எயும்—பிறைச்சந்திரனைக்கொண்டும் அகோராத்ரமுற்ற நான்கு சாமத்துக்கும் பார்க்கின்ற இடமெங்கும் உயிர்க்குயிராய்ப் பொருந்தி இருப்பர், சடைகொள்வால் அணியும் பெறும்—சடையைக்கொண்ட வெண்மைநிறத்தையும் பெறுவர், சமம் தோறும் திரியும்—தனது நெற்றிக்கண்ணாகிய அக்கினியால் அழியுஞ் சர்வலோகங்களாகிய மயானத்தில் ஆனந்த நடனம் புரிந்து நிற்பர்.

பச்சை—பச்சிளம் பெண்ணாகிய பார்வதி. இது குணவாகுபெயர்.

மன்மதன் சிவபெருமானிடத்தில் மிகுந்த அன்புள்ளவன் என்பது தோன்ற காமமேவுமையப்பன் என்றார். இதற்காதாரம்.

கந்தபுராணம் காமதகனப்படலம்

மன்மதன் பிரமதேவரிடம் கூறுவது 23-வது கவி.

பற்றோடி கலற்ற பரம்பொருளை
எற்றோமயல் செய்குவ தீசனையும்
மற்றோரென நின்னின் மதித்தனையால்
சற்றோவ னாற்றல் தவிர்த்திடவே.

எனக்கூறியதுணர்க.

சிவபெருமானைத் திருமால்காளைவடிவாக இருந்து தாங்குகின்றார் என்று கூறியதற்காதாரம்.

பெரியபுராணம் திருநாவுக்கரசுநாயனார் புராணம்

348-வது கவி.

அங்கண் மாமலை மேன்மருந்தை வணங்கி யாரருளான் மிகப்
பொங்குகாதலி னுத்தரத் திசைமேல் விருப்பொடு போதுவார்
துங்கமால் வரைகானியாறு தொடர்ந்த நாடு கடந்தபின்
செங்கண் மால்விடை. யண்ணன் மேவு திருப்பருப்பதமெய்தினார்.

என்றும், இன்னும் காளமேகப்புலவரியற்றிய

வெண்பா.

காலாற் படியளக்குங் கண்ணிடந்து பூசிக்கும்
சேலாங் கமடமாஞ் சிங்கமாம்—பாலாகும்
ஆழியப்பி லேதுயிலு மைவருக்குத் தூதாகும்
வீழியப்ப ரேறும் விடை.

என்றுங் கூறியது காண்க.

இரவும் பகலும் நீங்காது உயிர்க்குயிராய் எங்கும் நிறைந்துள்ளார் ஈசுரன் என்றதற்குச்சான்று சிவஞான வள்ளலார் இருபது சாத்திரங்களாக திருவாய் மலர்ந்தருளிய வள்ளலார் சாத்திரம் முதலாவது சத்தியஞானபோதம் பதியியல்.

உலகமு முயிரு மொருங்குறப் படைத்தவ்
வுயிரிடை நடன மோவா துனாற்றினும்.

என்று கூறியது காண்க.

வெண்மை நிறமும் பொருந்திய அழகுந்தோன்ற என்றது திருநீறணிந்த திருமேனியாதலானே இயற்கையாகவுள்ள செம்மைநிற மறைந்திருந்ததென்பது காட்ட இன்னும் பெரியபுராணம் மானக்கஞ்சாற நாயனுர் புராணம் (25)வது கவி.

பொடிமூடு தழலென்னத் திருமேனி தனிற்பொலிந்த
படிநீடு திருநீற்றின் பரப்பணிந்த பான்மையராய்க்
கொடிநீடு மறுகணைந்து தம்முடைய குளிர்கமலத்
தடிநீடு மனத்தன்பர் தம்மனையி னகம்புகுந்தார்.

என்றதாலுமறிக.

வரும் ஏயும் திரியும் என்ற செய்புமென் வாய்பாட்டு வினைமுற்றுச் சொற்களை யுபசாரமாக வருவர் திரிவர் பொருந்துவர் என்று எழுதப்பட்டன.

திருமால்.

குட்டைக் காளை யதுநெட்டை யாய்வருங்
கோவை யாவும் விடாமற் றழுவும்பின்
முட்டி மாவலி யோடமர் வென்றிடும்
மூன்று லோக மடியொன்றிற் றுவுமால்
மட்டி லேழெரு தோடமர் வென்றிடும்
மண்ணுந் தீவன மென்றுண் டுமிழ்ந்திடும்
எட்டி வண்டியைக் கண்டா லுதைத்திடும்
எங்கள் பண்ணைக் கருங்காளை யாண்டே.

காளைக்கு—கோ பசு. மா வலி-மிகுதியான பலம்.

மற்றன வெளிப்படை.

திருமாலுக்கு, குட்டை, சிறிதான வாமனரூபம், நெட்டை ...ண்ட விசுவரூபம், கோவை ஆகாயத்தை; மாவலி ஓர் சக்கரவர்த்தி, ...வண் ஒரு அவுணராஜன், மூன்று லோகம் அடி யொன்றில் தா...ம் மால், அந்த மாவலி என்பவனிட மூன்றடி நிலம் யாசித்து அந்...ம் மத்தியபாதாளம் என்ற மூன்றுலகத்தையும் ஓரடியாலளந்த ...யா, ஏழ் எருது, கஞ்சனல் ஏவப்பட்ட ஏழு இராக்ஷதர்களாகிய ...ருதுகளை, மண்ணும் தீவனம் என்று உண்டு உமிழ்ந்திடும்=பூமண்...லத்தையு மொருகாலத்திலுண்டு மீட்டும் கொடுப்பவர், வண்டியை—

முன்கூறிய கஞ்சனால் அனுப்பிய சகடாசுரனை. கருங்காளை—நீலமேக வர்ணமுற்ற திருமால்.

தாவும் ஆல் என்று அசையாகவும் கொள்ளலாம். தாவும் மால் என்று சிலேடைப்பொருளின் பேர் தோன்றச் சொல்லாலே சிறப்புடைத்தென்க.

காளை சிங்கம் புலி யானை முதலாயின உபமானப்பொருளைத் தலாமே இங்குத் திருமாலைக் கருங்காளை என்றார்.

விநாயகர்.

ஏரி மேவிய காளையோர் கொம்பு
 முற்பட் டுள்ள துடியடித் தூங்கலை
கூர மாலொடும் பாலை முன்னீரைக்
 குடித்தபின் கொண்ட மாலையும் விட்டது
பார மான பெருவயி றுற்றதைப்
 பார்க்கி லாகும் பொருத்த தென் பார்பணி
யாரந் தோசை யருந்தும் பிரிய முற்
 றந்தக் காளையை யென்செய்வ தாண்டே.

(காளைக்கு) ஏரி—திமில், துடியடித்தூங்கல்—வன்மையுற் காலைக்கொண்ட கிழக்காளை, பாலை முன் நீரை—பாலையும் முன்ப இருந்த ஜலத்தையும், கூர மால் ஒடும்—மிகுதியான ஆசையோடு மாலை—மயக்கத்தை, ஆகும்—வேலைக்குஆகும். மற்றன வெளி.

விநாயகருக்கு ஏரி—பொறுமை, துடியடித்தூங்கல்—மே மையான திருவடியுற்ற யானைமுகம் பெற்றவர். கூர மால் ஒ பால் ஐ. முந் நீரைக்குடித்தபின் கொண்ட மாலையும் விட்டது மிகுதியான பாற்கடலை அழகிய திருமாலொடும் அருந்திப் பின் கடலின் வறுமைகண்டு பாலோடும் தன் வயிற்றுக்குட்சென் விஷ்ணுவைக் கருணைகூர்ந்து மீட்டுங்கொடுத்தவர், ஆகும்—பெரு சாளியும், பணியாரந் தோசை விநாயகருக்கு வந்த தின்பண்டங்க

துடி அடி என்பதற்கு உடுக்கையெனக்கொண்டு உடுக்கைவ டம்போன்ற எனப்பொருள் கூறுவாருமுளர். மூத்தபிள்ளையா குச் சிரமொன்றே அன்றித் திருமேனிமுழுதும் யானை உருவன் யான் அப்பொருள் அன்மையறிக.

விநாயகர் திருமாலோடும் பாற்சடலையுண்டார் என்றதற்காதாரம் குலோத்துங்கசோழன் கோவை.

விநாயகர் துதி.

கலைக்கோவை பேசொரிந் தன்றிலங் காபுரி காயாவின்
இணைக்கோவை யீந்த கடாக்களி றேயெழு பார்க்குமொரு
துணைக்கோவைக் கோழிக் குலோத்துங்க சோழனைச் சொல்லிய
திணைக்கோவை பாட வடிதோறுங் காக்கநின் சேவடியே. [வைங்
என்றது காண்க. இன்னும்

இச்சரிதத்தைக் காஞ்சிப்புராணம் வலம்புரி விநாயகப்படலத்துட்காண்க. கோழி உறையூர், முற்காலத்திலிருந்த கோழி யானையைப் போரில் வென்றமையால் இதற்கு இப்பெயர் வந்தது.

சுப்பிரமணியர்.

பாரும் பச்சைப் பசுப்போட்ட கன்றதைப்
பார்க்கத் தோன்று மிரண்டுகொம் பன்னவை
யாரும் பார்க்கிலொன் றானைக்கொம் பாகும்
அடுத்த கொம்பது மான்கொம் பணியுறுஞ்
சேருஞ் சூரனைக் கொல்பல வத்திரம்
செம்மைமேனி யுயர்முரு குற்றிடும்
தாரணிக்கு ளுயர்ந்த மலைகளிற்
றங்கு நானதற் கென்செப்ப வண்டே.

(காளைக்கு) சூரன்-ஓர் வீரன், கொல் = கொன்ற அத்திரம்-அந்தத் தைரியம், செம்மை மேனி முருகு—சிவந்த உடலும் கோரோசனையுற்ற வாசனையும்.

(சுப்பிரமணியருக்கு) பச்சைப்பசு—உமாதேவி, ஆனைக்கொம்பு மான்கொம்பு—தெய்வகுஞ்சரி வள்ளிநாயகி, பல வத்திரம்—ஆறுமுகம், முருகு—இளமைப்பருவம், மலைகளில் தங்கல்—குன்றுதோறுடல்.

பிரமதேவர்.

நீணிலத்தி லறிந்தவ ரோதுவர்
நித்தங் காட்டுந் திலகத்தலை யென்றதைக்

காண வேண்டின் மறைவா யிருக்கும்
கலையுஞ் சேரு மனைக்குவந் துற்றிடும்
வேணு கானம் விரும்பும் வனத்தரை
மேவு முந்திக் கமல மிசையுமே
தோணு மென்னடை யாமவ் வனத்தும்
துலங்கு மெண்கண் ணங்கத்திலென் னுண்டே.

காளைக்கு

திகைத்தல்—மயங்குதல், வேணுகானம் விரும்பும்—புல்லாங்குழற்பண்ணை விரும்பித் தானாகவரும், வனத் தரை மேவும் உந்திக் கமலம் மிசையும்—சோலையுற்ற பூமியிற் பொருந்தும், தாவி நீரை அருந்தும், மென் அடை ஆம் அவ் வனத்தும்—மிருதுவாகிய இலைகளுற்ற அந்தச் சோலை இடத்தும், எண்கண் அங்கம்; இவை ஓர் தேசம்.

(பிரமதேவருக்கு) திகைத்தலை—நான்குதலை, மறைவாய் இருக்கும்—வேதங்களைத் தன் வாயிற்கொண்டிருப்பர், கலையும் சேரும் மனைக்கு உவந்து உற்றிடும்—கல்வியுஞ்சேர்ந்த நாயகியாகிய சரசுவதிக்குச் சந்தோஷகாத்தைக் கொடுத்துப் பொருந்துவர், வேணு கானம் விரும்பும் வனத்தரை மேவும் உந்திக்கமலம் இசையும்—வேய்ங்குழலிற்றோன்று மிராகத்தில் வாற்சல்லியமுற்ற துளபமாலிகையுடைய விஷ்ணுதேவரது அழகுற்ற நாபியந்தாமரையிற் பொருந்துவர், மென் நடை ஆன அனத்தில்—மெல்லிய நடையுற்ற அன்ன வாகனத்தில், எண்கண் அங்கத்தில்—எட்டுநேத்திரம் தேகத்தில்.

கலையும் என்ற உம்மையை உயர்வுசிறப்பாகவும் இறந்ததுதழீஇய எச்சமாகவும் கொள்ளலாம்.

அன்னம் அனம் என்றுவந்தது. இது இடைக்குறை.

வேணுகானம் விரும்பும் விடை என்றதைப் பெரியபுராணம்
ஆனாயநாயனார் புராணம் ௩௰-வது கவி.

ஆனிரைக ளறுகருந்தி யசைவிடா தணைந்தயரப்
பானுரைவாய்த் தாய்முலையிற் பற்றுமிளங் கன்றினமுந்
தானுணவு மறந்தொழியத் தடமருப்பு விடைக்குலமும்
மான்முதலாங் கான்விலங்கு மயிர்முகிழ்த்து வந்தணைய

என்று கூறியதாலுணர்க.

இந்திரன்.

காவுக் காட்டுக்கு ளெங்கெங்கு மேய்கின்ற
காளை யாகங் கனங்கொண் டிருக்குமே
ஆவ லாயிர மானகண் ணுளிகொள்
அண்டரும் புக ழும்மக வானது
பூவை யுற்ற வரம்பையங் காட்டுக்குட்
போய்ப் படுத்துக் கிடக்கும் புல்லுண்டென்று
கோவை யாவுந் தழுவுந் தருக்கொடு
கொள்ளு மேயுட் குணக்குமென் ணுண்டே.

(காளைக்கு) காவு—சோலை, ஆகம் கனம்=தேககாத்திரம், ஆவல் ஆயிரம் ஆன கண்ணுளி கொள் அண்டரும் புகழுமக ஆன் அது= ஆசையைச் சகஸ்ரமென்ற கணக்கான கண்ணுளிகளுங்கொள்ள இடையரும்புகழும், தேக, பிரகாசமுற்ற விடையது, பூவைஉற்ற ரம்பை—புட்பத்தையுற்றவாழை, புல்—தான்உண்ணும் புல்லு, காவையாவும் தழுவும் தருக்கு ஒடு—பசுக்களையெல்லாந்தழுவுஞ் சருக்கோடு, உள் குணக்கும்—மனக்கோணலும்.

(இந்திரனுக்கு) காவு—சந்தனம் மந்தாரம் கற்பகம் பாரிசாதம் ரிச்சந்தனம், ஆகம் கனம்—சரீரம், வாகனமாகிய, மேகம் அல்லது ல் மேகம்போன்ற கரியநிறம்.

ஆவல் ஆயிரம் ஆன கண்ணுளி=ஆசையினுல் ஆயிரக்கண க்ன கண்களைப்பெற்றவன், அண்டரும்தேவரும், மகவான் மகவான் ற காரணப்பெயர் கொண்டவன், பூவை=அழகை, அரம்பை ம் காடு—அரம்பை மேனகை ஊர்வசி திலோத்தமை என்ற அழ மடவார் கூட்டம், கோவை-ஆகாயத்தை, தருக்கொடு—கற்பகத் தக்கொண்டு, உட் குணக்கு—இடத்தையுற்ற கீட்டிசையையும்

மகவான் என்ற உபமானப்பொருட்பெயர்க்குப் பின்வந்த அது பதைப் பகுதிப்பொருள் விகுதியாகவுங்கொள்ளலாம் உதாரணம் றயது குடி என்றாற்போல, புல்லல்—சேர்தல இது தொழிற்பெயர், குதிகெட்டு புல் என்னும் பகுதியாய் நின்றது.

———

அகத்தியர்.

மாக மண்டல முற்றும் புகழ்தென்
　　மலையிலே யெந்த வேளையு மேயுமால்
ஓகை யாக விருந்துமுன் னாளில்
　　உவரி நீரைப் பயமின்றி யுண்டதே
தேக வாகுட னேவிளை யாடிளஞ்
　　சேயைக் காண்கவு நட்டையுற் றும்பணி
வாக வேபழக் கஞ்செய்யு மிவ்வித
　　வானை நாமென்ன செய்குவ தாண்டே.

(காளைக்கு) மாகம் மண்டலம் முற்றும்=ஆகாயம் பூவுலகமெல் லாம், தென் மலை=அழகிய மலை, மேயும்=புற்களைத்தின்னு ஓகை=சந்தோஷம், உவரி=மூத்திரம், தேக வாகு=சரீரத்தி அழகு, இளம் சேய்=சிறுகன்று, ஆன்=காளை.

(அகத்தியருக்கு) மாகமண்டலம் உற்றும்=பெருமையான குவ டிகையைக் கைக்கொண்டும், தென் மலை=தெற்குத்திசையிலுள் பொதிகைமலை,

உவரி=சமுத்திரம். பயம்=ஐமைம். இளம் சேய்=இளமைப்ப வத்தையுற்ற சுப்பிரமணியர்.

மன்மதன்

காத லோடுமங் கூரலை வாரியைக்
　　காணத் தோன்று மதற்கு மகிழ்ச்சியே
ஓதுஞ் சங்கர னென்பவ னுக்குமுன்
　　உற்ற போதஞ்சு மெய்யுங் குழைந்திடும்
மாத ருக்கு மயக்கமுங் காட்டி
　　வருஞ்சு கம்பெறு மன்மதக் காளையே
பூத லத்தி லைதையென்ன செய்வது
　　புந்தி யாலறிந் தோதுவி ராண்டே.

(காளைக்கு) காதல்=ஆவல், அங்கு ஊரலை வாரியை=அவ்வி துள்ள ஊரலை நீரை, சங்கரன்—(சங்கரன்) என்னும் மாட்டுக்கார உற்றபோது அஞ்சும் மெய்யும் குழைந்திடும்=சேர்ந்த வேளை ப

படும் உடம்புவாடியிருக்கும், மாதருக்கும் மயக்கமும்—மிகுதியான அகங்காரமுஞ் சோகமும், சுகம்—இன்பம், மன்மத—பொருந்திய வலியுடைய.

(மன்மதனுக்கு) காதல்—ஆசை, ஊர்அலை வாரியை—(யானையாக) ஊர்கின்ற இருளை, (முரசமான) சமுத்திரத்தை, போது அஞ்சும் எய்யும் குழைந்திடும்—தாமரை முதலான ஐந்து புட்பபாணங்களை எவுவன் வருந்துவன், மாதருக்கும்—பெண்களுக்கும், சுகம்—கிளியான குதிரை, மன்மத—மன்மதனுகியகாளை.

ஊர் அல்லை என்பது ஊர் அலை என்று இடைக்குறையாய் நின்றது. ஐந்துபுட்ப பாணம், முல்லை யசோகு முழுநீலஞ் சூதப்பூ அல்லி மலரோடைந்தால் என்பன, மாதருக்கும் என்றவும்மை இறந்தது தழீஇய எச்சம், மாடுகுடிக்கும் தவிடுமுதலான சேர்ந்த ஜலத்துக் குப்பேர் ஊரல்.

ஆதிசேடன்.

காமர் வாலுற்ற காளையைப் பாரது
கண்டபின் படங் கொண்டெதிர் சீறிடும்
பூமியைத் தலையான் முட்டித் தூக்கிடும்
பொன்னின் மேருவை வாலா விழுத்திடும்
சாமி மாயன் படுக்கை யிடத்தது
தங்கிக் காற்றைக் குடித்துக்கொண் டேயுறும்
நாமுந் தேடிப் பிடிக்கவென் றலது
நாடொண விடஞ் சேருமென் னுண்டே.

(காளைக்கு) பின்பு அடம்=பின்னர் பொல்லாங்கு, மாயன்—ஒரு தலைவன், நாடொணஇடம்=தேடமுடியாத அரணுன இடம்.

(ஆதிசேடனுக்கு) படம்—பாம்பின்படம், பூமியைத் தாங்குகின்றவன் ஆதலாற் பூமியைத் தலையான் முட்டித் தூக்கிடும் என்றும் பாற்கடலைக் கடையுங்காலத்துத் தான் நாணுக இருந்தானுதலாற், பொன்னின் மேருவை வாலாவிழுத்திடும் என்றும், காற்றுன உணவையுற்று விஷ்ணுதேவருக்குப் பாயலாக இருக்கின்றதால் மாயன் படுக்கை இடத்தது தங்கிக் காற்றைக் குடித்துக்கொண்டேயுறும் என்றும் பொருள்கொள்க. விடம்=விஷம்.

சூரியன்.

பாய வேலைத் தலத்தைவிட் டேயது
　　பார்க்க வோடு மெழுகன வட்டமுன்
காயும் பாரஞ் சகத்திர மேலொளி
　　காட்டிக் கொண்டம் புலியையும் வென்றிடும்
மாயுங் காளை வகைகளுக் காக
　　வருத்தப் பட்டுத்தன் மார்பைக் கொடுத்திடும்
ஏயு மாலது வந்தந்தத் தேரில்
　　இலங்கு மித்திரன் சோதியென் ணுண்டே.

காளைக்கு.

பாய வேலைத்தலம்=(கிட்டவருவாரை) பாய்கிறதற்கு வேலை நடக்கும் இடம், எழு கனவட்டமுன்=ஏழுகுதிரைக்கு முன்னே, காயும் பார் அஞ்சு அகத்திரமேல் ஒளி காட்டிக்கொண்டு அம்புலியை யும்=கோபித்தும் பூமியிலுள்ளவர் பயப்படும்படியான தன்மனத் தைரியம் உடம்பின் பிரகாசம் காட்டிக்கொண்டு அழகிய புலியையும் ஏயும் ஆல் அது வந்து அந்தத்து ஏரில்=பொருந்தும் அக்காளை கடைசியாகிய ஏரில்வந்து, இத்திரன் சோதி=இந்த மனோதிடத்தை அக்காளையிடம் சோதித்துப்பார்.

சூரியனுக்கு.

பாய வேலை=பரவியசமுத்திரம், எழு கன வட்டம்=தோன் றிய மேன்மையுற்ற வட்டவடிவம், பார் அம் சகத்திரம் மேல் ஒளி= பார்ப்பாய் அழகிய ஆயிரம் என்ற கிரணங்களாகிய தனது மேலான பிரகாசம், அம்புலியை=சந்திரனை, மாயும் காளைகள்=யுத்தகளத் தில் இறந்த ஆடவர், ஏயும் அது உவந்து அத்தேரில்=பொருந்தும் அது சந்தோஷகரத்தைக்கொண்டு அந்த இரதத்தில், மித்திரன் சோதி=மித்திரன் என்னும் சோதி என்னும் பேர் உள்ளவன். ஆல்—அசை.

போர்க்களத்தில் இறந்த வீரர்கள் சூரியனுடலைக்கிழித்து வீர சுவர்க்கஞ் சேர்வார்கள் என்பதுதோன்ற மாயுங் காளைகளுக்காக வருத்தப்பட்டுத் தன் மார்பைக் கொடுத்திடும் என்றார்.

இதற்காதாரம் குமரகுருபரசுவாமிகளருளிய

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் சப்பாணிப்பருவம் ரு-வது கவி·

உண்ணிலாவுவகைத்தடங்கடல்படிந்திட்டவும்பருஞ்செங்களம் பட், டொண்பரிதியுடல்கிழித்தோடுங்கடற்றானையொளிரும்வாளவுணர்குழுவும், தெண்ணிலாமதிநுதற்றெய்வப்பிணாக்கள்வாய்த்தேனமுதுமமுதவாரித், தெள்ளமுதமுடனிருந்துண்ணப்பணித்திட்ட செங்கைவேல்பைம்புனத்துப், பண்ணுலாமழலைப்பசுங்கிளிவியெயினர்பொற்பாவைவிழிவேலொடொப்புப், பார்க்குந்தொறுந்தலைகவிழ்த்துநின்றவள்திருப்பவளத்துமுத்தரும்பும், தண்ணிலாவுக்கொண்சகோரமெனநின்றவன்சப்பாணிகொட்டியருளே, தையல்நாயகிமருவுதெய்வநாயகன்மதலைசப்பாணிகொட்டியருளே.

என்றதுகாண்க.

சந்திரன்.

வெள்ளைக் காளை யதுதினந் தோறும்
மெலிந்து தேறுமென் னேரின் மெலிந்திடும்
உள்ளிக் கோட்டைக்கு ளூற்று மிருக்குமுன்
னேடியே மலைக் கம்மறை வுற்றிடும்
கள்ள முண்டுய ரத்திரி யம்பகம்
காண வந்துறுந் தானக வேயது
வள்ள லேயணி வான்முக முற்றும்
வயங்குங் கண்டன னூழிய னண்டே.

காளைக்கு.

என் ஏரில், உயர் அத்திரி அம்பு அகம் = மேலாகிய மலை நீர் இவைகளுற்ற) இடம், அணி வால் முகம் உற்றும் = அழகிய வாலுமுகமும் கொண்டும்.

சந்திரனுக்கு.

மெலிதல் பௌரணைக்கு மறுதினமுதல், தேறுதல்—அமாவாசைக்குப் பின்னாண்முதல், எல் நேரில்—சூரியன்முன்னர், மெலிதல் = தன்னொளி மழுங்கல், கோட்டை—பரிவேடம், இது சந்திர சூரியரைச் சூழ்ந்து தோன்றும் வட்டம், அத்திரி அம்பகம்—அத்திரி

என்னு முனிவனதுகண், வான்முகம் முற்றும்—ஆகாயத்தினிட மெல்லாம்.

அத்திரிமுனிவன் கண்ணிலுஞ் சந்திரன்பிறந்தான் என்றதற்கு ஆதாரம்.

வில்லிபுத்தூராழ்வாரருளிய பாரதம் ஆதிபருவம் குருகுலச் சருக்கம் ௫-வது கவிபைப் பார்க்க விளங்கும்.

கழனியுழவருங்காளையணிகூறல்.

கலிப்பா.

சொல்லவரு சுங்தோப சுந்தர்களை வீட்டவொரு
நல்லபெண்ணைச் சிருட்டித்து நாரணனுக் கருள்செய்தெய்வ
வல்லபஞ்சேர் விசுவகன்மன் வழியவராங் கண்ணாளர்
பல்லவய னுழவரும்பொற் பாண்டிலணி பகர்வாமே.

சிந்து.

பைந்த மிழ்ப்புல வோர்கள் புகழும்
புரியு டம்பணி யுள்ளதாய்ப்
பருங்கால் பருங்கண் பருங்கு ளம்பொடு
பாயா ததுதை யாததாய்
சிந்தை மகிழ்க ருந்தா ரைதிகழ்
செப்புக் குளம்பு நலசுழிச்
சிறுத்த தலையுஞ் சிறுத்த வாலுஞ்
சிறுகொம் புஞ்சிறு நாடியும்
கந்தம் பரவு திமிலொ டுங்குறுங்
கழுத்தும் பருத்த வென்பதும்
கால்வே கம்பெறு வேக நடையும்
கருது முன்னூரம் வாய்ந்ததும்
இந்த நல்லணி விடைகள் யாவும்
இறைவ னேறும் வெண்மைமால்
ஏறென் றேதக் கண்ணா ளர்வயல்
எங்கு முழவுக் குவந்தவே (1)

வன்னம் பாவு கிளியின் முகமும்
வயங்கும் பவளச் செவியொடும்
மகிழு மைக்கருங் கண்ணு மாணை
வாலும் பட்டரைச் சுழியதும்
உன்னுந் தேக பளப ளப்பது
மொளிகொள் நெற்றிச் சுட்டியும்
உரைக்குந் தொப்புட் டொங்கி யணிகொண்
டுடைய டித்தநன் னடையதும்
நன்ன யகுண ராஜ சுழியும்
நான்கு காலின் றிறத்தொடும்
நவம ணிப்பிர காசக் கொம்பிரு
நாடி சோணி யுடலொடும்
தன்னை யான விசுவ நாதனைத்
தாங்குந் தரும வெண்மையான்
றுனென் றேதக் கண்ணு ளர்புரி
தரும வான்க ளூற்றவே (2)

எதிரில் லாமற் கலப்பை மரங்கள்
இழுக்கு மொட்டைக் கிளிக்கொம்பன்
இனிய கருப்பன் சிவலை புள்ளி
எதிர்த்துப் பாயுஞ் சல்லியன்
உதறு கால னீள வாலன்
உருளைத் திமிலன் றூர்க்கொம்பன்
ஓடுங் கருப்பன் மயிலை வெண்மைகொண்
டுழுதற் குவந்த செம்மரை
அதிருங் குரலன் படப்புப் பிடுங்கி
யாக நீண்ட மொட்டையன்
அடிக்கப் பணியு மூசிக் கொம்பன்
ஆறு பல்லுச் செங்குரால்
மதத்தைக் கொண்ட பொலிச்சற் காளை
வளர்கண் ணுடி மயிலையும்
மாந்தை நன்னக ராள்கண் ணாளர்கள்
வயற்க ணுழவுக் குவந்தவே (3)

இவ்வுறுப்புக் கலிப்பாவில் சுந்தோப சுந்தர்களைக் கொல்லும் படியாக விஷ்ணுவுக்கு நல்ல பெண்ணைச் சிருஷ்டித்தருளிய விசுவ கர்மன் என்று கூறிய சரிதம் வருமாறு.

சுந்தோப சுந்தர்கள் இரணியகசிபன் வமிசத்து நிசுந்தன் புத்திரர். இச் சகோதரரிருவரும் பெருந்தவங்கள் செய்து பிரமாவினிடத்திலே இச்சித்த ரூபம் பெறவும் இச்சித்த விடத்திற்குப் போகவும் அந்நியராற் கொல்லப்படாமலிருக்கவும் மாயா ஜாலங்களை யறியவும் வரம்பெற்று ஜனங்களை மிக வருத்திவருங் காலத்தில் விஷ்ணு விசுவகருமாவினால் ஒரு கன்னிகையை அதிரூபவதியாகச் சிருஷ்டிப்பித்து அவளை இவர்களிடத்தில் அனுப்பிவிட்டார். அவளைக்கண்ட இருவரும் அதி மோகராய் அவளை நோக்கி நீ நம்மில் யாவருக்கு மனைவியாக விரும்புகின்றாயென்ன அவள் நும்முள் யார் ஜயவீரனோ அவனுக்கே மனைவியாவேனென்றாள்.

அதுகேட்டுப் போர்தொடுத்து ஒருவரை யொருவர் வெட்டி இருவரும் உயிர்துறந்தார்கள். இவர்கள் புத்திரர்கள் சும்ப நிசும்பர்கள். இக்கதை இராமநாதன் என்பவரால் தொகுத்த அகராதி முதற்புத்தகம் கூஉஎ-வது பக்கம் சுந்தோப சுந்தர்கள் என்ற பதத்தின் விஷயம் பார்க்கத் தோன்றும்.

பண்ணையுழுவான் பள்ளர் வருதல்.

கலிப்பா.

வாய்ந்தசிலை விக்கிரகம் மங்களா கரம்பொருந்தும்
வேந்தரொடு மனித்தர்களு மிக்கசெல்வம் பெற்றிருப்பர்
ஆய்ந்தசிற்பி மனமகிழ்ந்தா லன்னவராங் கண்ணாளர்க்
கேய்ந்தவய லுழவுதொழிற் கியைந்தபள்ளர் வந்தனரே.

சிந்து.

கந்தன் சுந்தரஞ் செந்திவேலன் கடுவாய் குத்திக் கருப்பணன்
கண்ணன் வெள்ளையன் பேச்சி முத்தையன் கரடிகுத்திய சங்கரன்
பொந்த னிருளன் மாட னழகன் பூலாக்குடும்பன் வாரியான்
புலியைக் குத்திய புதியவனுடன் போத்த னிடும்பன் மாராயன்
மந்த னெடுத்துப் போட்ட மண்வெட்டி மாறுதுவெட்டு மாடனும்
வட்டப் பொட்டுக் குட்டையனுடன் வழியடி முத்து ராக்கனும்

அந்தப்பம்மையன் மருதன்பச்சையனடுத்தகுட்டையன்மொட்டையன்
ஆன்ற பற்பலவுழவ ரென்பவ ரணிவய லுழவந்தாரே.

இந்தவுறுப்புக்கலிப்பாவில் சிற்பியானவன் சந்தோஷகரத்தை யடைந்தால் அவனாற் செய்யப்பட்ட சிலா முதலான விக்கிரகங்களும் மங்களாகரத்தைபடையும், அரசரொடு மனிதர்களும் மிகுந்த செல்வத்தைப் பெறுவர்என்று புகன்றதற்காதாரம்.

பாகவதம் 8-வது அத்யாயம் சுலோகம்.

𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌨𑌾 𑌰𑌾𑌜𑍍𑌞𑍇 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑍇
𑌦𑍈𑌵𑌂 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌮𑍇𑌵 𑌚
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌮𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑌂
𑌰𑌾𑌜𑌾𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌂 𑌚 𑌵𑌰𑍍𑌧𑌤𑍇 ।

சில்பினோமானஸேதுஷ்டே
தைவம் ஸந்துஷ்டமேவச
ஸர்வம்ஸம்பத்திஸம்பூர்ணம்
ராஜாராஷ்ட்ரஞ்சவர்த்ததே.

பள்ளருழுதல்.

கலிப்பா.

அத்தநக்ஷத் திரங் குருவா ரங்கன்னி லக்கினமே
உத்தமமா கியசித்தி யோகம்பக் கந்தசமி
இத்தகைய சுபதினத்தி லெழின் மாந்தைக் கண்ணுளர்
பத்திவயற் சார்ந்துவரும் பள்ளர்நிறைந் துழுதாரே.

காளைவெருளல், அது பள்ளனைப் பாய்தல்,
பள்ளிகள் புலம்பல், இளையபள்ளி பள்ளனை யெடுத்தேகல்.

சிந்து.

வட்டவடி வாருலகி லெட்டுணையு ஞானமில்லா
மட்டிப்பைய லொருவனைச் சட்டச் சபைமுன்
இட்டமுறக் கொண்டாலவன் றுட்டத்தனக் கோபங்கொள்வன்
என்பதற்கோ ரறிகுறி யாக முன்னேரிற்
கட்டிவிட்ட ஆசிக்கொம்பு நெட்டைக்காளை கோபங்கொண்டு
முட்டியொரு பள்ளனையு மெட்டிப் போடவே

பட்டிகைத் தனத்தவர் புலம்பவு மிளையபள்ளி
பாங்குற வவனைக்கொண்டு நீங்கி னளரோ.

பண்ணைத்தலைவர்க்கறிவித்தல்.

கலிப்பா.

அஞ்சலித்துப் பண்ணைநயி னாரேநீர் கேளுமென்று
குஞ்சரமென் முலையினையாள் கூறுவளென் னாயகனே
நஞ்சைதனிற் பிரதமத்தில் நாளேரைக் கட்டுகையில்
எஞ்சிவிழ மாடுமுட்டிற் றெங்கோனை யென்றாளே.

சிந்து.

நாட்டுஞ்சொல்லைக் கேட்டுப்பண்ணை நாயனார்மிகத் தேற்றியே
நங்கையருளந் தேறத்தேற நவின்றனர் சிலவாசகம்
மாட்டைப்பிடிக்கப் பண்ணைக்காரர் வழுத்தப்பள்ளர் திரண்டுமே
வந்தார்திருப்பி யானினங்களை மகிழ்ந்துபண்ணையிற் சேர்த்தனர்
தாட்டிகரெனுங் கண்ணாளரவர் சபையிற்கூடிப் பேசல்போற்
சார்ந்துபேசி விளங்குங்கலப்பை தார்வடங்கொழுக் கொண்டுமே
ஈட்டம்பரவுங் காளையணிக ளெங்கெங்கு மணியாயுற
இலங்குமாந்தைக் கழனிவைப்பணி யேருழவந் தார்களே.

மாடுமுட்டிய பள்ளன் மயக்கந்தெளிந்தெழுதல்.

பள்ளருழுதல்.

கலிப்பா.

காறுமுனை கத்திமுனை கதிர்முனை தாசுமுனை
வீறெழுத்தா ணிமுனையென்று விளம்புமைந்து கூர்நுதியைப்
பேறுலகம் பெறக்கொடுத்த பெருமைக்கண் ணாளர்பண்ணை
ஏறுமுட்டி வீழ்ந்தபள்ள னிதயமகிழ்ந் தெழுந்தானே.

சிந்து.

இயைந்தமுகத்தைத் துடைத்துக்கொண்டெழுந் திருந்தமனைவி
யிருவரின்
இளையதார மீதுமனமு மின்பமுமுறப் பார்த்துமே
கயந்தெளிந்தது போலுந்தெளிந்து காமாக்ஷிபதம் போற்றியே
கண்ணாளர்பத மலரையும்பணி காலையம்பணைக் கண்ணுற்றே

செயங்கொள்பள்ளரொருங்குதிரண்டுதெய்வேந்திரனைப்போற்றியே
செகதலகுரு வெனவரும்பர சமையரடியைப் பணிந்துமே
வயங்குங்கனகக் கலப்பைச்கண்ணணி வயங்குமான்களைப் பூட்டியே
வகைக்கோராயிர மேருமம்பிடித்து வரிசையா யுழுதார்களே. (1)

இக் கவிப்பாவிற் கூறிய (காறுமுனை) கொழுமுனை, கத்திமுனை, கதிர்முனை, தராசுமுனை, எழுத்தாணிமுனை, என்னுமிவ்வைந்து முனைகளால் உலகிற்கு முதன்மையான சம்ரக்ஷணையைச் செய்துவருவது பிரத்யக்ஷ பிரமாணம். இன்னும்.

விசுவப்பிரம புராணம் பஞ்சகிர்த்தியமுரைத்த
வத்தியாயம் 2-வது, 4-வது செய்யுள்.

பழுதில்சானகராதியாமிருபத்தியைவர்கண்மரபினோர்
கொழுவினெடுதராசுநீள்கதிர்கூரிலேகணிகத்திமுன்
தழுவுவாளுடைவாள்கைவாள்சமுதாடுதிண்கதைதோமரம்
மழுவழற்படைசக்கரப்படைவச்சிரப்படைசூலம்வேல்
இன்னதன்மையகருவியாதியசிட்டியாவுமியற்றியே
மின்னுநித்திலம்வீசுதெண்டிரைவேலைசூழுலகத்தினில்
மன்னறம்பொருளின்பம்வீடெனமருவுசித்திவிளங்கவே
பன்னுசீர்பொலியருளொடும்பரிபாலனம்புரிவாரரோ.

மேலும்

விசுவகுருசதகம் 16-வது செய்யுள்.

உண்கின்ற வுணவுமுன தழுகின்ற படையுமுன
துடுக்குநற் றுகிலு முனது
உறைகின்ற வகமுநின தறைகின்ற பறையுநின
தும்பருறை கோயிலு நினு
தெண்கொண்ட கலையுனது மறையுனதி யாவரு
மிறைஞ்சுவிக் ரகமு முனது
எரியொடு வாவிநதி யாவுமுன துகடலிடை
யெழின்மரக் கலமு முனது
பண்கொண்ட விசையுனது நடமுனது தேவரும்
பார்த்துமகிழ் விழவு முனது

பார்வேந்தர் புகழுனது வைசியர்கள் செட்டுனது
பற்பலர்செய் தொழிலு முனது
வண்கொண்ட விவையலாற் சநநமாங் காலைகொடி
வகிர்வாளு முனதா கையால்
வாயிலா நரருனைக் கணைநீங்கி யேவாழ
வழியில்லை விஸ்வ குருவே.

நெல்விதைத்தல்.

கலிப்பா.

வண்மைக்கண் ணுளருக்குள் வழுத்துமனு வென்பானே
வெண்மைநிறம் பெறுமவன்போன் மேதினிசேர் தானியத்து
எண்ணுமணி நென்முதலா வெப்பயிர்க்கு முன்றோன்றங்
கண்ணியவெண் முளைநெல்லைக் கழனியிடம் பாவினரே.

பயிர்வளர்தல்.

சிந்து.

சேற்றிலன்பொடு விரைத்த விரைகள் செழித்துமுளைத்துத் தளிர்த்து
செங்கண்மாற னிறத்தைக்கவர்ந்து செகத்துற்றெழுந்த தென்ன
தோற்றுகின்றது மரகதநிறந் துலங்குகின்றது வயலெல்லாம்
சொரிந்துமழைகண் மிகுந்துபுனல்கள் சூழ்ந்து நிறைந்து வருவதா
ஆற்றுவண்டலு மதிலடித்துட னதிகவுரமுஞ் சேர்ந்ததால்
அப்புமங்கையுங் காய்ச்சல்பாய்ச்ச லாகப்பாய்ந்து வருவதாற்
காற்றுமுப்பாங் காற்றடித்ததிற் கருதுஞெண்டுழப் பாயையாற்
கழனிநாற்றுத் தடித்துக்குழைந்துக் கருமைகொண்டு வளர்ந்ததே. (1

நடுகைப் பெண்கள் வருதல்.

கலிப்பா.

தேற்றமுறுஞ் சிற்பிதுக்கந் தெய்வதுக்க மவன்செய்தெய்வ
தாற்றுலங்கு முலகேயன் னவற்கியற்றும் பூசையதே
போற்றுதெய்வ பூசையென்ற புகழணிகம் மாளர்வயல்
நாற்றுநட வரும்பள்ளர் நங்கையர்பேர் சாற்றுதுமே.

சிந்து.

செல்வலட்சுமிகோமதியொடுசீதைசுந்தரிநாச்சியார்
செல்லம்மாளிருளாயிபரமிசின்னம்மாளொடுபொன்னம்மாள்
நல்லசண்பகவல்லிபரமிநல்லம்மாளுடன்செல்லம்மாள்
நளினப்பேச்சிபூச்சியாச்சிஞானம்பத்திரகாளியே
கல்விப்பிரியவெல்லம்மாளின்கலவிப்பிரியச்சொல்லம்மாள்
காந்திமதிதன்மாமியுஞ்சிவகாமியுமிகுகாமியும்
பல்லுவரிசைக்கோதைமகளும்பழநிமகளுங்கூடியே
பாவுமாந்தைப்பழனவைப்பணிபரவநடவந்தார்களே. (1)

மன்னுமுகிலைமானுங்குழன்சின்மதியைமானுந்திருநுதல்
மானைமானும்பார்வைபருவமதியைமானுமணிமுகம்
மின்னுந்துவரைமானுமதரமிளிர்கயிரவமானும்வாய்
வேயைமானுந்தோள்பொன்மேருவெற்பைமானுமிருதனம்
உன்னுநளினமானுமென்கரமுடிக்கைமானுஞ்சிற்றிடை
ஒளிர்வாரலைமானுங்காலிவ்வுறுப்புவிளங்குமாதராம்
அன்னநடையர்குரவைமுழக்கமடுத்தகுரவைமுழக்கமே
யாமென்றேதமாந்தையாதிபரணிவயல்நடவந்தாரே. (2)

வாணக்கண்ணியேணிக்காலிமந்தக்காதுமாடத்தி
மாறிமுளைத்ததெற்றுப்பல்லிமந்திமுகத்துப்பொந்தாச்சி
கோணமூக்கிகொக்குக்காலிகொண்டிக்காதுக்குப்பாயி
கோழிக்காலியாந்தைக்கண்ணிகூகைமுகத்திகுப்பாயி
காணுஞ்சென்னியுடம்புக்காரிகழலைக்கழுத்திக்கந்தாயி
கணவன்வருமுன்வயிறுவளர்க்குங்கழிபட்டகருங்கண்ணாயி
கோணக்கொண்டைப்பலுக்கியுவளைகுலுக்கியும்வெறும்பிலிக்கியும்
குச்சுவீட்டுமினுக்கிமகளுங்கூடிநடவந்தார்களே. (3)

இவ்வுறுப்புக் கலிப்பாவில் சிற்பி துக்கத்தை யடைந்தால் அவனால் சிருஷ்டிக்கப்பட்ட தெய்வமும் துக்கத்தையடைகின்றன. தெய்வம் சந்துஷ்டியை யடைந்தால் உலகமும் சந்தோஷத்தை யடைகின்றதுகள். ஆகையால் சிற்பியை எப்பொழுதும் பூஜிக்க வேண்டியது என்றதற்காதாரம்.

பாகவதம் 8-வது அத்யாயம் சுலோகம்.

𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌪𑍂𑌜𑌾 𑌶𑌿𑌲𑌾𑌪𑍂𑌜𑌾
𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌦𑍁𑌃𑌖𑍇𑌨 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌾
𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌨𑌾 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂 𑌦𑍈𑌵𑌂
𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑌯𑌂 𑌜𑌗𑌤𑍍 ॥

சில்பிபூஜாசிலாபூஜா
சில்பிதுக்யேனதுக்கிதா
சில்பிநாகல்பிதம்தைவம்
சில்பிப்ரம்ஹமயம்ஜகத்.

நாற்றுப்பறித்தல்.

கலிப்பா.

ஏற்றறிவ ரெனுமேலோ ரிதயமகிழ்ந் துறுமேலாபர்
போற்றிவருந் தனத்தையங்குப் புரைதீர வுடன்பறித்து
சாற்றுகன தருமமுஞ்சந் ததம்பரவக் கொளல்போல்நெல்
நாற்றையுவந் துடன்பறித்தார் நடுகையிடு முழத்தியரே.

சிந்து.

வார்புடை சூழ்மாந்தை—யணிநகர்
வாழுங்கம்மி யரவர்ச்சேர்
பார்புகழ் மணிவிளங்கும்—நவரத்னப்
பலமணி முடிச்செனவே.
கூரவரு நாற்றுமுடிச்சுப்—பலப்பல
குப்பல்குப்ப லாய்க்குவித்தார்
ஆரமணி நெல்விளையும்—பழனக்கண்
அணியிழை பாரவரே. (1)

நாறு நடல்.

கலிப்பா.

வீறுநட னப்புரியும் விசுவேச ரைப்பணியும்
பேறுநட படியமைந்த பெருமைக்கம் மாளர்மகிழ்
ஏறுநட வுதலான்ற வீர்ம்பழன வளாகமெல்லாம்
நாறுநட லானதொழில் நங்கையர்செய் கின்றாரே.

சிந்து

நங்கையர் குழுமியங்கு நாற்று நடக்கருதி
நாகநக ராதிபனை நாடிக் கொண்டுமே
கொங்கைகளிற் குங்குமங் கத்தூரியணிந்து மலர்
கொடியிடை யிற்புடவை கொய்து கட்டியே.
வாசங்கமழ்தா நெய்த் திருண்டு கடைகுழைந்து
வயங்கு மைக்கருங் குழல்வாரி முடித்துக்
காசுவட மாரமுங்கொங் கைமேலணிந்து மனக்
கச்சின்றியக் கொங்கையி லோர்கச்சு மணிந்து. (1)
ஓதளி மென்கமலப் போதிலுறை தலென
வொளிர்மை திகழ்திலக மொண்முகத் திட்டுப்
பாதக ரளறதி லழுந்தலெனக் குழைகள்
பரவள றழுந்துறப் பார்த்து மிதித்தே.
இத்தலத்திற் கச்சிநக ரேகாம்பரர் பதத்தை
யிறைஞ்சுங் கண்ணளர் வயலெங்கும் பரவப்
பத்தியுட னன்னையெனுங் காமாட்சி யம்மைபதம்
பணிந்தணி நாற்றெடுத்துப் பள்ளி நடுவார். (2)

வேறு சந்தச்சிந்து.

பொன்னினாற் கலப்பைகொண்டு பள்ளருழுவார் = பெண்கள்
போசனச்சம்பா நெல்நாற்றைப் போற்றிநடுவார்.
வெள்ளியினான் மேழிகொண்டு பள்ளருழுவார் = பெண்கள்
மிளகுச்சம்பா நாற்றெடுத்து வேண்டிநடுவார்.
முத்துமணி யேர்க்கால்கொண்டு பள்ளருழுவார் = பெண்கள்
முத்துச்சம்பா நாற்றெடுத்து முன்னேநடுவார்.
அணியுழு படையைக்கொண்டு பள்ளருழுவார் = பெண்கள்
ஆனைக்கொம்பன் சம்பாநாற்றை யன்பாய்நடுவார்.
செம்மணிக் கலனைக்கொண்டு பள்ளருழுவார் = பெண்கள்
தில்லைநாயக நெல்நாற்றைத் தேடிநடுவார்.
கனகமய நாஞ்சில்கொண்டு பள்ளருழுவார் = பெண்கள்
கருடன்சம்பா நாற்றையங்குக் காண்கநடுவார்.

செஞ்சுடர்ப் படைவாள்கொண்டு பள்ளருழுவார் = பெண்கள்
சீரகச்சம்பா நெல்நாற்றைச் சேரநடுவார்.
இன்னும்பல படைகொண்டு பள்ளருழுவார் = பெண்கள்
எத்தனையோ விதநெல்நாற் றெங்கும்நடுவார். (3)

நெல்விளைந்தோங்கி நிற்றல்.

கலிப்பா.

தண்ணருள்சேர் திருஞான சம்பந்த ராற்செழியன்
நண்ணியகூ னிமிர்ந்தாற்போ னடுகையெல்லாங் கூனிமிர்ந்து
பண்ணையுறும் பண்ணைவைத்துப் பாலனஞ்சேர் கதிர்காட்டி
விண்ணையுற்று நெல்விளைந்த மேன்மையைநாஞ் சொல்வாமே.

சிந்து.

திருநெல்லவைமுன் மனுநிறமென திகழுவெண்முளைக் கொண்டுமே
திருமயனவனிறத்தி னீனிறஞ் செறிந்துயர் துவட்டாநிறத்
தருமைதோன்று முன்னர்நடுகை யாகச்சிற்பியின் கருநிறம்
அங்குப்பொருந்தி வளர்ந்துபயிர்க ளன்னக்கதிர்கள் காட்டியே
பெருமையுற்றபொன் வினைஞனென்பவன் பெற்றகனக நிறமதாய்ப்
பிறங்கிவா னளாவிக்கம்பியர் பீதமொன்று பல்பூண்களாய்
இருநிலமதில் விளங்கச்சிருட்டித் தீதலெனப்பல் கோடியாய்
எங்குந்தங்கமய மதாகியிலங்கிச் செந்நெல் விளைந்தவே.

நாட்கதிர்கொய்தல்.

கலிப்பா.

தேன்குலவு மொழிவிளம்புந் தெய்வக்கம் மியர்ப்பணிந்து
தான்குலவுங் குழன்மடவார் கழனிநன்னெல் விளைந்தபின்பு
வான்குலவுஞ் சின்மதிக்கண் வயங்குசெம்மை நாட்கதிர்போற்
கூன்குயமேல் நாட்கதிர்க் குழாம்விளங்கக் கொய்தாரே.

சிந்து.

மேலான விசுவேசர்—கணபதி
வேலவ னிவர்பதம் வாழ்த்திக்

கோலா கலமாங்கல்—லியமணி
கோதையர் நாட்கதிர் கொய்தார். (1)
மேமாட்சி மைதிகழும்—புகழணி
விசுவகன் மாபதம் போற்றி
காமாட்சி யம்மையையும்—போற்றிக்
கன்னியர் நாட்கதிர் கொய்தார். (2)
வண்டுக ளிசைமுரலப்—பலபல
வண்டுக ளெழுந்தும ணங்கமழ
வண்டுக ளணிகரத்தா—ரெனுந்திரு
மங்கையர் நாட்கதிர் கொய்தார். (3)
மேகலை யணிவிளங்கத்—துணையடி
வேய்ந்தொளிர் நூபுர மிகமுழங்கப்
பாகெனு மொழிமாணர்—மாந்தைப்
பண்ணையெல் லாங்கதிர் கொய்தார். (4)

செந்நெற்கதிர்கட்டிச் செப்பஞ்செய்தல்.

கலிப்பா.

படியுடையார் புகழுடையார் பலநிருபர் முடிதிகழ்பொன்
அடியுடையா ரெனுந்தபதி யரைப்பணிந்து பழனமதிற்
பிடிநடையா ரணியுடையார் பிறங்குமணங் கமழுமலர்க்
கொடியிடையார் கொடியிடையிற் குவித்தார்நெற் கதிரைமன்னே.

சிந்து.

தொழுதுசந்தனம் பாக்குவெற்றிலை சுகம்பெறத் திமிர்ந்தருந்தியே
தொகுதிதொகுதி யாகக்கதிரின் சுமைகொடுகளஞ் சேர்க்கவே
உழுதநிலமுங் களத்துநிலமு மொன்றுபோல் நெல்நிறையவே
ஓடியாடிக் கூடிப்பாடி யுதிர்த்தடித்து நெற்றிரட்டியே.
வழுதியிடத்தி லடிபடாது வயங்குமேரு மலைபல
மகிமைக்கம்மியர் களநிலத்தினில் வதிந்திருந்தது போலுமே
பழுதிலாநெல் லம்பாரத்தையும் படப்பையும் பலபடப்பையிற்
பரவவைத்தனர் மாந்தைப்பண்ணையிற் பணிவிடைபுரி பள்ளரே. (1)

நெல்லளத்தல்.

கலிப்பா.

கட்டளைக்க லிப்பாவ கவல்கலிப்பா வஞ்சிவெண்பாக்
கட்டளைசி ரசையடிசேர் கவிப்புலவர் மனமகிழ்ந்து
கட்டளையுண் டவனெனுங்கண் ணுளரைச்சேர் கோவிலுக்குக்
கட்டளைநெற் கலங்கோட்டைக் கணக்கா யளந்தனரே.

சிந்து.

நடம்புரி சிவந்திகழ் சிதம்பரம் வேளூர்க்கு
நாலாயிரக் கலநெல்லை நாடியளந்தார்
தடம்பெறு சண்பைநகர் மாயூர மிந்நகர்க்குச்
சம்பாநெல் லாயிரங்கோட்டை யளந்தார். (1)

ஆரூர் குடந்தையிடை மருதூர் திருக்கடவூர்
ஆலயத்துக் காயிரங் கோட்டையளந்தார்
பேரூர் திருப்புகலூர் கண்ணபுரங் கோவிலுக்குப்
பிறங்கெழு நூறுகோட்டை நெல்லையளந்தார். (2)

செங்காட்டங் குடிநக ரமுது படையலுக்குத்
திருவெண் ணுயிரக்கல நெல்லையளந்தார்
அங்காட்டம் விற்றமது ராபுரிச் சொக்கலிங்கர்க்
காயிரம்பொதி நெல்லைபன்பா யளந்தார். (3)

திருப்பரங்குன்று திருச்செந்தூர் திருநெல் வேலி
திருக்குற்றாலங் களுக்குச்சேர் நெல்லளந்தார்
மருப்பொலி ராமேசுரந் திருப்பதி பாவநாசம்
மகிமைக்கட்டளை நெல்லைவாரி யளந்தார். (4)

அன்னுபிடேகங் கொள்பர சமையர் மடத்துக்
காயிரங்கோட்டை நெல்லையன்பா யளந்தார்
தென்னரும் ராசைநகர் கருவைநகரெனும்பல்
தேவாலயங்களுக்குஞ் சேர்நெல் லளந்தார். (5)

—o—

மூத்தபள்ளிமுறையீடு.

கலிப்பா.

அரியயனைம் பூதமெல்லா மழிந்தாலு மழியாத
சருவமய நிராலம்ப சைதன்ய மானசுயம்
பொருவிசுவ கருமாவென் றுரைக்குமவ ரைப்பணிந்தே
யுருவிளங்கு மூத்தபள்ளி யோதுகின்றாண் முறையீடே.

சிந்து.

பட்டுரவிக்கை யிளையபள்ளி கொங்கைமே னினைவாய்
எட்டுமரக் காலளந்தா லேமென்று சொல்வான்.
மொட்டைமரக் காலெனக்கு முக்குறுணி போடுமுன்னே
இட்டமின்றி நாலுமரக்கா லென்று சொல்வான்.
குட்டையி லவனையடித் திட்டபொழு தென்னிடத்திற்
கூறியசொல் விட்டுவன் கொடுமை செய்கின்றான்.
சிட்டரென வும்பரவி யெட்டுத்திசையும் புகழுந்
தெய்வ கம்மியர்க் கமைந்தபண்ணைக் காரரே.

இவ்வுறுப்புக்கவிப்பாவில், அரி, அயன், பஞ்சபூதங்கள் எல்லாம் அழிந்தாலும், விஸ்வகர்ம்மாவானவர் அழியாது சர்வமயமாயும், நிராலப்ப சைதன்யமாயும், சுயம்புவாயும் விளங்குகின்றார் என்றதற்காதாரம்.

ஸ்காந்தம் நாகரகாண்டம் முதலாவது அத்யாயம்.
77, 78-வது சுலோகங்கள்.

ப்ரவக்ஷ்யாமி ஜகத்ஸ்ருஷ்டே
ச்ருணுஷ்வாவஹிதோ பவ ।
நபூமிர்ந ஜலஞ்சைவ
நதேஜோ நச வாயவ꞉ ॥
நசாகாசம் நச ப்ரஹ்மா
நவிஷ்ணுர்நசிவச்சைவ ।
ஸர்வசூன்யே நிராலம்பே
விஶ்வகர்மா ஜகத்ப்ரபு꞉ ॥

ப்ரவக்ஷ்யாமிஜகத்ஸ்ருஷ்டிதெ
ச்ருணுவ்ஷ்வாவஹிதாபவ
நபூமிர்நஜலஞ்சைவ
நதேஜோநசவாயவஹ.
நசாகாசம்நசப்ரம்ஹ
நவிஷ்ணுரிக்ஷமேவச
ஸர்வசூன்யோநிராலம்போ
விச்வகர்மாஜகத்குரு:

பள்ளிகளொருவர்க்கொருவ்ரேசல்.

கலிப்பா.

இந்தவித மூத்தபள்ளி யியம்புகையி லிளையபள்ளி
வந்தவளைத் தானிகழ மணங்கமழு மதுநளினத்
தந்தமலர்க் கண்ணுள ரானகண்ணு ளர்க்கமைந்த
கந்தவயற் கடைசியர்கள் கழறுகின்ற ரேசலரோ.

சிந்து.

தெந்தனஞ் செய்யவோ வென்னையவனுக்கு மணஞ்
செய்தாய் தெரியுமென்று ளிளையபள்ளி
அந்தவிழி யிந்தவிழி போலிரண்டு பேரிருக்க
அருட்கண் ணுனக்கென் றளேமூத்த பள்ளி.
அருமை பெறுமையின்றி மூத்தவ ளிளையவள் சொல்
லாங்கார வார்த்தையைக் கண்டங்கனை மார்கள்
இருவரை யேசிநின்று மீதொரு தாய்மகள்
ஏசலல்ல மற்றையதோ ரேச வென்றரே.
பண்ணைவேலை பார்க்கின்ற பண்ணைக்காரனுஞ் சினந்து
பாவையரிடத்தில் வந்துபண்புஞ் சொல்லுவான்
வண்ணமுலை மாதர்களேவாக்கு வாதம்வேண்டா மென்று
மனமகிழநட்பை யுற்றுவாழ்க வைத்தானே.

நெல்லைக் களஞ்சியத்திற் சேர்த்தல்.

கலிப்பா.

உளஞ்சிறந்த மதிப்பமைந்தங் கொளிர்வைர முதன்மணிசேர்
தளஞ்சிறந்த மணிமாடம் பல்லூழி சார்ந்திலங்கும்
வளஞ்சிறந்த மாந்தைநகர் மகிழ்ந்தாளுங் கம்மாளர்
களஞ்சியத்திற் பட்டடையிற் கனநெல்லைச் சேர்த்தாரே.

சிந்து.

கந்தம்பரவு மாளூர்நிறைய கடவுளருள் நெற்குவியல்போற்
களஞ்சியங்களு மேன்மாடங்களுங் கனகப்பட்டை வரிசையும்
சந்தம்பரவ நிறையப்பற்பல தங்கமயநெற் குவித்துமே
தருமக்கம்மிய ருபயகமல சரணமலரைப் பணிந்துமே.
கொந்துலவிய கணக்கரளவில் கோடிக்கலநெல் வாவென்றார்
கூறும்போது சன்மானம்பல கொடுத்தங்கவரை விடுத்தபின்
இந்தவுல கெலாந்திகழ் விசுவேசரைப் பரசமையரை
இறைஞ்சியிட்ட வைசுவரியமிக வெய்திவாழ்ந் திருந்தார்களே.

சோபனஞ்சொல்லல்.

கலிப்பா.

அந்தரமார் நான்முகனு மரும்புலவர் மிகப்புகழ்ந்து
தந்தரமாம் பெருமையைச்சந் ததம்புகல்கண் ணாளர்முன்னே
கந்தரமாம் பூங்குழலின் கரும்பரமா மொழிவிழிசேர்
சுந்தரமாங் கல்யமின்னார் சொல்கின்றார் சோபனமே.

சோபனம்.

சோபனமடி சோபனமடி
ஆச்சிப்பெண்காள் சோபனம்
துரியமய பராபரத்தையுந்
துதித்துக்கூறுங்கள் சோபனம்
சோபனமடி சோபனமடி. 1

எந்தவுலகும் நிறைந்தொளிர்விசு
வேசுவரர்க்குஞ் சோபனம்

விந்தைபரவு வரந்தரும்விசு
வேசுவரிக்குஞ் சோபனம்
சோபனமடி சோபனமடி 2

காஞ்சியம்பதி யேகாம்பரரைக்
கருதிப்புகல்மின் சோபனம்
வாஞ்சைநிறைந்த காமாட்சியம்மை
மலர்ப்பதத்துக்குஞ் சோபனம்
சோபனமடி சோபனமடி. 3

எத்திக்கும்பணிந் தேத்துமைங்கரன்
இருபதத்துக்குஞ் சோபனம்
முத்துக்குமர னென்றசண்முகன்
முளரியடிக்குஞ் சோபனம்
சோபனமடி சோபனமடி. 4

பேரிலங்கிரும் புவனஞ்செய்வினை
பெருமனுவுக்குஞ் சோபனம்
தாருவிளங்குஞ் சிருட்டிபுரியுந்
தபதியருக்குஞ் சோபனம்
சோபனமடி சோபனமடி. 5

அகமிகமகிழ் தாப்பிரவினை
யமைகன்னார்க்குஞ் சோபனம்
சிகரிநன்னகர் தேவாலயங்கள்
செயுஞ்சிற்பியர்க்குஞ் சோபனம்
சோபனமடி சோபனமடி. 6

மக்கண்மாட்சி மனைவியெனத்தம்
மாங்கல்லிய முத்திரையருள்
அக்கசாலைத் தலைவரான
அவர்தட்டார்க்குஞ் சோபனம்
சோபனமடி சோபனமடி. 7

சிற்பரனெனவுலகம் படைக்குந்
தெய்வத்தச்சற்குஞ் சோபனம்

நற்சிதம்பர தாண்டவ மது
ரகவிஞனுக்குஞ் சோபனம்
சோபனமடி சோபனமடி 8

பரவுதிருநெல் வேலியாளும்
பரசமயர்க்குஞ் சோபனம்
கருவைநகரம் பால்வண்ணரிரு
கழன்மலருக்குஞ் சோபனம்
சோபனமடி சோபனமடி. 9

இச்சகமகிழ் மாந்தைப்பள்ளேனும்
இந்தநூ லெங்கும்பரவவே
அச்சிற்பதிப்பித் தருள்விசுவசங்
கரலிங்கத்துக்குஞ் சோபனம்.

இச்சோபனச்சிந்து இந்நூலையச்சிற் பதிப்பித்த பிரம்மஸ்ரீ ஆ, சங்கரலிங்கபாரதியவர்கள் இயற்றியது.

உழத்திப்பாட்டு முற்றிற்று.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
I	6	ஈரா	ஈரு
II	1	ராம	இராம
	3	ராம	இராம
	30	அறிய	அரிய
VIII	3	நல்லுழ	நல்லூழ
XIV	1	வீரு	லீரு
10	27	ஸ்யாஊவ	ஸ்யாவஊ
11	3	தாயிப	தாபயி
20	21	குங	குங்
21	13	வும்பரி	வும்புரி
23	2	சிலர்	சிலா
26	17	வாஊெகெஶ்ரூ	வாஊகெபெஶ்ரூ
42	22	ஈற்றிசை	ஈற்றசை
47	23	ஸ்ருஷ்டி	ஶ்ருஷ்டி
	25	ஸ்ருஷ்டி	ஶ்ருஷ்டி
58	27	இணைய	இணைய
67	25	இவண்	இவன்
76	15	புரியு	பரியு

ஓர் விஞ்ஞாபனம்.

இதனுல் சகலருக்கும் தேரிவித்துக்கோள்வது யாதேனின்:—

இப்பிரபந்தமானது என்பேருக்கு ரிஜிஸ்தர் செய்திருக்கிறபடியால் இப்புத்தகத்தை என்னைத்தவிர வேறொருவரும் அச்சிடக்கூடாது என்றும் அப்படியாராவது அச்சிட்டால் அதனாலுண்டாகும் நஷ்டங்களுக்குப் பாத்தியப் பட்டவர்களாவார்கள் என்பதையும் இதன் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்ஙனம்

ஆ. சங்கரலிங்க பாரதியார்.

சேற்றூர் சமஸ்தானம்.

இப்புத்தகம் கிடைக்குமிடங்கள்:—

ஆ. சங்கரலிங்கபாரதியார்,
மேட்டுப்பட்டி, சேற்றூர் சமஸ்தானம்,
ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா,
இராமனுதபுரம் ஜில்லா.

அ. ரா. சதாசிவ உபாத்தியாயர்,
நாகேஸ்வரஸ்வாமிகோவில் தெற்குவீதி,
கும்பகோணம்.

A. S. கைலாச ஆச்சாரியார்,
கீழக்கருணக்கோல்லைத்தெரு,
கும்பகோணம்.

அ. வெங்கடாசல ஆச்சாரியார்,
வேப்பத்தூர்,
திருவிடைமருதூர் போஸ்டு.

வே. வெ. சுப்பிரமணிய ஆச்சாரியார்,
நாகேஸ்வரர் தெற்குவீதி,
கும்பகோணம்.